
கோகுலம்

Gokulam

ஏப்ரல் 83 · ரூ 2





அன்புள்ள சிறுவர் சிறுமியர்க்கு,

உங்களுக்கெல்லாம் எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

''என்ன இது! திடீரென்று வாழ்த்துக் கூறுகிறீர்களே! எதற்காக?'' என்றுதானே கேட்கிறீர்கள்?

தண்ணீர்ப் பஞ்சத்தால், பின்னால் நடக்க வேண்டிய தேர்வுகளை முன்கூட்டியே நடத்தி விட்டார்கள். அதனால், நீங்களெல்லாம் முழு மூச்சாகப் படித்துத் தேர்வுகளை எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தேர்வுகளை எழுதிய அனைவரும் நல்ல மதிப்பெண்களைப் பெற்று, வெற்றி பெறுவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் இப்போதே வாழ்த்துக் கூறுகிறோம்!

'பாதி—பாதி' போட்டிக்கு நூற்றுக் கணக்கானவர்கள் எழுதி அனுப்பி யிருக்கிறார்கள். அதன் முடிவை இந்த இதழிலே வெளியிட முயன்றோம்; முடியவில்லை. தொடர்ந்து விடைகளைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அடுத்த இதழில் வெற்றி பெற்றோர் பெயர்களை அவசியம் அறிவிப்போம்.


கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேர இதுவரை 2500க்கு மேற்பட்டவர்கள் மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். உறுப்பினர் அட்டைகளைக் கூடியவரை தாமதமில்லாமல் அனுப்பி வருகிறோம். எப்படியும் மனு அனுப்பிய ஒரு மாதத்துக்குள் அட்டை வந்து சேர்ந்துவிடும்.

''கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேர்ந்தவர்களுக்கு வயது 15 ஆகிவிட்டால், அவர்களை உறுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கிவிடுவீர்களா?'' என்று கேட்டுப் பலர் எழுதியிருக்கிறார்கள். ஒரு முறை உறுப்பினராகி விட்டால், அவர்கள் தொடர்ந்து உறுப்பினராகவே இருப்பார்கள். பட்டியலில் இருந்து நீக்க மாட்டோம்.

கோ. சி. ச. உறுப்பினர்களுக்காகவே, 'பிருந்தாவனம்' பகுதியை இந்த இதழில் தொடங்கி யிருக்கிறோம். இந்தப் பகுதிக்கு மிகவும் சுவையான பல விஷயங்களை உறுப்பினர்கள் அனுப்பி யிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி. ஆயினும், ஒருசிலர், அளவுக்கு மிஞ்சிய ஆர்வத்தில், பிறர் ஏற்கெனவே எழுதியவற்றைக் காப்பி அடித்து அனுப்பி விடுகிறார்கள்! இதனால் அவர்களுக்குக் கெட்ட பெயர்தான் ஏற்படும். இனியாவது, எவருமே அப்படிச் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

அழ. வள்ளியப்பா
கௌரவ ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்



கோகுலம்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா


மலர்—1 இதழ்—3
1983 ஏப்ரல் மாத இதழ்

உள்ளே உள்ளவை

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

கோகுலம்
கிண்டி, சென்னை-600 032

லலிதாசெல்லப்பா • பரந்தாமன் • சாயபு மரைக்காயர் • தீ.வி. அரிகிருஷ்ணன் • ராதாகிருஷ்ணன்







தா வெங்கடராமன் • புலேந்திரன் • வீர சிவராமன் • தேனி முருகேசன் • மா. பாண்டியன்

அட்டைப் படம்:

என்னைக் கொஞ்சம் பாருங்கள்;
இனிய முகத்தைக் காட்டுங்கள்;
புன் சிரிப்புச் சிரியுங்கள்.
பிடிப்பேன் உடனே, புகைப்படம்!

வண்ணப்படம்: சரஸ்வதி சத்தியமூர்த்தி




எதையும் அவசரப்பட்டு செய்யாதே!



ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்


குழந்தைகள் தங்களுடைய காரியங்களைச் செய்யும்போது ஒவ்வொரு காரியத்தையும் ஆலோசித்து, அவசரப்படாமல் — நிதானமாகச் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஆலோசிக்காமல் அவசரப்பட்டுச் செய்வதனால் பலவித தீமைகள் ஏற்படும்.

ஒரு சமயம் தசரத மகாராஜா வேட்டையாடக் காட்டுக்குச் சென்றார். அப்பொழுது தசரதனுக்குத் தாகம் ஏற்பட்டது. காட்டில் ஓர் ஆசிரமம் இருந்தது. அதில் ஒரு முனி தம்பதி இருந்தார்கள். அதற்கு எதிர்வசத்தில் ஒரு குளம் இருப்பது தென்பட்டது. தாகமாக அவ்விடம் வந்த தசரதன் அந்தக் குளத்தின் மறு கரையில் 'குடு குடு' என்று ஒரு சப்தம் உண்டாவதைக் கேட்டார். அதைக் கேட்ட தசரதன் ஏதோ ஒரு யானை தண்ணீர் குடிக்கும் சப்தம் என்று நினைத்துக் கொண்டு, நேராகப் பார்க்காமலும், ஆலோசிக்காமலும், அவசரப்பட்டுக் கொண்டு அம்பை எடுத்துச் சப்தம் வந்த திக்கை நோக்கி எய்தார். அந்த அம்பானது



தண்ணீர் மொண்டு கொண்டிருந்த பையன் மேல் பட்டு, பையன் துடி துடித்துப் போய் அலறி விழுந்துவிட்டான்.

தசரதன் மறு கரைக்குப் போய்ப் பார்த்தால், ஒரு பையன் முனு முனுக்கும் சப்தம் கேட்டது. அவனை நெருங்கிக் கேட்டபோது, அவன் அழுதுகொண்டே "என் தாய் தந்தையர் இருவரும் கண்ணில்லாதவர்கள். அவர்கள் தாகம் தணிக்கத் தண்ணீர் எடுத்துப்போக வந்தேன். இப்பொழுது அம்பு பட்டு மரணத் தருவாயில் இருக்கிறேன். இனிமேல் தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய்ய யார் இருக்கிறார்கள்?" என்று கூறி வருந்தினன். இதைக்



கேட்ட தசரத மன்னர் மனம் மிகவும் வருந்தி, "அவசரப்பட்டுச் செய்துவிட்டோமே! நேராகப் பார்க்காமல் செய்து விட்டோமே! ஆலோசிக்காமல் செய்து விட்டோமே!" என்று மனம் குமுறினர்.

பிறகு ஜலத்தையும் அந்தப் பையனையும் தூக்கிக் கொண்டு ரிஷி தம்பதிகள் இருந்த ஆசிரமத்துக்கு வந்து, அவர்களிடம் தண்ணீரைக் கொடுத்துப் பையனைக் கொண்டுவந்த விவரத்தையும் தான் யார், நடந்த விவரம் என்ன, பையன் மரித்த விவரம் — அதற்குக் காரணமான தன்னுடைய தவற்றையும் விவரமாக விளக்கினர். அப்பொழுது ரிஷி தம்பதிகள் மிகவும் வேதனை அடைந்தார்கள். புத்திரன் மரித்ததை அறிந்து, கண்ணால் பார்க்க முடியாமல் புத்திர சோகம் ஒருபுறமும், இனி பணிவிடை செய்ய நமக்கு யார் இருக்கிறார்கள் என்ற துக்கம் ஒருபுறமும் மிகுந்த கவலைக்குள்ளாக்கியது.

இந்த நிலையில் அவர்கள் என்ன பேச வேண்டும் என்பதைக் கூட அறியாமல், துன்பத்தின் மிகுதியால் அவசரப்பட்டுச் சில கடுசொற்களைச் சொன்னார்கள். "எனக்குப் புத்திரன் மரித்ததால் எவ்விதம் இத்தனை கஷ்டங்கள் வந்திருக்கின்றனவோ, அதேபோல் உனக்கும் புத்திரனாலேயே துன்பம் வரட்டும்" என்று புலம்பினர். அந்தத் துன்பத்தின் புலம்பலே பிற்காலத்தில் இராமபிரான் காட்டுக்குச்சென்ற பின், தசரதனுடைய மரணத்துக்கு ஏதுவாயிற்று.

ஆகவே, யாவரும் அவசரப்பட்டு ஆலோசிக்காமல் எந்தச் சொல்லும், செயலும் கூடாது.



நாடோடிப் பாடல்

முந்தி முந்தி விநாயகரே!

முந்தி முந்தி விநாயகரே,
முக்கண்ணனார் புத்திரரே!
கந்தனுக்கு முன் பிறந்த
கணபதியே முன்வருவாய்.
வேலனுக்கு முன் பிறந்த
விநாயகரே முன் வருவாய்.
சப்பாணிப் பிள்ளையாரே,
பொற்பாதம் நான் மறவேன்.
பேழை வயிற்றோனே
பெருச்சாளி வாகனனே!
வாராய் அமுது செய்ய
வழியோரப் பிள்ளையாரே.
கூடி அமுது செய்யும்
குளக்கரைப் பிள்ளையாரே!
பிள்ளையாரை நான் பாடப்
பிழைகள் ஒன்றும் வாரதில்லை.
கணபதியை நான் பாடக்
கவலை ஒன்றும் வாரதில்லை.

சரஸ்வதி பாட்டு

வாணி சரஸ்வதியே — என்
வாக்கில் குடி இரம்மா.
நாவில் குடியிருந்து — எனக்கு
நல்லோசை தாருமம்மா.
குரலில் குடியிருந்து — எனக்குக்
கொஞ்சு தமிழ் தாருமம்மா.

எங்கே போனது?

கும்பகோணமே கோணம்
குறவன் நட்டதே சோளம்
ஸ்ரீராமர் விட்டதே பாணம்
அது எங்கே போனதோ காணோம்!

சின்னச் சின்ன மூக்குத்தி


சின்னச் சின்ன மூக்குத்தி
சின்னப்பன் இட்ட மூக்குத்தி
அத்தை இட்ட மூக்குத்தி
அரைப் பணத்து மூக்குத்தி
கண்டெடுத்த மூக்குத்தி
கால் பணத்து மூக்குத்தி

சீதை ராமர் கல்யாணம்

சீதைக்கும் ராமருக்கும்
சீரான கல்யாணம்
காசி விசிறி வரும்
கல்யாண ராமருக்கு
சீர்காழி மேளம் வரும்
சிதம்பரத்து மாலை வரும்
சத்திரமாம் சாவடியாம்
தங்கத்தால் கூடாரமாம்

கோமாளிப் பாட்டு

திருப்பதிக்குப் போய் வந்தேன்,
நாராயணா!
திருமொட்டை அடிக்க வந்தேன்,
நாராயணா!
அங்கே ஒரு சோளக் கொல்லை,
நாராயணா!
அதிலே ஒரு கதிர் ஒடிச்சேன்,
நாராயணா!
கொல்லைக்காரன் கண்டுக்கிட்டான்,
நாராயணா!
கோலைக் கொண்டு போட்டடிச்சான்,
நாராயணா!
காலையிலே எழுந்திச்சு,
நாராயணா!





காலு கையைக் கழுவிப்பிட்டு
நாராயணா!
பட்டை நாமம் போட்டுக்கிட்டு
நாராயணா!
பழைய சோத்தைத் தின்னுப்புட்டு,
நாராயணா!
பூக்குடலை எடுத்துக்கிட்டு
நாராயணா!
பூப்பறிக்கப் போகையிலே
நாராயணா!
தோட்டக்காரன் கண்டுக்கிட்டு,
நாராயணா!
தொப்புத்தொப்புன்னுபோட்டடிச்சான்
நாராயணா!

காட்டாங்குளத்து அன்னி!

காட்டாங்குளத்து அன்னி
கஞ்சி குடிப்பாளாம்.
கண்ணாடி பார்ப்பாளாம்
ஆட்டுத் தலைபோல்
அள்ளி முடிப்பாளாம்.
ஆவரம் பூப்போல
மஞ்சள் குளிப்பாளாம்.

சும்மா இருக்கிற சிட்டுக்குருவி

சும்மா இருக்கிற சிட்டுக்குருவிக்குச்
சோத்தைப் போடுவானேன்? — அது
கொண்டையைக் கொண்டையை
ஆட்டிக்கிட்டு
கொத்த வருவானேன்?

சாமி வந்தது!

சம்பா நெல்லு ஆக்கி வச்சேன்
சாமி வரல்லே.
சரிகை வேட்டி எடுத்து வச்சேன்,
சாலி வரல்லே.
படையல் வச்சேன்,வடையைச்சுட்டேன்
சாமி வரல்லே.
பத்துத் தேங்காய் உடைச்சு வச்சேன்
சாமி வரல்லே.
சாம்பிராணித் தூபம் போட்டேன்
சாமி வரல்லே.
குட்டிக் கிடா பிடிச்சு விட்டேன்
சாமி வரல்லே.
உடுக்கடிச்சான் பெரியசாமி
ஓடி வந்ததாம்!

மழையே இல்லையே!

மழையும் கிடையாது
மன்னனது சீமையிலே
தூறல் கிடையாது
சோழனது சீமையிலே
பயிரும் விளையாது
பறவைகளும் நாடாது.
குடிக்க ஜலம் கிடையாது
குருவிகளும் நாடாது.
தீய்ந்தன பயிர்களெல்லாம்
தேசங்கள் அத்தனையும்
காய்ந்தன மரங்களெல்லாம்
கனியும் கிடையாது.
ஏரி குளங்களிலே
இறைக்க ஜலம் கிடையாது
பூமியிலே புல்லும்
பூண்டும் கிடையாது.
எப்போ மழை பெய்யும்
எங்குகிறோம் நாங்களெல்லாம்
வருணா பகவானே
இறங்கி வர வேண்டுகிறோம்.



நாங்கள் செய்த நல்ல செயல்கள்

சிநேகிதியின் உயிரைக்காக்க உதவினேன்!

அன்று ஏப்ரல் முதல் தேதி. வகுப்புத் தோழிகளை எப்படி 'முட்டாள்' ஆக்குவது என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது என் வீட்டுக்கு வந்த உமா என்னைப் பார்த்து, ''நான் மூட்டைப் பூச்சி மருந்து சாப்பிட்டுச் சாகப் போகிறேன்'' என்றாள்.

வேடிக்கைக்குச் சொல்கிறாள் என்று நினைத்து அவளை ஏறிட்டுப் பார்த்தேன். அவள் முகம் சோகமாய் இருந்தது.

''நிஜந்தான் பொற்கொடி! சித்தியின் கொடுமை தாங்கவில்லை. அடிக்கடி என்னைத் திட்டியும் அடித்தும் துன்புறுத்துகிறாள். நான் செத்துவிட்டால் அவளுக்கு 'நிம்மதி'' என்றாள் சிநேகிதி.

நான் உடனே, ''சாவது கோழைத்தனம் உமா! ஆண்டவன் கொடுத்த உயிரை நாமாக அழிப்பது பாவம். பொறுத்துக்கொள்ள முடிகிறதா என்று சோதித்துப் பார்க்கத்தான் கடவுள் துன்பங்களைத் தருகிறார். நீ சித்தியின் கொடுமைகளை இப்போது சிரமப்பட்டுத் தாங்கிக்கொள். உன் பொறுமைக்கு விடிவு காலம் தானாகவே வரும். உன் வீட்டுக் கஷ்டத்தை மறக்கடிக்க நாங்கள் சிநேகிதிகள் இருக்கிறோம்'' என்று ஆறுதல் கூறினேன்.

சற்று நேரம் சிந்தனை செய்தாள் உமா. ''பொற்கொடி, நீ சொல்வதும் சரிதான். நான் சாகப் போவதில்லை. வைராக்கியத்தோடுபடித்து, நல்லவேலையில் அமர்ந்து, சித்தி என்னைப் பார்த்துப் பெருமையடையும்படி நடந்து கொள்வேன்'' என்றாள்.

''இந்த உறுதி மாறாதே?'' என்று நான் சந்தேகத்துடன் கேட்டேன்.

''நிச்சயம் மாறாது!'' என்று கூறி என் கையில் அடித்துச் சத்தியம் செய்தாள் உமா.

இந்தச் சம்பவம் முடிந்து மூன்று ஆண்டுகள் முடியப் போகின்றன. உமா



ஜே. கே. பொற்கொடி

இப்போதும் என்னுடன்தான் படித்துக் கொண்டிருக்கிறாள். சித்தியின் கொடுமை ஓரளவு குறைந்து விட்டது. என் வார்த்தைகள் சிநேகிதியின் உயிரைக் காக்க உதவியதை நினைத்து இப்போதும் நான் பெருமை யடைகிறேன்.

—ஜே. கே. பொற்கொடி

9-ம் வகுப்பு 'உ' பிரிவு,

அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி,

திருக்கோவிலூர்-605751

பட்டியலில் என் பெயரைப் பார்த்து மகிழ்கிறேன்!

சராசரி வருமானமுள்ள மத்தியதர குடும்பம் எங்களுடையது. வருடம்



ஜி. சதீஷ்குமார்

தோறும் ஜூன் பிறந்து விட்டால் எங்களுக்குப் பிரச்னைகளும் கூடவே பிறந்து விடும். புதிய புத்தகங்கள், புதிய யூனிபாரம் போன்ற பிரச்னைகள் பெற்றோரைக் கவலையில் ஆழ்த்தும். ஆனாலும் கூட என் மீதுள்ள அன்பு கடந்த பிரியத்தால் எனக்குப் புதிய யூனிபாரமும், புத்தம் புதிய புத்தகங்களும் என் தந்தை வாங்கித் தந்து விடுவார்.

எங்கள் தெருவில் வாழும் என்னையொத்த குழந்தைகள் என் யூனிபாரத்தையும், புதிய புத்தகங்களையும் விரிந்த கண்களுடன் பார்க்கும்போது, எனக்கு ஒரு பக்கம் பெருமையாக இருந்தாலும், கூடவே அவர்களது இயலாமையும் வறுமையும் மனத்தை உறுத்தும்.

முதல் சில ஆண்டுகளில் என் புத்தகங்களைப் பரீட்சை முடிந்து பள்ளி திறந்ததும், பழைய விலைக்கு (பாதி விலைக்கு) மற்ற மாணவர்களிடம் விற்று வந்தேன். 'படித்த புத்தகங்களை விற்பது பாவம், சரஸ்வதி தேவியை விற்பது போல' என்று என் தாய் கூறி

(—தொடர்ச்சி 10 —ம் பக்கம்)

சிறிய பொய் பெரிய சுமை!

செல்வி சிவராமன்

நாற்பதாண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி. பஸ் வசதியில்லாத காலம். பள்ளித் தோழர்கள் ஐவரும் மிக நெருங்கிய நட்புடையவர்கள். அவர்களுடைய ஊரான ஆத்தங்குடியில் சினிமாக்கொட்டகை இல்லை. சினிமாப் பார்க்கக் காரைக்குடிக்குத்தான் போகவேண்டும். அந்த ஐவரும் கட்டுச் சோற்றுச் சட்டியுடன் மூன்று ஆட்டங்கள் பார்க்க வேண்டுமென்ற ஆசையில் பகல் பன்னிரண்டு மணிக்கே காரைக்குடிக்கு நடந்தார்கள்.

அவர்கள் எண்ணப்படியே பகல் இரண்டரை மணி ஆட்டம் பார்த்து, நொறுக்குத் தீனியுடன் மாலை ஆறு மணி ஆட்டத்தில் நுழைந்தார்கள். இரண்டாவது ஆட்டம் இரவு ஒன்பதரை மணிக்கு முடிந்ததும், அந்தக் கொட்டகையிலிருந்து அடுத்த கொட்டகைக்கு ஓடுவதற்குள் ஒரு குழாய் அருகில் கட்டுச் சோற்றைக் காலி செய்துவிட்டு, அவதி அவதியாய்ச் சினிமாக் கொட்டகையைப் பத்து மணிக்குக் கைப்பற்றினார்கள். ஒரு பெரிய பயணத்தின் ஆசை நிறைவேறியது. இந்த மூன்று ஆட்டங்கள் பார்ப்பதற்கும், கடலைப் பருப்பு, முறுக்கு வாங்கித் தின்பதற்கும்தான் அவர்கள் ரொக்க இருப்பு வழிவிட்டது.

இரவு இரண்டு மணிக்குக் கொட்டகையிலிருந்து வெளியே வந்தார்கள். அந்த இருட்டில் திரும்ப ஏழு மைல் நடக்க வேண்டுமே! தூக்கமோ அசத்துகிறது. நடக்க முடியுமா? காரைக்குடி எல்லையில் ஓர் ஒட்டுத் திண்ணையில் படுத்தார்கள். விடிய ஐந்து மணிக்குக் கோழி கூவிற்றோ, இல்லையோ, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நடையைக் கட்டினார்கள். விடிவதற்குள் வழியில் உள்ள சிறுவயலுக்கு வந்து விட்டார்கள்.

ஐவரில் நாராயணன், ''இங்கே எங்க அக்கா வீடு இருக்கிறது, பார்த்துவிட்டுப் பின்னடியே வந்து விடுகிறேன், நீங்க எல்லாம் ஊருக்கு வெளியே உள்ள நல்ல தண்ணி ஊருணிக்கிட்டே நில்லுங்க'' என்று சொல்லிவிட்டு ஒரு பெரிய வீட்டிற்குள் நுழைந்து விட்டான்.

நாராயணன் வருவான் வருவான் என்று காத்திருந்த நால்வருக்கும் கண்கள் கடுத்து விட்டன. வெய்யில் ஏறிக்கொண்டு வந்தது. இன்னும் மூன்று மைல் தூரம் நடந்தாக வேண்டுமே! பசி வேறு வயிற்றைக் கிள்ள ஆரம்பித்து விட்டது!

(காரைக்குடியில் நடந்த 'கோகுலம்' அறிமுக விழாவிற்கு வந்தவர்கள் கேட்டு ரசித்த கதை)



மணி ஒன்பதாகி விட்டது! இன்னும் நாராயணன் வந்தபாடில்லே. எட்டி எட்டிப் பார்த்தனர். வெகு தொலேவில் தூக்க முடியாமல் ஒரு மூட்டையைச் சுமந்து கொண்டு நடந்து வரும் நாராயணன் தெரிந்தான். ''பலகாரம் கட்டிக் கொண்டு வருகிறான், அதான் நேரமாகி விட்டது போலும்! வரட்டும் பலகாரத்தை ஆளுக்கு ஒரு கை பார்க்கலாம்'' என்று ஆசையுடன் ஆடினர்.

அருகில் வர வர நாராயணன் சப்தம் போட ஆரம்பித்தான். ''டேய், இங்கே வாங்கடா, இதைக் கொஞ்சம் பிடியுங்கடா, கழுத்தை வலிக்கிறது, டேய், டேய்.''

''என்னடா இது மூட்டை?'' என்று கேட்டான் சிதம்பரம்.

அழமாட்டாத குறையாக நாராயணன் சொன்னான், ''என் அக்கா வீட்டுக்குப் போனேனு, எங்க அக்காளுக்கு ஒரே ஆச்சரியம். 'நீ வருவதாக அம்மா ஒன்றும் சொல்லலியே!' என்ருள். நான் பெருமையாக 'நாங்கள் அஞ்சு பேரு நேற்றுப் புறப்பட்டுக் காரைக்குடி போய் சினிமாப் பார்த்து விட்டு இப்பத்தான் திரும்பி வரோம்; உங்களேப் பார்த்துட்டுப் போகலாம்னு நினேச்சேன், வந்தேன்' என்றேன்.

''எதிலே வந்தீங்க?'' என்று அக்கா கேட்டாங்க.

'' 'நடந்து வந்தோம்னு' சொன்னு நல்லா இருக்காது, கோபித்துக்கொள்வாங்க' என்று கெட்டிக்காரத்தனமாக 'வண்டியிலே வந்தோம், நான் இறங்கிக்கினு, வண்டியை மெதுவா 'ஓட்டிக்கிட்டுப் போங்க, நான் வந்திடுறேன்'னு சொல்லிவிட்டு வந்தேன்' '' என்றேன்,

அக்காளுக்குச் சந்தோஷம் தாங்கலே; பல் தேய்க்கச் சொன்னுங்க, பலகாரம் சாப்பிடச் சொன்னுங்க, சாப்பிட்டேன். 'நான் போயிட்டு வர்ரேன் அக்கா' என்று சொல்லிப் புறப்பட்டேன். அக்கா உடனே, 'வண்டியிலே தானே போறே, அம்மாவுக்குப் பத்துப் படி பாசிப் பயறு வாங்கி வச்சிருக்கேன், இதைக் கொண்டு போய்க் கொடுத்துவிடு' என்று சொல்லி இந்தச் சாக்கு மூட்டையை அறைக்குள்ளிருந்து வெளியில் கொண்டுவந்து கொடுத்தாங்க. ஒரு ஆளேப் பிடிச்சு வண்டியிலே கொண்டு வந்து தருவதாகச் சொன்னுங்க. உடனே நான், நமது வண்டியின் வண்டவாளம் புரிந்து விடும் என்று சாதுர்யமாக 'வேண்டாம் வேண்டாம். நானே எடுத்துச் செல்கிறேன். இது என்ன ஒரு பெரிய சுமையா? என்று சொல்லிவிட்டுச் சுமந்து கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

''ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்ச தூரம் தூக்கினுல் சரியாய்ப் போய்விடும்'' என்று கூறி எங்களே ஏக்கமாகப் பார்த்தான் நாராயணன்.

''உன்னே யாருடா பொய் சொல்லச் சொன்னது? நீயே சுமந்து வா'' என்று சப்தம் போட்டான் மணி.

''இனிமேல் விளேயாட்டுக்குக் கூடப் பொய் சொல்ல மாட்டேன்'' என்ருன் நாராயணன். ''பாவம், நாம் எல்லோருமே சுமப்போம்'' என்ருன் அழகப்பன். நல்ல வெயிலில் மாற்றி மாற்றி மூட்டையைச்சுமந்து வந்து நாராயணன் வீட்டில் கொண்டு சேர்த்தார்கள்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)
வருந்துவார். 6ம் வகுப்பிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக எங்கள் பள்ளியில் உள்ள ''புக் பாங்கில்'' (பழைய புத்தக சேமிப்பு வங்கி) அவற்றை ஒப்படைத்து விடுகிறேன். புஸ்தகம் வாங்க இயலாத ஏழை எளிய மாணவர்களுக்கு அவை பள்ளி நிர்வாகத்தினரால் இலவசமாக வழங்கப் படுகிறது.

'புக் பாங்'கில் புத்தகத்தை ஒப்படைத்தோர் பட்டியலில் என் பெயரையும் பார்க்கும்பொழுது எனக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லே. இந்த நல்ல காரியத்தை கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள் அனேவரும் செய்யவேண்டும் என்பதே என் அவா.

—ஸ்ரீ சதீஷ்குமார்
த.பெ. வி. கணபதிராமன்
82-செயின்ட் மேரி தெரு,
கீழராமன்புதூர்,
நாகர்கோயில்—2

[இப்படி நல்ல செயல் செய்த சிறுவர் சிறுமியர் எத்தனேயோ பேர்கள் இருப்பார்கள். அவர்களும் எழுதி அனுப்பலாமே.
—ஆசிரியர்]

பினோக்கியோவின் சாகசங்கள்



எச். கிருஷ்ணமூர்த்தி

உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதை - 3

அந்தோனியோ ஒரு தச்சன். அவனுடைய பட்டறையில் ஒரு பழைய மரத் துண்டு கிடந்தது!. ஒரு மேசை செய்வதற்காக அதை எடுத்தான். கோடாலியால் வெட்டப் போனான்.

''என்னை அடிக்காதே'' என்று ஒரு மெல்லிய குரல் அவனைக் கெஞ்சியது. அவன் சுற்று முற்றும் பார்த்தான். அறையில் வேறு எவருமே இல்லை. ஏதோ வெறும் தோற்றம் என எண்ணினான். மறுபடியும் கோடாலியை ஓங்கினான். மரத் துண்டை வெட்டினான். ''என்னைக் காயப்படுத்தி விட்டாய். வலிக்கிறது!'' என்று அந்த மெல்லிய குரல் அழுதது.

அந்தோனியோ பயந்தான். 'சின்ன மரத் துண்டு! இது குழந்தையைப் போல் அழுகிறதே! இதென்ன மாயமா, மந்திரமா!'' என்று அதிசயித்தான். அந்த நேரத்தில் அவனுடைய நண்பன் கெப்பெத்தோ உள்ளே நுழைந்தான்.


கெப்பெத்தோவுக்குக் குழந்தை இல்லை. அவன் ஏழை. அவனுக்கு ஒரு மரத் துண்டு தேவைப்பட்டது. மரத்தால் ஒரு பொம்மை செய்ய விரும்பினான். ஒரு சிறுவனைப் போல் பொம்மை செய்து அதைக் கொண்டு பல விளையாட்டுக்களைச் செய்து காட்டலாம் என்பது அவன் எண்ணம். அதை வைத்து நாலு காசு சம்பாதிக்க அவன் நினைத்தான். அதற்காகத் தன் நண்பனிடம் மரம் கேட்டான். அந்தோனியோ தன் கையிலிருந்த மரத் துண்டைச் சந்தோஷமாகக் கொடுத்தான். கெப்பெத்தோ நன்றியோடு அதை வாங்கிக்கொண்டு வீடு சென்றான்.

கெப்பெத்தோ முழுக் கவனத்தையும் செலுத்தி அந்த மரத் துண்டிலிருந்து ஒரு பொம்மையைச் செதுக்கினான். அந்தப் பொம்மைக்கு 'பினோக்கியோ' என்று பெயர் வைத்தான். தலைமுடி, நெற்றி, கண்கள் — இப்படி ஒவ்வொரு உறுப்பாகச் செய்து வந்தான். பினோக்கியோ ரொம்ப அவசரப்பட்டான். கண்களைச் செதுக்கி முடிப்பதற்குள் விழிகளை உருட்டி அப்பாவைப் பார்த்தான். மூக்கை வெட்ட வெட்ட அது அதிகப்பிரசங்கித்தனமாக நீண்டு வளர்ந்தது. உதடுகளைச் செய்வதற்குள் பினோக்கியோ வாய் திறந்து கலகலவென்று சிரித்தான். கையைச் செய்து முடிப்பதற்குள் அவன் அப்பாவின் தலைமுடியைப் பிடித்து இழுத்தான். கால்களும், பாதங்களும் உருவாயின. உடனே காலால் எட்டி உதைத்து, அப்பாவின் மூக்கைப் பதம் பார்த்தான். அவன் ஒரு துஷ்டப் பையனாக இருந்தாலும் கெப்பெத்தோவுக்கு அவனைப் பிடித்திருந்தது.

பினோக்கியோவின் கைகளைப் பிடித்துக் கொண்டு அடி மேல் அடி வைத்து நடக்கக் கற்றுக் கொடுத்தான் கெப்பெத்தோ. முதலில் பினோக்கியோ அறையில் சுற்றிச் சுற்றி நடந்தான். பிறகு வீட்டுக்கு வெளியே குதித்தான். தெருவில் ஓடத் தொடங்கினான்.


பினோக்கியோவைப் பிடிப்பதற்காகக் கெப்பெத்தோவும் தொடர்ந்து ஓடினான். ஒரு மரப் பொம்மை பந்தயக் குதிரையைப் போல் ஓடுவதைக் கண்டு மக்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

பினோக்கியோ ஓடிப் போய் ஒரு போலீஸ்காரர் கையில் அகப்பட்டுக் கொண்டான். போலீஸ்காரர் அவனைப்



பிடித்துக் கெப்பெத்தோவிடம் ஒப்படைத்தார்.

''ராஸ்கல். வீட்டுக்கு வா. உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்று திட்டிக்கொண்டே கெப்பெத்தோ அவனை இழுத்தான். பினுக்கியோ வர மறுத்தான். அந்தக் காட்சியை வேடிக்கை பார்க்க ஒரு கூட்டம் கூடியது. மக்கள் பினுக்கியோவுக்கு இரங்



கியும் கெப்பெத்தோவைக் கண்டித்தும் பேசினர். போலீஸ்காரர் கெப்பெத்தோவைப் பிடித்துச் சென்றூர்.

பினுக்கியோ வீடு திரும்பினுன். கதவைத் தாளிட்டு விட்டு நிம்மதியாகப் படுத்தான். அவனை யாரோ கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்தான். ஒரு பெரிய வெட்டுக் கிளி சுவரில் மெதுவாக ஊர்ந்தது.

''நான் பேசும் வெட்டுக்கிளி. உனக்கொரு உண்மை சொல்ல விரும்புகிறேன். பெற்றேருக்கு எதிராகப் போராடும் பிள்ளைகளும், வீட்டை விட்டு ஓடிப் போகும் பிள்ளைகளும் முன்னுக்கு வர மாட்டார்கள். வாழ்க்கையில் கஷ்டப்படுவார்கள்'' என்று சொல்லியது.

''வெட்டுக்கிளி! நீ என்ன வேண்டுமானுலும் சொல்லு. எனக்குப் படிப்பில் ஆசை இல்லை. என் மனம் விளையாட்டுக்களையே விரும்புகிறது. நாளைக் காலை வீட்டிலிருந்து ஓடப் போகிறேன். இது நிச்சயம்'' என்று பதிலளித்தான் பினுக்கியோ.

''ஐயோ, பாவம்! நீ படிக்காவிட்டால், எல்லோரும் உன்னைக் 'கழுதை' என்று கூப்பிடுவார்கள். கடைசியில் நீ ஜெயிலுக்குத்தான் போவாய்!'' என்று அனுதாபப்பட்டது வெட்டுக்கிளி.

பினுக்கியோவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அருகில் இருந்த சுத்தியை எடுத்து வெட்டுக் கிளியின் மீது வீசினுன். வெட்டுக்கிளி பறந்தது.

பினாக்கியோவுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. வீடு முழுவதும் தேடினான். சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு கோழி முட்டையைக் கண்டான். அதை எடுத்து உடைத்தான். அதிலிருந்து ஒரு சின்னக் கோழிக்குஞ்சு இறக்கைகளை விரித்துக் கொண்டு வெளியே வந்தது. பினாக்கியோவுக்கு நன்றி சொல்லி, ஜன்னல் வழியாக மறைந்தது.


இரவு நேரம். மழை கொட்டியது. புயல் வீசியது. பினாக்கியோவால் பசியைத் தாங்க முடியவில்லை. அருகில் இருந்த வீடுகளுக்குச் சென்று உணவு தரும்படி கெஞ்சினான். எல்லோரும் அவனை விரட்டி யடித்தனர். பசியோடும், ஏமாற்றத்தோடும் வீடு திரும்பினான். மழையில் நனைந்திருந்தான். குளிர் வாட்டியது. ஆகவே நெருப்புக்கு அருகில் கால்களை நீட்டிப் படுத்தான். அவனுடைய பாதங்கள் மரத்தால் ஆனவை. அவை கொஞ்சம் கொஞ்சமாக எரிந்து சாம்பலாகிவிட்டன. பினாக்கியோவுக்கு ஒன்றும் தெரியவில்லை. நன்றாகத் தூங்கி விட்டான்.

பொழுது புலர்ந்தது. கெப்பெத்தோ வீடு திரும்பிக் கதவை இடித்தான். பினாக்கியோ கதவைத் திறக்க எழுந்தான். முடியவில்லை. கீழே விழுந்தான். பொம்மைக் குறும்பு செய்கிறானே என்று கெப்பெத்தோ நினைத்தான். ஜன்னல் வழியாகக் குதித்து உள்ளே போனான். பொம்மையின் பாதங்கள் எரிந்து போனதைக் கண்டு வருத்தப்பட்டான். பொம்மை பசியால் மிகவும் களைத்துப் போயிருந்தது. கெப்பெத்தோ தனக்காகக் கொண்டு வந்திருந்த பழங்களை அவனுக்குக் கொடுத்தான்.

பசி தீர்ந்ததும் ''எனக்குப் புதிய கால்கள் வேண்டும்'' எனப் பினாக்கியோ அழ ஆரம்பித்தான். ''நன்றாக அழு. அப்போதுதான் உனக்குப் புத்தி வரும்'' என்று சொல்லி, கெப்பெத்தோ அவனைக் கவனியாதது போல இருந்தான்.

பினாக்கியோ வெகு நேரம் அழுதான். அழுது பிடிவாதம் பிடிப்பதால் பயன் இல்லை என்று தெரிந்ததும், அவன் அழுகையை நிறுத்தினான். ''இனிமேல் ஒழுங்காக இருக்கிறேன். பள்ளிக்கூடம் போகிறேன்'' என்று அப்பாவிடம் உறுதியளித்தான். உடனே கெப்பெத்தோ புதிய மரப் பாதங்களைச் செய்து அவனுக்குப் பொருத்தினான்.

''பள்ளிக்கூடம் போகச் சட்டைகள் வேண்டுமே!'' என்று பினாக்கியோ சொன்னான். கெப்பெத்தோவிடம் காசு இல்லை. அவன் வர்ணக் காகிதங்களைக்



கத்தரித்துச் சட்டை செய்தான். அதே மாதிரி மரப் பட்டையில் காலணியும், ரொட்டித் துண்டால் தொப்பியும் தயாரித்து அணிந்தான். பொம்மைக்கு எல்லா அலங்காரமும் செய்தாகி விட்டது. ஆனால், பாடப் புத்தகம் வாங்கக் காசுக்கு என்ன செய்வது? கெப்பெத்தோ யோசித்தான். அவன் ஒரு கோட்டு அணிந்திருந்தான். குளிரை லட்சியம் செய்யாமல் கோட்டை விற்றான். கிடைத்த காசுக்கு ஒரு பாடப் புத்தகம் வாங்கினான். பொம்மைக்குக் கொடுத்தான்.

புத்தகத்தை எடுத்துக் கொண்டு பினாக்கியோ பள்ளிக்கூடம் புறப்பட்டான். போகும் வழியில் அவனுக்கு ஆயிரம் கற்பனைகள் தோன்றின. ''படித்துப் பெரியவனாவேன்: நிறையச் சம்பாதிப்பேன். அப்பாவுக்கு அழகான கோட்டுகள் வாங்குவேன்'' என்று பல மனக் கோட்டைகள் கட்டினான்.

வழியில் ஒரு கட்டிடத்திலிருந்து இனிய பாட்டுக் கேட்டது. குழலும், தாளமும் கலந்த இசை பினாக்கியோவின் மனத்தைச் சுண்டி இழுத்தது. அவனுடைய கற்பனைகள் தடைப்பட்டன. கட்டிடத்தின் உள்ளே நுழைந்து பார்க்கும் ஆவல் மேலோங்கியது. அவன் மனத்தில் ''பாட்டா, பள்ளிக்கூடமா?'' என்ற போராட்டம் எழுந்தது. பாட்டு வென்றது. பள்ளிக்கூடம் தோற்றது. ''இன்றைக்குப் பாட்டைக் கேட்பேன்: நாளைக்குப் பள்ளிக்கூடம் போவேன்'' என்று சொல்லிக்கொண்டே இசை அழைத்த திசையில் போனான் பினாக்கியோ!

புகழ் பெற்ற பொம்மலாட்டக் காட்சி அங்கு நடந்து கொண்டிருந்தது. நுழைவுச் சீட்டு வாங்க அவன் கையில் காசு இல்லை. அப்பா அன்போடு வாங்கிக் கொடுத்த புத்தகம்தான் இருந்தது. கொஞ்சம் கூட யோசிக்காமல் அந்தப் புத்தகத்தை விற்றான். கிடைத்த காசுக்கு ஒரு நுழைவுச் சீட்டு வாங்கினான். சந்தோஷமாக உள்ளே சென்றான்.

பினாக்கியோ அரங்கத்திற்குள் நுழைந்ததும் மேடையில் இருந்த பொம்மைகள் எல்லாம் தங்கள் நடிப்பை நிறுத்தின. அவனை வாழ்த்தி வரவேற்றன. பினாக்கியோவைப் பெயர் சொல்லி அழைத்தன. தங்களைப் போன்ற பொம்மை, ரசிகனாக வந்த காரணத்தால் பொம்மைகளின் உற்சாகம் கட்டுக்கு அடங்கவில்லை. பொம்மலாட்டக் காட்சி தடைப்பட்டது. கூச்சல் போட்டனர்.

அந்தக் கூச்சலைக் கேட்டுப் பொம்மலாட்டக்காரன் வெளியே வந்தான். தடங்கலின் மூல காரணத்தை அறிந்தான். மிகுந்த கோபத்தோடு பினாக்கியோவைத் தீயில் போடும்படி உத்தரவிட்டான். அதைக் கேட்ட பினாக்கியோ கண்ணீர் விட்டான், கதறினான். கடைசியில் மன்னிக்கப்பட்டான். ஆனால், அந்தக் காட்சியில் நடித்த வேறொரு பொம்மையை அவனுக்குப் பதிலாக நெருப்பில் போடும்படி ஆணையிட்டான் பொம்மலாட்டக்காரன்.

''என்னைக் காப்பாற்றுவதற்காக என் நண்பனைக் கொல்லாதீர்கள். நானே சாவதற்குத் தயார்'' என்று வீராவேசத்தோடு சொன்னான் பினாக்கியோ. அவனுடைய தைரியத்தையும் பரந்த மனத்தையும் பாராட்டி இருவருக்குமே மன்னிப்பு அளித்தான் பொம்மலாட்டக்காரன். மேடையில் இருந்த பொம்மைகள் எல்லாம் இரவு முழுவதும் கைகளைத் தட்டி ஆடின: பாடின.

அடுத்த நாள் பொம்மலாட்டக்காரன் பினாக்கியோவுக்கு ஐந்து பவுன் காசுகள் பரிசாக அளித்தான். ''சீக்கிரம் அப்பாவிடம் போ'' என்று அன்போடு வழி அனுப்பினான். ''இந்தக் காசைத் தந்து முதலில் அப்பாவுக்கு ஒரு கோட்டு வாங்குவேன், பிறகு, எனக்கு ஒரு புத்தகம் வாங்குவேன். ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போவேன். இனிமேல், நல்ல பையனாக இருப்பேன்'' என்று நல்ல நல்ல தீர்மானங்களைச் செய்துகொண்டு வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான் பினாக்கியோ. வழியில் ஒரு காடு. அங்கே ஒரு சோதனை காத்திருந்தது அவனுக்கு.

ஒரு நரி, ஒரு பூனை. இரண்டும் பினாக்கியோவை எதிர்கொண்டு அழைத்தன. இனிமையாக உரையாடின. நரி நொண்டி நொண்டி நடந்தது. பூனை குருடு போலத் தட்டுத் தடுமாறியது. உண்மையிலேயே அவற்றுக்கு ஊனம் இல்லை. மற்றவர்களை ஏமாற்றவே அந்த வேஷம். பினாக்கியோவும் முதலில் நம்பினான். அவனிடம் இருந்த பவுன் காசுகளைக் கண்டதும் அவை பேராசை கொண்டன. எப்படியாவது அந்தப் பணத்தைப் பறித்துக் கொள்ள நினைத்தன. அவற்றிடமிருந்து தப்பிக்கப் பினாக்கியோ ஓட்டம் பிடித்தான். ஒரு முயலைத் துரத்தும் வேட்டை நாய்களைப்

போல அவை இரண்டும் அவனைத் துரத்தின.



நரியும் பூனையும் பாய்ந்து சென்று பினுக்கியோவைப் பிடித்தன. கூரான கத்தியைக் காட்டி, ''காசை எடு. இல்லாவிட்டால் கொன்று விடுவோம்'' என்று மிரட்டின. அவன் காசுகளை வாயில் அடக்கிக் கொண்டிருந்தான். தன்னிடம் ஒன்றும் இல்லை என்று கைகளால் ஜாடை செய்தான். கத்தியால் அவனுடைய வாயைத் திறக்க முயன்றன. பலன் இல்லை. கோபம்கொண்டு கத்தியால் அவனை இரண்டு முறை குத்தின. அவனுடைய உடம்பு வைரம் பாய்ந்த மரத்தால் ஆனது. அவனுக்கு ஒரு காயமும் ஏற்படவில்லை! கத்தி உடைந்து போயிற்று. எப்படியும் அவனைக் கொல்லுவது என்று தீர்மானித்தன. கயிற்றால் கட்டி ஒரு மரக் கிளையில் அவனைத் தொங்க விட்டு ஓடிப்போயின.

பினுக்கியோவின் உடம்பு மரக் கிளையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. ''அப்பா மட்டும் அருகில் இருந்தால் என்னைக் காப்பாற்றுவாரே! நான் அநாதையாக இறந்து போகிறேனே!'' என்று மனத்திற்குள் எண்ணிக்கொண்டான். அவனுக்குக் கண்கள் இருண்டன. மூச்சுத் திணறியது. வாய் பிளந்தது. உடம்பு விறைத்துக்கொண்டது.

• •


அந்த மரத்துக்கு அருகில் ஒரு தேவதையின் வீடு இருந்தது. அவள் நீண்டகாலமாக அங்கு வாழ்ந்து வந்தாள். அவள் தலைமுடி நீலம்; நீளம். தேவதை ஒரு சிறுமியாகக் காணப்பட்டாள். அவளுக்குக் காட்டில் இருந்த எல்லாப் பிராணிகளும், பறவைகளும் ஊழியம் செய்தன. அவள் தன்னுடைய பணியாளர்கள் சிலரை அழைத்தாள். பினுக்கியோவுக்கு உதவி செய்யும்படி பணித்தாள்.

அவர்கள் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பினுக்கியோவை விடுவித்தனர். தேவதையின் வீட்டுக்கு மெதுவாக அழைத்து வந்தனர்: உபசரித்தனர். அவனுக்கு நல்ல காய்ச்சல். தேவதை கசப்பான மருந்தும், கல்கண்டும் கொடுத்தாள். கல்கண்டைச் சாப்பிட்டான். மருந்தைச் சாப்பிட மறுத்து விட்டான். தேவதை பொறுமையாகச் சொன்னாள்: அவன் பிடிவாதமாக மறுத்து விட்டான். கசப்பு மருந்தைச் சாப்பிடுவதை விட நோயையே அனுபவிக்கலாம் என்று குதர்க்கம் பேசினான். உடனே அவனுடைய அறைக்குள் நான்கு நாய்கள் வந்தன. அவற்றின் தோளில் ஒரு சவப் பெட்டி இருந்தது. ''அது எதற்கு?'' என்று கேட்டான். ''நீ மருந்து சாப்பிடவில்லை. சீக்கிரம் சாகப் போகிறாய். உன் உடலை இதில் எடுத்துப் போவோம்'' என்று ஒரு நாய் சொல்லியது. மறு பேச்சில்லாமல் மருந்தை அவன் சாப்பிட்டான். நாய்கள் அகன்றன. அவனுக்கு உடம்பு குணமாகியது.

• • •

பினுக்கியோ தன்னுடைய முழுக் கதையையும் தேவதைக்குச் சொன்னான். ஆனால், பவுன் காசுகளைப் பற்றிப் பேசும்போது அவற்றைத் தொலைத்து விட்டேன் என்று பொய் சொன்னான். காசுகள் அவன் பையில்தான் இருந்தன. காசைப் பற்றிக் கேள்வி மேல் கேள்வி கேட்டாள் தேவதை. பொய் மேல் பொய்யாகப் பதில் சொன்னான் பினுக்கியோ. ஏற்கனவே அவனுக்கு மூக்கு நீளம். ஒவ்வொரு பொய்யைச் சொல்லும்போதும் அவனுடைய மூக்கு இன்னும் நீண்டு கொண்டே போயிற்று! அவனால் அறையை விட்டு வெளியே வரமுடியவில்லை. அவஸ்தைப்பட்டான்.

(அடுத்த இதழில் முடியும்)



வெற்றிவேல் வீரவேல்

கதை: சுகிசிவம்
படம்: ஜிஷ்ணு

3





தேவர் தலைவன் இந்திரன் இது முருகனின் திருவிளையாடல் என்பதை உணராமல், முருகனை அசுரனே என்று நினைத்துக் கோபம் கொண்டான்.
யார் இந்த அசுரன்? இப்போதே இவனைக் கொல்வேன்!
முருகனிடம் தேவர்கள் தோற்றனர். தேவர்களின் குருவான வியாழ பகவான் ஓடி வந்தார்.
பெருமானே! மன்னித்துக் காப்பாற்ற வேண்டும்.
இந்திரன் தவறுணர்ந்து பாத பூஜை செய்து வணங்கினான்.
தேவர்கள் சேனைக்கு இனி நீங்களே அதிபதி. தேவசேனாபதி! உங்கள் பாத பூஜை நடந்த இந்த இடம் 'கந்தவெற்பு' எனப் பெயர் பெற வேண்டும்.
நாரதர் ஒரு வேள்வி செய்தார். ஆட்டுக்கிடா ஒன்று வேள்வியில் வந்தது. எல்லோரையும் கொல்லப் பாய்ந்தது. தேவர்கள் பயந்து ஓடினர்.
நாரதர் தடுத்தும் பயனில்லை, திசையானையும் தேவர்களும் பயந்து ஓடினர்.
ஓடாதீர்கள்.. ஓடாதீர்கள்.. அது யாரையும் கொல்லாது.
முருகா! காப்பாற்று!



ஒரு சமயம்.. கயிலை மலை வாயிலில் முருகன் விளையாடுகிறான். பிரமன் சிவனை வணங்க வந்தார். ஆணவத்தால், சிவனும் முருகனும் ஒன்று என்பதை அவர் உணரவில்லை.
முருகனை வணங்காமல் உள்ளே சென்று திரும்பினார். அப்போது....
தேவர்கள் வேண்டுகோளை ஏற்று, ஆட்டை அடக்கி அதை வாகனமாக்கி 'அஜவாகனன்' என்று பெயர் பெற்றான் முருகன். (அஜம் என்றால் ஆடு)
ஐயா! நாங்கள்யார்? என்ன தொழில் செய்கிறீர்கள்?
என்னைத் தெரியாதா? நீ சின்னப் பிள்ளை...... நான் வேதங்கள் கரை கண்டவன், படைப்புத் தொழில் செய்பவன். நான்தான் பிரம்மா.
வேதம் கரை கண்டவரா? ஆஹா.. அப்படியானால் நீர் வேதம் சொல்லும் நான் கேட்கவேண்டுமே!
ம்.. கேட்டுக்கொள்.. ஓம்...
நிறுத்தும். ஓம் என்றீரே.. அது என்ன? அதன் பொருளை விளக்கிச் சொல்லும்.
இப்படிக் கேட்பான் என்று தெரிந்தால் ஆரம்பித்திருக்க மாட்டேனே!
அது.. அது.. அது...!
குட்டுப்பட்டான் பிரமன். முருகன் தன் மெய்க்காவலனை அழைத்தான்.
வீரபாகு! வேதத்தின் பொருள் உணராத இந்த ஆணவக்காரரைச் சிறையில் அடைத்து வை.


பிரமனுடைய படைப்புத் தொழிலை முருகனே செய்தார்.
பிரமனை சிறை மீட்க சிவபெருமானே வந்தார். வணங்கி வரவேற்றார் முருகன்.
முருகா! பிரமனைச் சிறையிலிருந்து விடுதலை செய்.
பிரணவமாம் ஓங்காரப் பொருள் தெரியாதவர். அவர் ஓர் ஆணவக் காரர். அவரை எப்படி விடுவிப்பது?
சிரித்தே சினம் கொள்கிறார் சிவன்.
ம்... விடுவிக்கிறாயா? இல்லையா?
தந்தையே! தாங்கள் ஆணையிட்டால் மீற மாட்டேன். வீரபாகு! பிரமனைச் சிறையிலிருந்து விடுதலை செய்!
வீரபாகு சென்றதும்......
அது சரி, நீ பிரணவப் பொருள் தெரியுமா என்று பிரமனை மிரட்டினையே! உனக்குத் தெரியுமோ?
ஆ!
தொடரும்



தொலைந்த புதையல்

டாப்ரிஸ் என்னும் நகரத்தில் காம்ரான் என்று ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் பாடுபட்டுப் பொருள் சேர்த்தான். தேவைக்கு அதிகமாகப் பணம் சேர்த்தான். சேர்த்த பொன்னையும், பொருளையும் யாருக்கும் தெரியாமல், ஒருநாள் இரவு ஊரின் எல்லையில் இருந்த ஒரு மரத்தடியில் புதைத்து வைத்தான்.

சிறிது நாட்கள் கழித்துப் புதைத்த பொருள் பத்திரமாக இருக்கிறதா எனப் பார்க்க நினைத்து, அந்த இடத்துக்குச் சென்று தோண்டினான். தோண்டத் தோண்ட மண்தான் வந்தது. பொருளைக் காணோம்! அவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இதை எவரிடமும் சொல்ல முடியவில்லை. யாருக்கும் தெரியாமல் புதைத்த பொருளல்லவா?

ஒரு நாள் ஷேக் யாசத் சாதிக் என்ற அறிஞரிடம் சென்று விவரத்தைக் கூறி அவரது உதவியை வேண்டினான். ''பத்து நாட்கள் கழித்து வா. அது பற்றிப் பேசுவோம்'' என்றார் அவர்.

பத்தாவது நாள் காம்ரானைக் கடைவீதியில் பார்த்தார் ஷேக். அவனிடம் ''இத்தனை நாட்களாக நீ கூறியவற்றைப் பற்றிச் சிந்தித்தேன். யார் அதைத் திருடியிருப்பார்கள் என்றே தெரியவில்லை'' என்று கூறினார்.

அப்போது அங்கு வந்த ஒரு பைத்தியக்காரன், ''உங்கள் கவலை என்ன? எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

காம்ரானுக்கு இவ்விஷயத்தைப் பைத்தியத்திடம் சொல்வதில் விருப்பமில்லை. 'பெரிய அறிஞரே கண்டு பிடிக்க முடியாததை இந்தப் பைத்தியம் கண்டு பிடித்து விடுமா?' என்று அவன் நினைத்தான். ஆனால் ஷேக், 'இந்த மாதிரிப் பைத்தியக்காரர்கள் சில சமயம் உண்மையை அறிவார்கள்' என்று எண்ணினார். எனவே, அவர் பைத்தியத்திடம் விஷயத்தைக் கூறினார்.

பைத்தியம், ''எந்த மரத்துக்கடியில் புதைத்தாய்?'' என்று காம்ரானைக்கேட்டது. அதற்கு அவன் 'இலந்தை மரத்தடியில்' என்றான். உடனே பைத்தியம், ''அப்படியானால் யாரோ மருந்துக்காக இலந்தை மரத்தின் வேரைத் தோண்டி எடுத்திருப்பார்கள். எனவே நீ இவ்வூரில் உள்ள மருத்துவர்களிடம் போய், 'யாருக்காவது இலந்தை வேரை மருந்தாகக் கொள்ளும்படி கூறினீர்களா?' என்று கேள்'' என்றது.

ஷேக் அவன் சொல்லியபடி பல மருத்துவர்களிடம் போய்க் கேட்டார். அப்போது ஒரு மருத்துவர் இருபது நாட்களுக்கு முன்பு ஒரு வியாபாரிக்கு ஆஸ்துமா நோய் இருந்ததாகவும் அவரை இலந்தை வேரை இடித்து மருந்தாகச் சாப்பிடச் சொன்னதாகவும் கூறினார்.

ஷேக் அந்த வியாபாரியிடம் சென்று, ''நீ இலந்தை வேரை மருந்தாகச் சாப்பிட்டாயா? அந்த வேரின் அடியில் இருந்த புதையல் ஓர் ஏழை உழைப்பாளிக்கு உரியது. அதை அவனிடம் கொடுத்துவிடு'' என்றார்.



அந்த வியாபாரியும் நேர்மையான வன். எனவே, அவன், ''அந்தப் புதையல் என்னிடம்தான் உள்ளது. அதில் எவ்வளவு தங்கம் வைத்திருந்தான் என்பதைச் சரியாகக் கூறினால் கொடுத்து விடுகிறேன்'' என்றான்.

காம்ரான் அதில் இருந்தவற்றைச் சரியாகச் சொன்னதும் வியாபாரி அவனிடம் கொடுத்து விட்டான். அவன் ஷேக்குக்கு நன்றி சொல்லி மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான்.

அரசரின் கவலை

முன்பு பாரசீகத்தை ஓர் அரசர் ஆண்டு வந்தார். ஒரு சமயம் அந்நாட்டில் பெரிய குழப்பம் ஏற்பட்டது. அதனால் அவர் எப்போதும், ''கிசர் மகானே, நீ எனக்குக் காட்சி கொடு'' என்று அடிக்கடி வேண்டுவார்.

கிசர் என்பவர் பக்தியுடன் அறிவாளியாகவும் வாழ்ந்து வந்தவர். அவருடைய ஆலோசனைப்படிதான் அரசர் எப்போதும் நடப்பார். அவர் இறந்த பிறகு இப்படித்தான், கிசரிடம் காட்சி தரும்படி அடிக்கடி அரசர் வேண்டுவார். கிசர் தோன்றினால் நாட்டில் உள்ள குழப்பங்கள் மறைந்து விடும் என்று எண்ணினார்.

ஒரு நாள் ஓர் ஏழை அரசரிடம் வந்து, ''நான் கிசரைக் காட்டுகிறேன். அதற்கு ஆயிரம் பொன் வேண்டும்'' என்றான். அரசரும் அவன் கேட்டதை அளித்து ''40 நாட்களுக்குள் கிசரைக் காட்டாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்'' என்றும் கூறினார்.

அவன் வீட்டிற்குச் சென்று தான் வாங்கிய கடன்களை எல்லாம் அடைத்து விட்டு, மீதி இருந்த பணத்தில் தன் குடும்பத்திற்குத் தேவையான உணவும் துணிகளும் வாங்கினான்.

நாற்பது நாட்கள் கழிந்த பிறகு அவன் அரசரிடம் வந்து, ''எனக்கு கிசர் இருக்கும் இடம் தெரியாது. சாதாரண மனிதனாகிய என்னால் எப்படிக் கிசரைக் காட்ட முடியும்? நான் கொடுக்க வேண்டிய கடன்கள் இருந்ததால் நான் பொய் சொல்லிப் பணம் கடன் வாங்கிக் கடன்களை அடைத்தேன். மீதி இருந்ததை என் மனைவி மக்களுக்குக் கொடுத்தேன். எனக்கு நீங்கள் என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று கூறினான்.

அரசர் இந்த வழக்கைத் தன் நான்கு மந்திரிகளிடம் கூறி, ''இவனுக்கு என்ன தண்டனை அளிக்கலாம்?'' என்று கேட்டார்.



முதல் மூவரும் அவன் அரசரை ஏமாற்றி விட்டதால் மிகவும் கோபப்பட்டனர். முதல் அமைச்சர், ''இவன் சதையைக் கத்திரிக் கோலால் வெட்ட வேண்டும்'' என்றார். இரண்டாம் அமைச்சரோ, ''இவனை ரொட்டி செய்யும் பெரிய பாத்திரத்தில் போட்டு எரியும் அடுப்பில் வைக்க வேண்டும்'' என்றார். மூன்றாவது அமைச்சர், ''இவனைக் கத்தியால் துண்டு துண்டமாக வெட்ட வேண்டும்'' என்றார்.

நான்காவது அமைச்சர், ''இவன் தன் ஏழைமையாலேயே இவ்வாறு தவறு செய்து விட்டான். எனவே, இவனை மன்னித்துக் கொஞ்சம் பொருளும் வழங்கினால், இவன் திருந்தி வாழ்வான்'' என்று கூறினார். இதைக் கேட்ட அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.

அரசர் ஏழையிடம், ''நீ என்ன சொல்ல விரும்புகிறாய்?'' என்று கேட்டார்.

அவன், ''அரசே, முதலில் பேசிய அமைச்சர் தையல்காரர் ஆவதற்குத் தகுதியுடையவர். ஆகவேதான் அவர் கத்தரிக்கோல் பற்றிக் கூறினார். இரண்டாவதாகப் பேசியவர் ரொட்டி தயாரிக்கத் தகுதி உடையவர். எனவேதான் அவர் என்னைப் பாத்திரத்தில் இட்டு வேகவைக்க வேண்டும் என்றார். மூன்றாம் அமைச்சரோ, கசாப்புக் கடைக்காரர் போலக் கத்தியால் வெட்ட வேண்டும் என்றார். நான்காவது அமைச்சர்தான் ஆலோசனை கூறும் நல்ல அமைச்சராகத் தெரிகிறார். அவர்தான் மக்களின் குறைகளை அறிந்து போக்கக் கூடியவர். அவரே உங்களுக்குக் கிசரைக் காட்டக் கூடியவர்'' என்று கூறினான்.

இதைக் கேட்ட அரசர் மகிழ்ந்தார். அந்த ஏழைக்குப் பொருளைக் கொடுத்தார். கிசரே நேரில் தோன்றித் தம் கவலையைத் தீர்த்ததாகக் கருதினார்.

மீன் வயிற்றில் மோதிரம்!

சல்டன் என்னும் மன்னர் ஒரு நாள் மாலையில் தன் நாட்டின் நிலைமையைக் கண்டறிய மாறுவேடத்தில் சென்றார். ஒரு ரொட்டிக் கடைக்காரன் 'எல்லாம் அல்லா செயல். அவர் நினைத்தபடி நடக்கும்' என்று சொல்வது மன்னன் காதில் விழுந்தது. 'தன்னை விட அல்லாவை உயர்வாக நினைக்கிறானே! இவனை எப்படியாவது பழி வாங்கவேண்டும்' என்று நினைத்தார்.

மாறுவேடத்தில் இருந்த அரசர், கடைக்காரனிடம் சென்று, ''என்னிடம் பணமில்லை. எனவே இந்த மோதிரத்தை வைத்துக் கொண்டு எனக்கு



ரொட்டி கொடுக்க முடியுமா?'' என்று கேட்டார். கடைக்காரனும் மோதிரத்தை வாங்கிக் கொண்டு ரொட்டியைக் கொடுத்தான்.

மன்னர் அரண்மனைக்கு வந்த பின் மாலையில் நடந்தவற்றைத் தன் அமைச்சரிடம் கூறினார். பிறகு, எப்படியாவது கடைக்காரனுக்குத் தெரியாமல் மோதிரத்தைக் கொண்டு வரச் சொன்னார். அமைச்சரும் அவ்வாறே கொண்டு வந்தார்.

பிறகு, அரசர் அந்தக் கடைக்காரனை அழைத்து வரச் செய்தார். கடைக்காரனிடம், ''அன்று என் கையில் பணமில்லாததால் மோதிரத்தைக் கொடுத்து ரொட்டி வாங்கினேன். இப்போது பணத்தைத் தந்து விடுகிறேன். மோதிரத்தைக் கொடு'' என்றார்.

அன்று மாறு வேடத்தில் அரசர் வந்தது இவனுக்கு வியப்பாக இருந்தது. அத்துடன் அந்த மோதிரம் தொலைந்து விட்டதால் அச்சமாகவும் இருந்தது. எப்படியோ அரசனிடம் மோதிரம் தொலைந்த விஷயத்தைக் கூறிவிட்டான். அரசர், ''அப்படியானால், அதற்குரிய 2000 ரூபாயைக் கொடு'' என்று கூறினார்.

கடைக்காரன் தன்னிடம் அவ்வளவு பணமில்லை என்று கூறியும் அரசர் விடவில்லை. ''10 நாட்களுக்குள் நீ மோதிரம் அல்லது பணத்துடன் வரவேண்டும். இல்லாவிட்டால் நீ கொலை செய்யப்படுவாய்'' என்று கூறினார்.

இதற்கிடையே ஒரு நாள் அரசர் வேட்டையாடச் சென்றார். அருகில் இருந்த ஆற்றில் கையை நனைத்த போது கடைக்காரனிடம் இருந்து எடுத்து வந்த மோதிரம் தண்ணீரில் விழுந்து விட்டது.

மறுநாள் காலையில் தன் வீட்டு வாசலில் ஒருவன் மீன் விற்பதைக் கடைக்காரன் கண்டான். தன் மனைவியை அழைத்து, ''அரசனின் ஆணைப்படி இன்றோ நாளையோ என்னைக் கொலை செய்து விடுவார்கள். எனவே, நீ இந்த மீனை வாங்கி இன்று சமையல் செய். சாப்பிட ஆசையாக உள்ளது'' என்றான்.

அவளும் அவ்வாறே மீனை வாங்கி அதை நறுக்கும்போது வயிற்றுப் பகுதியில் ஒரு மோதிரம் இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். உடனே தன் கணவனிடம் கொடுத்தாள். அவன் தொலைத்தானே அதே மோதிரம்தான் அது!

அதை அவன் அரசரிடம் கொண்டு போய்க் கொடுத்து, ''அல்லா என்னைக் காப்பாற்றி விட்டார்'' என்று கூறினான். அவனுடைய கடவுள் பக்தியைப் புகழ்ந்து, அரசர் அவனைத் தன் மந்திரிகளில் ஒருவராக நியமித்தார்.

கழுதையும் எருமையும்

''கழுதைக்கும் எருமைக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. அது என்ன தெரியுமா?''

''என்ன அது?''

''அவை இரண்டுமே நம்மைத் திட்ட நல்லாப் பயன்படுகின்றன''

—ஆர். ஜே. அருண்





சுத்தமான
பாலின் சுவையை
முழுமையாக உணர,
சுவையுங்கள்
Spencer's
ஸ்பென்ஸர்ஸ் மில்க்பிக்ஸ் பிஸ்கட்டுகள்
குழந்தைகள் மற்றும் பெரியவர்களால்
எல்லா நேரங்களிலும் விரும்பப்படுபவை.
இந்த பிஸ்கட்டுகளை காலை உணவுடன்
சேர்த்து சாப்பிடுங்கள். பள்ளிக்கு மற்றும்
நீங்கள் பணிபுரியும் காரியாலயத்திற்கு,
உல்லாசப் பயணம் செல்லும்போது
மற்றும் எங்கு வேண்டுமானாலும் உடன்
எடுத்துச் செல்லுங்கள்.
Spencer's
MILKBIX
ஸ்பென்ஸர்ஸ்
ஸ்பென்ஸர் & கோ. லிட்.
சென்னை மற்றும் கிளைகள்
ஸ்பென்ஸர்ஸ்
மில்க்பிக்ஸ்
சக்திதரும் பொருள் இவ்வளவு சுவைத்ததில்லை
S 3745 TAM



மார்ச் 83 மாத இதழில் வந்த நாடோடிப் பாடல்களை நான் அப்படியே மனப்பாடம் செய்து விட்டேன். அவ்வளவு அருமையாக இருந்தது.

—எஸ். சுதா, மணலூர்ப்பேட்டை

வீரச் சிறுவர்களின் வியப்புக் கதைகளைப் படித்து உண்மையிலேயே வியந்து போனேன். நாமும் இப்படிச் செய்யலாமே!

—த. பாக்கியலெட்சுமி (458) பணகுடி.

ஆச்சார்யாள் சுவாமிகள் எழுதிய 'பெரிய இடத்துப் பிள்ளை'யும் 'நாருவது இறகு'ம் படிக்க மனத்துக்குமிகவும் இதமாக இருந்தன. குழந்தைகள் பத்திரிகையிலே 'கோகுலம்' வித்தியாசமாக விளங்குகிறது.

—எஸ். கே. ஆசைத்தம்பி,
எஸ்.கே. சண்முகம், பாபநாசம்

'நாங்கள் செய்த நல்ல செயல்கள்' மாணவ—மாணவிகளிடையே சேவை உணர்வையும், பரந்த மனப்பான்மையையும் வளர்க்கும். அத்துடன், மறைந்திருக்கும் எழுத்தாற்றலையும் வளர்க்க உதவும்.

-வாஞெலிதாசன், மதுக்கூர்

உடல் நலமில்லாமல் படுத்திருந்த என் தம்பி, என் தந்தையார் வாங்கி வந்த கோகுலத்தைக் கண்டு துள்ளி எழுந்தான், உற்சாகத்தோடு! பிறகு அவன் நோய் போன இடமே தெரியவில்லை.

—ஆர். சுந்தர் (644)
விக்கிரபாண்டியம்

கோகுலம் ஒரு கைவிளக்கு என்பதில் சந்தேகமில்லை.

—க. மு. விஸ்வநாதன் (589)
கண்ணமங்கலம்

இளம் எழுத்தாளர்களை உருவாக்கும் தங்கள் உயரிய பணி போற்றுதற்குரியது.

—கு. மா. சுப்பாராஜ்,
தலைமையாசிரியர், குமாரபுரம்

'ராபின்சன் குருசோ' கதையின்முதல் பக்கத்தில் 3வது பாராவில் 1651ஆம் ஆண்டு என்பதற்குப் பதில் 1951 என்று இருக்கிறது.

'குரங்காரே' பாடலில் 2வது பாராவில் கடைசி வரியில் 'ஜோராயிருக்கும்' என்பதற்குப் பதில் 'ஜேராயிருக்கும்' என்றுள்ளது.

—கே. எஸ். ஜிக்கிரானி (184)
காளையார்கோவில்

'வீண் பெருமை வேதனை' நாடகத்தில் சோமு முரளியை விட அதிக மார்க்குகள் வாங்கிக் காட்டுகிறேன் என்று தான் சவால் விட்டான். ஆனல், ரவி எங்கிருந்து முளைத்தான், சார்? (பக்கம் 14)

—சுமதி, மதுரை

(மேலேயுள்ள இரு கடிதங்களிலும், பிழைகளைச் சுட்டிக் காட்டிய கெட்டிக்காரத் தங்கைகளுக்கு நன்றி
—ஆசிரியர்)

'ராபின்சன் குருசோ' மனிதனின் விடாமுயற்சியைச் சித்திரிக்கும் அருமையான கதை.

—கோ. ராதிகா, சென்னை-83.

சிங்காரத்தின் கேள்விகள், அறிவு வேள்வி வளர நெய்யாக இருந்து உதவுகின்றன.

—என். மோகனசுந்தரம், (46)
பொள்ளாச்சி

'கேள்வி நேரம்' மிகவும் உபயோகமான பகுதி. பொது அறிவு வளரப் பெரிதும் துணை புரிகிறது.

—வி. சீனிவாசன், திருச்சி-14

'திண்டுக்கல்லுக்கு இரண்டு டிக்கெட்.' 'நாய்ப் பிசாசு', 'சின்னக் கண்ணுவின் சுற்றுலா' — எல்லாமே அருமையான கதைகள்.

—ஹன். ஜெயராமன் (599) சேலம்-6

'வீண் பெருமை — வேதனை' நாடகத்தை மாணவர்கள் தங்கள் பள்ளி ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் நடத்திக் காட்டலாம். அத்தகைய சிறப்புடையது அது.

—எம். முகம்மது இப்ராஹிம்,
குளச்சல்

ஓர் ஓவியக் காட்சி



பிப்ரவரி மாதக் கடைசி ஞாயிறு. காலை நேரம். தில்லியில் குளிர் இன்னும் நீங்கவில்லை. நகரத்தின் பல பகுதிகளிலிருந்தும் சிறுவர்களும் சிறுமியரும் நூற்றுக் கணக்கில் வந்து குவிகின்றனர், மாடல் ஸ்கூல் திடலுக்கு! ஆனந்தமாக வருகிறார்கள். வண்ணப் பெட்டியும், பென்சிலும் கிரேயானும் கொண்டுவருகிறார்கள்.

அன்று அங்கே நடைபெறுவது ஆன் தி ஸ்பாட் (on the Spot) என்னும் உடனுக்குடன் வரையும் ஓவியப் போட்டி. இது கடந்த இருபது ஆண்டுகளாக ஒவ்வோராண்டும் தில்லி குழந்தைகள் ரசித்து ஈடுபடும் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

''எங்கள் வீட்டுத் தோட்டம்'' அல்லது ''தெருவிலே ஒரு காட்சி'', ''குடியரசு தின அணிவகுப்பு'' என்று ஏதாவது ஒரு தலைப்பிலே வரையச் சொல்வார்கள். அல்லது குழந்தைகளின் கற்பனைப்படி வரையச் சொல்வார்கள். வரையச் சொல்லி அறிவிப்புக் கொடுத்ததும், குழந்தைகள் தரையிலே வெள்ளை ஓவியத் தாளைப் பரப்பிக் கொண்டு, வரையத் தொடங்குகிறார்களே, இதுவே ஓர் ஓவியக் காட்சி!

இப்படிக் குழந்தைகளின் ஊக்கமும் தன்னம்பிக்கையும் வளரக் காரணமாக இருப்பவர் திரு சங்கர். இவர் ஓர் உலகப் புகழ் பெற்ற ஓவியர். கார்ட்டூன் என்னும் கேலிச் சித்திர ஓவியர். கேரளத்துக்காரர். நாற்பதாண்டுகளாகத் தில்லியில் இருக்கிறார்.

பாரதத்தின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேருவுடன் உரிமையுடன் பழகிய நண்பர். இருவரும் குழந்தைகளை விரும்பி நேசித்தவர்கள். குழந்தைகளை மகிழ்விக்க திரு சங்கர் ஆண்டுதோறும் குழந்தை ஓவிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். தில்லியில் நடைபெற்ற 'உடனுக்குடன் வரையும் ஓவியப் போட்டி' தவிர நாட்டில் எல்லாப் பகுதிக் குழந்தைகளுக்கும் உலகத்துக் குழந்தைகள் அனைவருக்குமான ஓவியப் போட்டிகளும் நடத்துகிறார். பாரத ஜனாதிபதி, பிரதமர் இவர்கள் பெயரில் தங்கப் பதக்கப் பரிசுகளும் தருகிறார்.

—டி. எஸ். வி.





கேள்வி நேரம்

கேள்வி கேட்பவர்: மு. சிவம், ராஜபாளையம்
பங்கு கொள்பவர்கள்: முத்துக்குமார் தங்கமாரி ஜோதி

சிவம்: அன்புள்ள முத்துக்குமார், தங்கமாரி, ஜோதி! சிங்கம் ஒரு தடவையில் எத்தனை குட்டிகள் போடும்? உங்களுக்குத் தெரியுமா?

ஜோதி: ஒன்றே ஒன்று.

சிவம்: இல்லை.

ஜோதி: 'சிங்கம் ஒரு குட்டி, பன்றி பல குட்டி' என்று ஒரு பழமொழி கூட இருக்கிறதே, அண்ணா!

சிவம்: அந்தப் பழமொழி தவறு. ஒரே ஈற்றில் சிங்கம் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் போடும். மிருகக் காட்சி சாலையில் இருக்கும் சிங்கம் நான்கு ஐந்து குட்டிகள் கூடப் போடும். உணவு தேடி அலையாமல் எந்த விதமான ஆபத்தும் இல்லாமல் இருக்கிறதல்லவா அது? அதனால் அது அதிகக் குட்டிகளைப் போடுகிறது.

சிவம்: நீங்கள் சர்க்கஸ் என்றால் ஆவலாகப் பார்க்கிறீர்கள். முதன் முதலாக சர்க்கஸ் காட்சிகளை நடத்தியவர்கள் யார் தெரியுமா?

முத்து: ஆங்கிலேயர்.

சிவம்: இல்லை.

தங்கம்: கிரேக்கர்கள்.

சிவம்: அவர்களும் இல்லை. ஜோதி! உனக்குத் தெரியுமா?

ஜோதி: தெரியவில்லையே அண்ணா.

சிவம்: ரோமானியர்கள்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சர்க்கஸ் காட்சிகளை நடத்தினார்கள். அப்போது நாம் இப்போது பார்ப்பது போல் பல்வேறு வித்தைகள் இல்லை. மல் யுத்தமும் குதிரை மேல் ஏறிச் சவாரி செய்யும் வித்தைகளுமே நடைபெற்றன. பிறகு, இங்கிலாந்தில் சர்க்கஸ் பரவியது. நம் நாட்டில் கழைக்கூத்தாடிகள் தெருக்களில் பல வித்தைகளைச் செய்து காட்டி வந்தார்கள். ஆனாலும், ஆங்கிலேயர் நம் நாட்டுக்கு வந்த பிறகுதான் நம் நாட்டிலும் சர்க்கஸ்நடத்த ஆரம்பித்தார்கள்.

இப்போது நால்வரைப் பற்றி ஒரு கேள்வி.

முத்து: நம் நால்வரைப் பற்றியா?

சிவம்: இல்லை, இல்லை. சைவ சமய ஆசார்யர்கள்நால்வர்என்கிறார்களே, அவர்கள் யார், யார் என்று தெரியுமா?

முத்து: அண்ணா! நான் சொல்கிறேன். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், அப்புறம், அப்புறம்...

தங்கம்: இன்னொருவர் பெயர் எனக்குத் தெரியும். அவர்தான் திருநாவுக்கரசர்.

சிவம்: தப்பு. அப்பரும் திருநாவுக்கரசரும் ஒருவரேதான். ஜோதி, உனக்குத் தெரியுமா?

முத்து: நானே சொல்லி விடுகிறேன். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர்.

சிவம்: சரியாகச் சொல்லி விட்டாய். ஆமாம், திருநாவுக்கரசருக்கு 'அப்பர்' என்ற பெயர் எப்படி வந்தது? உங்களில் யாருக்காவது தெரியுமா?

மூவரும்: தெரியாது அண்ணா, நீங்களே சொல்லிவிடுங்கள்.

சிவம்: சீர்காழிக்குப் போய்த் திருஞான சம்பந்தரைத் திருநாவுக்கரசர் சந்தித்தார். அப்போது திருஞான சம்பந்தர், 'அப்பரே!' என்று அவரை அழைத்தார். அது முதல் எல்லோரும் அவ்வாறே அழைத்தார்கள்.

துறைமுகங்களில், இயற்கைத் துறைமுகம், செயற்கைத் துறைமுகம் என்று இரு வகை உண்டு. சென்னைத் துறைமுகம் இயற்கைத் துறைமுகமா, செயற்கைத் துறைமுகமா?

தங்கம்: இயற்கைத் துறைமுகம்தான்.

சிவம்: இல்லை.

ஜோதி: செயற்கைத் துறைமுகம் தான்.

சிவம்: ஆண் குழந்தை இல்லையென்றால் பெண் குழந்தைதானே! இயற்கைத் துறைமுகம் இல்லை என்றேன். உடனே செயற்கைத் துறைமுகம் என்று சொல்லி விட்டாய். கெட்டிக்காரி தான்.

சரி... பறவை இனங்களில் பெண் பறவை முட்டை இட்டாலும் ஆண் பறவை, பெண் பறவை இரண்டுமே அடைகாக்கும். ஆனால், ஆண்பறவை மட்டுமே அடை காக்கும் இனம் ஒன்று உண்டு. அது எந்தப் பறவை என்று சொல்ல முடியுமா?

முத்து: மயில்.

சிவம்: இல்லை.

தங்கம்: நெருப்புக் கோழி.

சிவம்: அதுவும் இல்லை.

ஜோதி: எனக்குத் தெரியும். பெங்குவின்.

சிவம்: கரெக்ட். ஆண் பெங்குவின் எட்டு வாரங்கள் எதுவுமே சாப்பிடாமல் அடை காக்கும்.

அடுத்ததாக ஒரு கேள்வி. மக்கா, மதினா என்ற இரு நகரங்களும் எந்த எந்த நாட்டில் உள்ளன? ஏன் அவற்றைப் புண்ணிய நகரங்களாகக் கருதுகிறார்கள்?

தங்கம்: இரண்டுமே ஒரே நாட்டில்—அரேபியாவில்தான் இருக்கின்றன. நபிகள் நாயகம் பிறந்தது மக்காவில்; இறந்தது மதினாவில்.

சிவம்: தங்கமாரி! நீ மிகவும் சரியாகச் சொல்லி விட்டாய்.

ஆமையைப் பற்றி ஒரு கேள்வி. உங்கள் பதிலும் ஆமையைப் போல் மிக மிக மெதுவாக வரக் கூடாது. ஆமைக்கு எத்தனை பற்கள்?

முத்து: 32.

சிவம்: தவறு.

ஜோதி: 28.

சிவம்: ஜோதி, நீ எத்தனை என்று சொல்லப் போகிறாய்? 24 என்றா?

ஜோதி: இல்லை அண்ணா. எனக்கும் தெரியாது. நீங்களே சொல்லிவிடுங்கள்.

சிவம்: ஆமைக்குப் பற்களே இல்லை! ஆனால், அதன் தாடைகளே நன்றாகத் தடித்துப் பற்களைப் போல் உதவுகின்றன.

நான் இப்போது ஒரு தலைவரைப் பற்றிக் கேட்கப் போகிறேன். 14வது வயதிலே பள்ளிக்கூட ஆசிரியர் வேலையில் சேர்ந்தவர். பாரதத்தின் கல்வி அமைச்சராகப் பல ஆண்டுகள் இருந்தார். அவர் பெயர் என்ன?

முத்து: மௌலானா அபுல் கலாம் ஆஸாத்.

சிவம்: சபாஷ்! இவ்வளவு சரியாகச் சொல்லி விட்டாயே! சரி, உலகிலே மிகச் சிறிய கண்டம் எது? மிகப் பெரிய தீவு எது?

ஜோதி: இரண்டும் ஒன்றுதான். அது ஆஸ்திரேலியாக் கண்டம்தான்.

சிவம்: வெரி குட். சரியாகச் சொன்னாய்.... தென்னிந்தியாவில் ஒரு பெரிய தெப்பக்குளம் இருக்கிறது. அது எங்கே என்று தெரியுமா?

முத்து: வேலூரில்.

சிவம்: இல்லை.

தங்கம்: மதுரையில்.

சிவம்: தங்கமாரி சொன்னதுதான் சரி. 17ம் நூற்றாண்டில் திருமலை நாயக்க மன்னர் மதுரையிலே திருமலை மஹால் என்னும் ஒரு பெரிய அரண்மனை கட்டுவதற்கு மண் தோண்டச் செய்தார். மண் தோண்டிய இடத்தில் பெரிய பள்ளம் ஏற்பட்டது. அவர் அதைத் தெப்பக்குளமாக மாற்றி விட்டார்.

இப்போது சாலை விதிகளைப் பற்றி ஒரு கேள்வி. வலது புறம் திரும்பக் கூடாது என்பதற்குப் பலகையில் எப்படிப் படம் போட்டிருக்கிறார்கள்? வரைந்து காட்ட முடியுமா?

முத்து: சைக்கிளில் போகும்போது அடிக்கடி பார்ப்பேன். ஆனால் வரைந்து காட்டத் தெரியாதே!

சிவம்: இதோ நான் வரைந்து காட்டுகிறேன். நீ பார்த்தது சரிதானா, சொல்.



முத்து: சரிதான் அண்ணு.

சிவம்: மாடம் கியூரி என்ற பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவர் இரு முறை நோபல் பரிசு பெற்ற பெண்மணி. முதல் தடவை பௌதிகத்திற்கான நோபல் பரிசை மாடம் கியூரியும், அவர் கணவர் பியர் கியூரியும் சேர்ந்து பெற்றுர்கள். இரண்டாம் தடவை ரசாயனத்துக்கான நோபல் பரிசை மாடம் கியூரி பெற்ருர். அப்பா, அம்மாவைப் போலவே அவர்களின் மகளும், மாப்பிள்ளையும் சேர்ந்து நோபல் பரிசு பெற்ருர்கள். இவர்கள் பெயர் தெரியுமா?

மூவரும்: தெரியாது அண்ணு.

சிவம்: சரி. நானே சொல்கிறேன். மாடம் கியூரியின் மகள் பெயர் ஐரீன் கியூரி. மாப்பிள்ளையின் பெயர் ஃபூாலியோ கியூரி. செயற்கை முறையில் கதிரியக்கத்தைக் கண்டுபிடித்ததற்காக இருவருக்கும் 1935ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. சரி, கதர்த் துணி என்ருல் என்ன?

முத்து: என்னண்ணு இது, இது கூடவா தெரியாது?கையினுல் நூற்று நெய்த துணிதான் கதர்த் துணி.

சிவம்: முத்துக்குமார், நீ என்ன சொன்னுய்? கையினுல் நூற்று என்றது சரி. அப்புறம் நெய்த துணி என்ருயே, அப்படி என்ருல் என்ன?

முத்து: ஆமாண்ணு, கையினுலேயே நெய்த துணி என்றும் சொல்லியிருக்க வேண்டும்.

சிவம்: ஆமாம், கையினுலேயே நூற்றுக் கையினுலேயே நெய்த துணிதான் கதர்.... சரி, கடல் குதிரையை யாராவது பார்த்திருக்கிறீர்களா?

தங்கம்: கடல் குதிரையா! நாங்கள் நிலக் குதிரையைத்தான் பார்த்திருக்கிறேம்.

ஜோதி: நான் பார்த்ததில்லை. ஆனுலும் கேள்விப் பட்டிருக்கிறேன். அது கடலில் இருக்கும் ஒரு வகைப் பிராணி. மீன் இனத்தைச் சேர்ந்ததுதானே அண்ணு?

சிவம்: சரியாகச் சொன்னுய் ஜோதி. மீன் இனத்தைச் சேர்ந்தாலும் இது பார்ப்பதற்கு மீனைப் போல் இருக்காது. முகம் குதிரையைப் போல் இருக்கும். நிமிர்ந்து நின்றபடி நீந்தும்.

இப்போது ஒரு கவிஞரைப் பற்றிக் கேட்கப் போகிறேன். 'முத்துப்பாடல்கள்' என்ற உங்களுக்காகவே வெளிவந்துள்ள புத்தகத்தை எழுதியவர் யார்?

முத்து: பெ. தூரன்.

சிவம்: இல்லை.

ஜோதி: தேசிகவிநாயகம் பிள்ளை.

சிவம்: அவரும் இல்லை.

தங்கம்: மயிலை சிவமுத்து.

சிவம்: மிகவும் சரி. 'மாணவர் மன்றம்' என்ற மிகவும் புகழ் பெற்ற மன்றத்தை ஏற்படுத்தி அதன் தலைவராகவும் இருந்தவர் அஉர். உங்களுக்காகவே வாழ்ந்த ஒரு பெரியவர்..... Chess என்று சொல்லுகிருேமே சதுரங்கம். அது எந்த நாட்டில் முதலில் தோன்றியது?

முத்து: நம் நாட்டில்தான்.

சிவம்: கரெக்ட். கி. பி. 6ஆம் நூற்ருண்டில் நம் இந்தியாவில் தோன்றி அது பாரசீகத்திற்குப் போனது. அங்கிருந்து பல நாடுகளுக்கும் பரவி, இப்போது உலக ஆட்டம் ஆகிவிட்டது. சந்திர மண்டலத்தைப் பற்றி இப்போது கேட்கப் போகிறேன். முதன் முதலாகச் சந்திர மண்டலத்திற்குச் சென்றவர்கள் யார்? எந்த ஆண்டில் சென்ருர்கள்?

தங்கம்: அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று பேர் முதன் முதலாகச் சென்ருர்கள். வருஷம் 1972 என்று நினைக்கிறேன்.

சிவம்: நீ சொன்ன பதிலில் முன்பாதி சரியே. ஆனுல், வருஷம்தான் தவறு. வேறு யாருக்காவது தெரியுமா?... என்ன,எல்லோரும்மௌனமாகஇருக்கிறீர்களே? சரி, நானே சொல்லிவிடுகிறேன். 1969ஆம் ஆண்டில் ஜூலை மாதத்தில்தான் அவர்கள் சந்திர மண்டலம் சென்று வந்தார்கள். கடைசியாக ஒரு கேள்வி. நான்கு பேருக்கு ஒரு சமையல்காரரால் ஒரு மணி நேரத்தில் சமையல் செய்ய முடிகிறது. அதே நாலு பேருக்கு ஒரே நிமிஷத்தில் சமைக்க வேண்டுமானுல், எத்தனை சமையற்காரர்கள் வேண்டும்?

ஜோதி: அறுபது.

(முத்துவும் தங்கமும் சிரிக்கிருர்கள்.)

ஜோதி: ஏன் சிரிக்கிறீர்கள்?

முத்து: ஜோதி சொன்னது, கணக்குப்படி சரிதான். ஆனுல், சமையல் ஆகுமோ?

சிவம்: எப்படி ஆகும்? 60 பேரும் வந்து நின்ருலே ஒரு நிமிஷம் ஓடிப் போய்விடுமே! அடுப்பு எரிய வேண்டாமா? அரிசி வேகவேண்டாமா?

எல்லோரும்: ஆமாம், ஆமாம்.

[சேர்ந்து சிரிக்கிருர்கள்.]

பிருந்தாவனம்

ஒரே மாதிரியாக உள்ள தேசியக்கொடிகள்

இத்தாலி, அயர்லாந்து

டி. ஜெய்சங்கர் (391)
மதுரை-10

இந்த அம்மாள் 'ரிங்' ஆடுகிறாளா?

எனக்கு இப்போது வயது 12. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நானும் என் அப்பா அம்மாவும் சென்னைக் கடற்கரைக்குச் சென்றோம். அப்போது அங்கிருந்த சிலையைப் பார்த்த நான், ''என்னப்பா, இந்த அம்மா ரிங் விளையாடுகிறாளா?'' என்று கேட்டேன்.

''இல்லை விஜி, இது கண்ணகியின் சிலை. இவங்க கையிலே இருப்பது சிலம்பு'' என்றார்.

பிறகு, கடற்கரையில் உட்கார்ந்து காற்று வாங்கும்போது, கண்ணகி கதையைச் சுருக்கமாகச் சொன்னார் என் அப்பா.

—எஸ். பெரியாள் (விஜி-397)
கடலூர்

நாய்க் கடி

ராமு: மட்டமான நாய் பிஸ்கட்டை வாங்கி எங்க நாய்க்குப் போட்டேன். அது என் காலைக் கடிக்க வருதுடா.

சோமு: அப்படின்னா உசத்தியான பிஸ்கட்டை வாங்கிப் போடுடா.


ராமு: அப்போ என் கையைக் கடிக்குமே!

—இ. கருப்பசாமி (45)
ஸ்ரீவில்லிபுத்தூர்

வெள்ளை இரவுகள்

சோவியத் யூனியனில் லெனின்கிராட் நகரம், 'நேவா', 'ஓஹா' என்ற இரண்டு ஆறுகளின் முகத்துவாரத்தில் இருக்கிறது. இந்நகரில் ஜூலை 22 முதல் 26ஆம் தேதி வரை இரவையே காண முடியாது. 24 மணி நேரமும் வெளிச்சமாகவே இருக்கும். இந்த இரவுகளை 'வெள்ளை இரவுகள்' என்று அழைப்பார்கள். அந்த நாட்களில் தெருவிலே மக்கள் ஆடிப் பாடி மகிழ்வார்கள். இந்த அற்புதக் காட்சியைக் காணப் பல நாடுகளிலிருந்தும் மக்கள் லெனின்கிராடுக்கு வருவார்கள்.

—பா. தமிழரசி (769)
கடலூர்-1



தம்பிக்கு....

பாரி பிறந்த பாரதத்தில்
நாம் பிறந்தோம், தம்பி.
பாவம், ஏழை மக்களுக்கு
உதவி செய்வோம், தம்பி.

அண்ணல் பிறந்த நாட்டினிலே
நாம் பிறந்தோம், தம்பி
அன்பு கொண்டு அறவழியில்
அடி நடப்போம், தம்பி.

நல்ல கதைகள் பலவும் உண்டு
நமது நாட்டில் தம்பி.
நாமும் படித்து நல்வாழ்வு
வாழ வேண்டும், தம்பி.

உண்மை என்றும் நிலைக்கும் இதை
உணர்ந்து கொள்வாய், தம்பி.
உலகம் போற்ற உத்தமனாய்
வாழ வேண்டும், தம்பி.

—எஸ். மாதவன் (204)
திருச்சி-14

கண்கள் இருக்கும் இடம்

தாக்கும் மிருகங்களுக்கு (சிங்கம், புலி) கண்கள் முன் பக்கமும், தங்களைக் காத்துக் கொள்ளும் மிருகங்களுக்கு (ஆடு, முயல், மான்) கண்கள் தலையின் பக்கவாட்டிலும் இருக்கும். (என் அப்பா சொன்னார்)

—வி. உமா மகேஸ்வரி (848)
திருவண்ணாமலை

மாடி வீட்டு மாதவி

மாடி வீட்டு மாதவி
மடி நிறைய லட்டுடன்
ஓடி வந்தாள் விளையாட.
ஒருவ ருக்கும் தரவில்லை.
நாடி வந்தார் பலபேர்
நயந்து கேட்டார் சிலபேர்!
போடி போடி என்றிட்டாள்
பிட்டுப் பிட்டுத் தின்றிட்டாள்.

கோடி வீட்டுக் குண்டுமணி
குறும்புக்கார மண்டுமணி
தேடிப் பிடித்தான் ஒரு நண்டை.
தெருவில் சிறுவரைக் கண்டதுமே,
பாடித் தின்றவள் தலைமேலே
பார்த்துப் போட்டான் நண்டதனை.
ஆடிப் போனது அவள்உடலும்.
அந்தோ, லட்டுகள் உருண்டனவே!

✻ ✻ ✻

கூடி உண்ணும் சிறுவர்
கோடி நன்மை பெறுவர்!
வாடி நின்ற மாதவி
வருந்தி உணர்ந்த பாடமே!

—எஸ். அருண் (219)
பரங்கிப்பேட்டை

எப்படிச் சொன்னான்!

''என்னடா இது! அந்த மக்கு மணிப் பயல் எல்லா மாநிலப் பெயர்களையும் சரியாச் சொல்லி ஆசிரியரிடம் 'சபாஷ்' வாங்கிட்டானே!''

''அவன்தான் லாட்டரிச் சீட்டு ஏஜண்டின் மகனாயிற்றே!''

—க. கார்த்திகேயன் (363)
பொள்ளாச்சி-1

பாப்பாவுக்குப் பாரதி

மயிலாப்பூர் மாண்டிஸோரி பள்ளிக்கூடத்தின் ஆண்டுவிழா, பாரதி விழாவாகச் சமீபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 'ரத்னபாலா' பத்திரிகையின் ஆசிரியர் திரு கே. ஆர். வாசுதேவன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், ''குழந்தைகள் பாரதியாரின் பாடல்களை நன்ற



யப் படித்து அவர் கூறியுள்ள நல்ல கருத்துக்களைப் பின்பற்ற வேண்டும்.'' என்று வலியுறுத்தினர். கவிஞர் இளையவன், எழுத்தாளர் மாயூரன், புலவர் நெல்லை துரைஆகியோரும் பேசினர்கள்.

விழாவில் நடைபெற்ற பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கோகுலம் கௌரவ ஆசிரியர் பரிசுகள் வழங்கினர். அவர் பேசுகையில்,

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
—தெய்வம்
உண்மை யென்று தானறிதல்
வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் — இது
வாழும் முறைமையடி பாப்பா

என்று 'வாழும் முறை' பற்றிப் பாரதியார் பாடியுள்ள இந்த அடிகளை மறக்காமல் மனத்தில் இருத்திப் பின்பற்ற வேண்டும் என்றார்.

—ஜி. சுமன்த் (284)
சென்னை-4

மழை

சலசல வென்று பெய்கிறதே!
சத்தம் அதிகம் கேட்கிறதே!

தளதளவென்று பயிர்களுமே
தழைத்தே ஓங்கி வளர்கிறதே!

வெட வெட வென்று ஆடுகளும்
விரைந்தே ஓடிச் செல்கிறதே!

படபடவென்று இடிமுழக்கம்
பயங்கர மாகக் கேட்கிறதே!

விடுவிடு வென்று நாமெல்லாம்
விரைவாய்ச் செல்வோம் வீட்டிற்கே!

—சு. சுரேஷ் (629)
அனந்தபுரம்

புவியியல் ஆசிரியர்: என்னடா இது! நம் இந்தியா தேசப்படத்தை வரையச் சொன்னேன். வகுப்பிலே இருக்கிற எல்லாரும் சேர்ந்து ஒரே ஒரு படத்தை வரைந்திருக்கிறீர்களே!

ஒருமாணவன்: நீங்கள் தானே சார், அனைவரும் சேர்ந்து ஒன்று பட்ட இந்தியாவை உருவாக்கவேண்டும் என்றீர்கள்.

-பொன் கோ. பிரபாகரன், (366)
குகை, சேலம்-6.

முருகன் மட்டுமே ஆண்பிள்ளை

எங்கள் ஊரில் கந்தபுராணச் சொற்பொழிவு செய்த கிருபானந்த வாரியார் அவர்கள் சொன்னது:

முருகப்பெருமான் ஒருவர்தான் ஆண் பிள்ளை. உலகில் உள்ள அனைவருமே பெண்பிள்ளைகள்தான்! முருகக் கடவுள் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியதால் அவர் ஆண் பிள்ளை. நாம் எல்லாம் பெண் வயிற்றில் பிறந்ததால் பெண் பிள்ளைகள்!

—எஸ். செந்தில்நாதன் (223)
பொள்ளாச்சி-6

தாமரை — பிற பெயர்கள்

தாமரையைக் குறிக்கப் பல சொற்கள் உண்டு என்பதை சூடாமணி நிகண்டில் பார்த்தேன். அவை:

அம்புயம், அரவிந்தம், புண்டரீசம், அம்போருகம், பங்கயம், வாரிசம், குசேசயம், முளரி, இண்டை, சரோசம், நளினம், வனசம், கஞ்சம், சதபத்திரி, முண்டகம்.

—இரா. சத்தியநாராயணன்(201)
சென்னை-86

மூன்று கடிகாரங்கள்

எங்கள் வீட்டில் மூன்று கடிகாரங்கள் இருக்கின்றன. ஒரு கடிகாரம் 5 நிமி



டம் மெதுவாகச் செல்கிறது. இன்னொரு கடிகாரம் 5 நிமிடம் விரைவாகச்செல்கிறது.ஒரு கடிகாரம் ஓடவே இல்லை. இவற்றில் எந்தக் கடிகாரம் ஒரு நாளைக்கு இரு முறை சரியான நேரத்தைக் காட்டும்?

—வே. செந்தில்குமார் (65)
திருத்தணி

·ஏமபமச்ச ஷபாஞ :ாஊற

ரேடியோப் பாட்டு

சின்னச் சின்ன ரேடியோ
சிங்கார ரேடியோ
சிங்கப்பூரு மாமா
எங்களுக்குத் தந்தது.

உலகச் செய்தி யாவையும்
ஒரு நொடியில் கேட்கலாம்.
பாட்டும் கதையும் கேட்கலாம்
பாலர் நாமும் மகிழலாம்.

ரேடியோவை வாங்கித் தந்த
மாமாவுக்கும் நன்றி
ரேடியோவைக் கண்டு பிடித்த
மார்க்கோனிக்கும் நன்றி

—இரா. மணிகண்டன் (14)
கருங்காலிக்குப்பம்

இதுதான் சாவி!

பெட்டி பூட்டியிருக்கிறது. அதைத் திறந்தாக வேண்டும். கையிலே சாவிக் கொத்து ஒன்று இருக்கிறது. அதோ, அந்தச் சாவியைப் போட்டாயிற்று. அது சற்றுப் பெரிதா யிருக்கிறது. இதோ இந்தச் சாவி? இது துவாரத்தை விடச் சிறியதாயிருக்கிறது. ஒவ்வொன்ருகப் பல சாவிகளைப் போட்டாயிற்று. கடைசியில் ஒரு சாவிதான் மிஞ்சி இருந்தது. வேண்டா வெறுப்போடு அந்தச் சாவியைப் பூட்டினுள் நுழைத்தவுடன், என்ன ஆச்சரியம்! தங்கு தடையில்லை: பூட்டுத் திறந்து கொண்டது! இந்தச் சாவிக்கு வாய் இருந்தால் என்ன சொல்லும் தெரியுமா?

''உன் வாழ்க்கையிலும் கூட இப்படித்தானே! நீ செல்ல வேண்டிய பாதை பூட்டப்பட்டிருப்பதை நீ காண்கிருய். அதன் வழியாகச் சென்ருல் தான் வாழ்க்கையில் வெற்றி கிட்டும். என்னென்னவோ பிரயத்தனங்களை நீ செய்து பார்க்கிருய். தளர்ந்து சோர்ந்து போகிற நிலை வருகிறது. சோர்ந்து போகாதே. கடைசியாகப் பூட்டில் சேரும் சரியான சாவியை நிச்சயமாகக் கண்டு கொள்வாய். கொஞ்சம் சிந்தித்துப் பார். இன்னும் ஒரு சாவி மட்டும் பாக்கி இருக்கிறது. அதைப் போட்டுப் பார். வெற்றி கிடைக்கும். அதன் பெயர்தான் விடா முயற்சி.

—வி. எஸ். இனிதா (254)
சியோன்புரம்

டீக்கடைக்காரர் (டீ குடிக்க வந்த பையனைப் பார்த்து): தம்பி, நீ என்ன படிக்கிருய்?
(டீ குடித்த பிறகு கோப்பையை அந்தப் பையன் திருப்பி வைத்தான்)
டீக்கடைக்காரர்: இதற்கு என்ன அர்த்தம்?
பையன்: CUPபைத் திருப்பினுல் P.U.C.

—எல். கல்யாணி (762)
காட்டுப்புத்தூர்

உடற்பயிற்சி ஏன்?

''நமது விடுதியில் காபி போடுபவர் தினமும் உடற்பயிற்சி செய்கிருரே! காரணம் தெரியுமா?''

''தெரியாதே. ஏன்?''

''நாம் எல்லாம் 'ஸ்ட்ராங்-காபி கேட்பதனுல்தான்!''

—எல். குருசங்கர் (442)
கொரநாடு




முடியைத் தந்தோம் முகத்தைச் சொல்லுங்கள்!

தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கானவர்கள் தலைப்பாகை அணிகின்றனர். ஆயினும், முதல் படத்தைப் பார்த்ததும், நமக்கு நினைவு வருவது யாருடைய உருவம்? மகாகவி பாரதியாருடைய உருவமல்லவா?

வரலாற்றுப் புகழ் பெற்ற ஒரு சிலருடைய தலையலங்காரங்களைக் கீழ்க்கண்ட படங்களில் காணலாம். அவைகளுக்கு உரியவர்கள் யார் என கண்டு பிடியுங்கள்.



①




④




②




⑤



③



⑥




7




10



8



11




9




12

13




14



கருத்து: 'டயாஜு'
ஓவியம்: பி.வி.ஆர்

சிரிக்கச் சிரிக்க!



பலப்பம் தண்டம்!

''தாத்தா: நீங்க நேத்து வாங்கித் தந்த பலப்பம் தண்டம்.''
''ஏன் அடிக்கடி உடையுதா?''
''ஊகூம்! ஒரேயடியாக் கசக்குது!''



போலீஸ் எதற்கு?''


''ஹலோ! போலீஸ் ஸ்டேஷன் தானே! சீக்கிரம் இரண்டு போலீஸ் அக்காக்களை இங்கு அனுப்புங்க!''
''எதுக்கு?''
''என் பாடப் புத்தக அலமாரியுள் ஒரு குட்டித் தேள் புகுந்து விட்டது. அடிக்கணும்!''



அழுகையின் காரணம்

விருந்தாளி: பாவம்! குழந்தை ஏன் அழுகிறான்?''

''நீங்க வரும்போது அவனுக்காக ஏதும் வாங்கிட்டு வரலியாம்!''.



எதைப் போல எது?

''பலூனைப் போல் மாமா தலை இருக்கா? மாமா தலை போல் பலூன் இருக்கா? சொல்லுடி பார்க்கலாம்!''

கருத்து: சுதர்ஸன்—

பாட்டுப்போட்டி

ரெ.சி.தெய்வசிகாமணி

காட்சி 1

இடம்:
கோதை, முல்லை சகோதரிகளின் வீடு.

பங்கு பெறுவோர்:
அக்காள் கோதை, சிநேகிதி வேணி, அண்ணன் மாணிக்கம்

கோதை (பாடுகிறாள்): மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல, மாதவம் செய்திட வேண்டுமம்மா.

வேணி: என்ன கோதை, இன்னைக்கு என்ன ஒரு குரல்தான் கேட்குது? உன் தங்கை முல்லை எங்கே?

கோதை: பள்ளிக்கூடத்திலே யிருந்து இன்னும் வரலே வேணி. அவளும் இருந்தால் சேர்ந்து பாடிப் பழகலாம்னு நெனைச்சேன். அவ வராததாலே நான் மட்டும் பாடிக்கிட்டு இருக்கிறேன்.

வேணி: ஏன் இப்படிப் பிராணனை விட்டுப் பழகிக்கிறே? எப்படியும் வழக்கம் போல் இந்த வருஷமும் நம் பள்ளிக்கூடப் பாட்டுப் போட்டியிலே முதல் பரிசு கோதை சகோதரிகளுக்குத்தான்.

கோதை: எப்படியும் பரிசு நமக்குத் தான்னு கர்வத்தோடு இருந்தா, முயல் கதைதான் ஆகும். அதனாலே தான் முன்னாலேயே பாடிப் பார்த்துக்கிறேன். முல்லையும் கூட இருந்தால் நல்லா யிருந்திருக்கும்.

வேணி: அந்த எண்ணம் அவளுக்கும் இருக்க வேண்டாமா? அப்படி இருந்தால் இந்நேரம் உன்னைக் காக்க வைத்திருப்பாளா?

கோதை: அதோ அண்ணாகூட வருகிறாரே! அவரோடு கூட முல்லையைக் காணோமே!

மாணிக்கம்: என்ன கோதை, முல்லையைக் காணோமா? பள்ளிக்கூடத்திலே யிருந்து நீங்க ரெண்டு பேரும் ஒண்ணாத்தானே வருவீங்க?

கோதை: ஆமா அண்ணா! இன்னைக்கு எங்க வாத்தியாரம்மா ஒருத்தர் வராததாலே கடைசி வகுப்பு லீவு விட்டுட்டாங்க. அதனாலே நான் முல்லை கிட்டே பள்ளிக்கூடம் விட்டதும் உடனே வந்துடுன்னு சொல்லி விட்டு வந்துட்டேன். இன்னும் காணோம், அண்ணா.

மாணிக்கம்: பள்ளிக்கூடம் விடுகிற வரைக்கும் இருந்து முல்லையையும் கூட்டி வந்திருக்கக் கூடாதா? இப்ப எங்கே போய் அவளைத் தேடுவேன்?

வேணி: நீங்க ஏன் கவலைப்படறீங்க? முல்லை என்ன, சின்னக் குழந்தையா, வீடு தெரியாம, வீதி தெரியாம நிண்டாட. எங்கேயாவது சிநேகிதி வீட்டுக்குப்போயிருப்பா. வந்துடுவா.

கோதை: வீட்டிலே போய் அரட்டை அடிக்கிற அளவுக்குச் சிநேகிதிகள்ஒரு வரும் அவளுக்குக் கிடையாதே!

மாணிக்கம்: ஏம்மா கோதை, ஒருவேளை நம்ம பாட்டு வாத்தியாரம்மா வீட்டுக்குப் போயிருக்குமோ? எதுக்கும் நான் அங்கே பார்த்துட்டு வந்துடறேன்.

(மாணிக்கம் செல்கிறார்.)

வேணி: கோதை, உங்கிட்டே ஒரு முக்கியமான சங்கதி சொல்லத்தான் வந்தேன்.

கோதை: என்ன வேணி?

வேணி: முல்லை வகுப்பிலே படிக்கிற செல்வியை உனக்குத் தெரியுமா?

கோதை: ஓ, தெரியுமே! வருஷா வருஷம் பாட்டுப் போட்டியிலே தவறாமல் இரண்டாவது பரிசு வாங்குவாளே, அவளைத்தானே சொல்கிறே?

வேணி: ஆமா, இந்த வருஷம் பாட்டுப் போட்டியிலே எப்படியும் முதல் பரிசைத் தட்டிக் கொண்டு போய் விடுவது என்ற எண்ணத்துடன் அவ ரொம்பவும் முயற்சி செய்து வருகிறாளாம்.

கோதை: செய்யட்டும். போட்டியிலே நல்லாப் பாடி வெற்றி பெற்று அவளை யார் தடுக்கிறாங்க?

வேணி: அப்படி யிருந்தாப் பரவாயில்லையே! இந்த வருஷம் பாட்டுப் போட்டியிலே நீங்க கலந்துக்காம இருந்தா, முதல் பரிசு யாருக்குக் கிடைக்கும்?

கோதை: நாங்க போட்டியிலே கலந்துக்காமல் இருந்தால், நிச்சயம் செல்விக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும்.

வேணி: ஆஹா, இதை ஞாபகத்திலே வச்சுக்க. எப்படியாவது உங்க

ரெண்டு பேரையும் பிரிக்க வர்சுப் போட்டியிலே நீங்க கலந்துக்காத படி செய்வாள். உஷாரா இரு. முல்லையையும் உஷாராக இருக்கச் சொல்லு.

கோதை: அப்படியா?

வேணி: ஆமா. இதைச் சொல்லத் தான் வந்தேன். நேரமாச்சு. வீட்டிலே தேடுவாங்க. வரட்டுமா?

காட்சி 2


இடம்:

செல்வியின் வீடு.

பங்கு பெறுவோர்:

செல்வி, தங்கை முல்லை.

செல்வி: ஓ, மறந்து போய் விட்டேனே! பாட்டுப் போட்டிக்காகப் பாடிப் பழகிக்கிறீங்களா? போன வருஷம் நீங்க ரெண்டு பேரும் போட்டியிலே பாடின ''காயிலே புளிப்பதென்ன, கண்ணபெருமானே'', பாட்டு இன்னும் கூட என் காதிலே ரீங்காரம் செய்யுது. இப்ப நெனைச்சாக்கூட உடம்பெல்லாம் சிலிர்க்குது. ஆமா, இந்த வருஷப் போட்டியிலே என்ன பாட்டுப் பாடப் போறீங்க?



செல்வி: மணி ஆறுதானே ஆச்சு முல்லை! கொஞ்ச நேரம்தான் இருந்து போயேன்.

முல்லை: ஐயையோ! நான் உடனே போயாகணும் செல்வி. அக்கா பாட்டு ஒத்திகை பார்க்க எனக்காகக் காத்துக் கொண்டிருப்பா.

நரியாரே! நரியாரே!



நரியாரே நரியாரே
எங்கே போறீங்க? — நீங்க
உரிமையோடு செல்லுமிடம்
கொஞ்சம் சொல்லுங்க.
வம்புச்சண்டை எங்கே என்று
தேடிப் போறீரா — உங்க
தந்திரத்தி னுலேலாபம்
தேடப் போறீரா?
சுயநலமாய் வாழ்வதிலே
கெட்டிக் காரர்தான்—என்றும்
நயவஞ்சகத் திட்டத்திலே
நம்பர் ஒன்னுதான்!
நல்லநண்ப ராகஎன்றும்
வாழ வேணுங்க — நாம்
எல்லாருமே பயன்பெறவே
உழைக்க வேணுங்க!

-தேனி முருகேசன்



முல்லை: இன்னும் தெரியலை செல்வி. இன்னைக்கு வீட்டுக்குப் போனுத் தான் தெரியும்.

செல்வி: அது சரி முல்லை, நீங்க ஏன் தனித் தனியாப் பாடக் கூடாது?

முல்லை: ஆரம்பத்திலே யிருந்து சேர்ந்து பாடிக்கிட்டு வரோம். இப்ப எதுக்காக அந்த யோசனை?

செல்வி: தனித் தனியாப் பாடினு ரெண்டு பரிசு கிடைக்கும். சேர்ந்து பாடினு ஒரே ஒரு பரிசுதானே கிடைக்குது? அதுக்காகத்தான் சொன்னேன்.

முல்லை: நாங்க சேர்ந்து பாடறதாலே தான் உனக்கு ரெண்டாவது பரிசாவது கிடைக்குது.

செல்வி: என் சங்கதியை விட்டுத்தள்ளு. எனக்குப் பரிசே கிடைக்காவிட்டால் கூடப் பாதகமில்லை. ஆனு, பாவம் உன்னை நெனைக்கும்போதுதான் பரிதாபமா யிருக்குது.

முல்லை: ஏன்?

செல்வி: ஏனு? உன்னுடைய குரல் இனிமையினுல்தான் உங்களுக்குப் பரிசு கிடைக்குது. நீங்க ரெண்டு பேரும் தனித் தனியாப் பாடினு உங்க அக்கா கோதைக்கு ரெண்டாவது பரிசுதான் கிடைக்கும்.

முல்லை (கோபத்துடன்): என் எதிரே இன்னொரு தடவை அப்படிச் சொல்லாதே செல்வி.

செல்வி: ஐயையோ! நானு சொல்கிறேன். எல்லாரும் இப்படித்தான் பேசிக்கிறாங்க. உங்க அக்கா குரலை விட உன் குரல்தான் இனிமையா இருக்குதாம். அதுவுமில்லாம இன்னொரு அக்கிரமத்தைப் பார் முல்லை, பரிசு கொடுக்கும்போது என்ன சொல்லிக் கொடுக்கிறாங்க?

முல்லை: கோதை சகோதரிகளுக்குன்னு.

செல்வி: உம்... அதைத்தான் சொல்ல வந்தேன். உன்னுடைய குரல் இனிமையாலே கிடைக்கிற பரிசைக் கொடுக்கும்போது, முல்லை சகோதரிகளுக்குன்னு சொல்லிக் கொடுக்க வேண்டாமோ?

முல்லை: அதெப்படி முடியும் செல்வி! கோதை என் அக்கா. அவள்தான் எனக்கு மொத மொதல்லே பாடவே கற்றுக் கொடுத்தாள்.

செல்வி: அதுக்காக உன்னுடைய புகழையெல்லாம் அவளே அடைவதா?

முல்லை (கோபத்துடன்): இத்தனை நேரம் உன் பேச்சைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்ததே தப்பு. நான் வருகிறேன்.

செல்வி: என் பேரிலே கோபப்படாதே! உண்மையைத்தான் சொன்னேன். போகஃபோக உன் அக்கா குணத்தை நீயே நல்லாத் தெரிஞ்சுக்குவே.

முல்லை: உன்னுடைய யோசனைக்கு ரொம்ப நன்றி. நான் வரேன்.

காட்சி 3

இடம்:

கோதை, முல்லை சகோதரிகள் வீடு

பங்குபெறுவோர்:

மாணிக்கம், கோதை, முல்லை

மாணிக்கம்: கோதை! கோதை! தங்கச்சி வந்துதா?

கோதை: வரலேயே அண்ணா. நீங்க பாட்டு வாத்தியாரம்மா வீட்டுக்குப் போனீங்களே, என்ன ஆச்சு?

மாணிக்கம்: அங்கேயும் வரலேயாமே! எங்கே போயிருப்பா ?

(முல்லை வருகிறாள்)

கோதை: அதோ முல்லை வருகிறாள் அண்ணா! நேரம் கழித்து வந்ததற்காக அவளை நீங்க ஒண்ணும் கோவிச்சுக்காதீங்க.

மாணிக்கம்: என்ன முல்லை, இந்நேரம் எங்கேம்மா போயிருந்தே? உனக்காக எங்கெங்கே தேடிக்கஷ்டப்பட்டோம், தெரியுமா?

முல்லை: இல்லை, அண்ணா! என் வகுப்பிலே படிக்கிற சிநேகிதி ஒருத்தி வீட்டுக்குப் போயிருந்தேன்.

கோதை: செல்வி வீட்டுக்கா?

முல்லை: ஆமா அக்கா!

மாணிக்கம்: இனிமேல் எங்கே போறதாயிருந்தாலும் முன்னாடியே ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயிடு முல்லை.

முல்லை: இனிமே நான் ஏன் அவ வீட்டுக்குப் போறேன். பள்ளிக்கூடம் விட்டதும் பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன். ''ஐயோ பாவம், பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறியே, என் வண்டியிலே ஏறு, உன்னை வீட்டிலே கொண்டு போய் விட்டுடறேன்னு சொன்னா...

கோதை: செல்வி வீட்டுக் காரிலேயா வந்தே?


முல்லை: இல்லேயே! வண்டியிலே ஏறினதும் அவள் வீட்டுக்கு விடச் சொன்னாள். நான் எவ்வளவோ சொன்னேன். என் வீட்டுக்கு வந்து ஒரு வாய் காப்பியாவது குடிச்சாத்தான் என் மனசு கேக்கும்னு சொன்னா. போனேன். கடைசியிலே அவளுடைய அகம்பாவத்தைத்தான் காண்பிச்சா.

கோதை: உன்னை ஏதாவது அவமானப் படுத்தினாளா?

முல்லை: என்னை அவமானப்படுத்தியிருந்தாப் பரவாயில்லையே அக்கா! என் உயிரை விட மேலான உங்களை அவமானப்படுத்திட்டா. இனி உன் முகத்திலேயே விழிக்கிறதில்லைன்னு சொல்லிவிட்டு வந்திட்டேன்.

மாணிக்கம்: என்னம்மா சொன்னா, சொல்லு. போய் இப்பவே கேட்டுட்டு வந்துடறேன்.

முல்லை: அவ என்ன சொன்னான்னு மட்டும் என்னைக் கேட்காதீங்க. அது என் மனசிலேயே இருக்கட்டும்.



ஒரு பருந்து மிகப் பெரிய ஒரு முட்டையை இட்டிருக்கிறது. அது இந்த உலகளவு உள்ளது!
எந்த நாட்டில்?
நம் நாட்டில்தான்!
எந்த இடத்தில்?
(அடுத்த பக்கம் புரட்டினால் தெரிகிறது!

மாணிக்கம்: பைத்தியக்காரப் பெண்! கோதை, உங்கிட்ட ஒரு சங்கதி சொல்ல மறந்துட்டேனே! வழியிலே என் சிநேகிதன் ஒருத்தனைப் பார்த்தேன். அவன் சங்கத்திலே ஆண்டு விழா நடத்தப் போறானாம். அதிலே கடவுள் வணக்கப் பாட்டு நீங்க தான் பாடணுமாம்.

கோதை: நம்ம முல்லையை மட்டும் வேணுமானா தனியாப் பாடச்சொல்லுங்க அண்ணா.

முல்லை: நீ இல்லாம நான் மட்டும் எப்படியக்கா பாடுவேன்?

கோதை: சும்மா பயப்படாதே! நீ தனியாப் பாடினா எப்படி இருக்குதுன்னு எல்லாருக்கும் தெரிய வேண்டாமா? அதுக்குத்தான் சொன்னேன்.

காட்சி 4

இடம்:

சங்கக் கட்டடம்

பங்கு பெறுவோர்:
விழாத் தலைவர், விழா நிர்வாகிகள், கூட்டத்தினர், செல்வி, வேணி, முல்லை.

(கைதட்டல்ஒலி-ஜனங்களின்இரைச்சல்)

தலைவர்: சகோதரர்களே, எல்லோரும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்

கொள்கிறேன். நம் சங்க ஆண்டு விழாவில் கடவுள் வணக்கம் பாடிய கோதை சகோதரிகளுக்கு நம் சங்கத்தின் சார்பில் இந்த வெள்ளிக் கோப்பையைப் பரிசளிக்கிறேன்.

செல்வி: பார்த்தாயா வேணி, நான் சொன்னதற்கு என்பேரில் முல்லை எரிந்து விழுந்தாளே, இப்போது பரிசு கொடுக்கும்போது யார் பெயரைச் சொல்லிக் கொடுத்தார்கள்?

வேணி: 'கோதை சகோதரிகளுக்கு என்று.....

செல்வி: கடவுள் வணக்கம் பாடியது யாரு?

வேணி: முல்லை மட்டும்தான்.

செல்வி: பாடினவ பேரைச் சொல்லாம, பாடாதவ பேருக்குப் பரிசு கொடுக்கறாங்க.

வேணி: அவங்க என்ன பண்ணுவாங்க? அழைப்பிதழ்லே அப்படித்தான் போட்டிருக்குது. அதனாலேதான் தலைவர் அந்த மாதிரி சொல்லிவிட்டார். கொஞ்ச நேரம் பேசாம இரு. முல்லை வருகிறா.

செல்வி: வா, முல்லை! உன் பாட்டு பிரமாதம். ஆனா பாடியது நீ. புகழ் அடைந்தது கோதை.

முல்லை: கொஞ்ச நேரம் பேசாம இரு செல்வி. என் மனசு ஒண்ணும் சரியில்லை.

காட்சி 5

இடம்:

கோதை, முல்லை சகோதரிகள் வீடு

பங்குபெறுவோர்:

மாணிக்கம், முல்லை, கோதை.

திருச்சி மாவட்டத்தில்
எலமனூரில்
முக்கொம்பு
என்னுமிடத்தில்தான்!
—படங்கள்: குமாரராஜா



மாணிக்கம்: அழாதே முல்லை! நாம என்ன பண்ணலாம்? அக்கா பிழைச்சதே பெரிய காரியம். அதுக்காகக் கடவுளைக் கையெடுத்துக் கும்பிடணும்.

முல்லை: உயிரைக் கொடுத்த கடவுள் குரலைப் பிடுங்கிக் கொண்டாரே அண்ணா. அக்கா இப்ப திக்கித் திக்கிப் பேசுகிறாளே?

மாணிக்கம்: ஜுரத்தினாலே நாக்கு இழுத்துக் கொண்டு விட்டது. சரியாகப் பேச வரவில்லை. அதுக்கு நாம என்ன பண்ண முடியும்? டாக்டர்தான் என்ன பண்ணுவார்? அவரும் எவ்வளவோ முயற்சிகள் செய்து தான் பார்த்தார்.

முல்லை: என்னாலேதான் அண்ணா, அக்காவுக்கு இப்படி ஆகிவிட்டது.

மாணிக்கம்: உன்னாலேயா?

முல்லை: ஆமா, அண்ணா! ஜுரத்திற்கு முன்னாலே ஒரு நாள் அக்காவைக் கோபமாப் பேசிட்டேன். எனக்கு வர புகழையெல்லாம் நீயே தட்டிக் கிட்டுப் போயிடறியேன்னு ஏதேதோ ஆத்திரத்திலே பேசிட்டேன்.

மாணிக்கம்: அட கடவுளே! இப்ப என்ன பண்றது?

முல்லை: செல்வியுடைய எண்ணப் படியே நடந்து போச்சு. அக்கா திக்கித் திக்கிப் பேசறா. என் மனசும் சரியில்லை. நாங்க ரெண்டு பேரும் போட்டியில்கலந்துகொள்ளாவிட்டால் செல்விக்குத்தான் பரிசு.

மாணிக்கம்: என்ன கோதை! நீ ஏம்மா படுக்கையிலிருந்து எழுந்து வர்றாய்?

கோதை: மு... மு...முல்லை... நீ....நீ.

நீ... நிச்சயம் போ... போ... போட்டியிலே க...க...கலந்துக்க...

முல்லை: உன்னை விட்டுட்டு எப்படியக்கா தனியாப் பாடுவேன்?

கோதை: எ...எ... என் பே....பேச்சைக்கே...கே...கேட்க மாட்டியா?

முல்லை: இதைத் தவிர நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன் அக்கா.

கோதை: நீ...நீ...நீ... பா...பா... பாடினா எ... எ... எனக்குச் ச... ச.. சந்தோஷமா இஇஇ இருக்கும்.

மாணிக்கம்: அக்கா மனசை ஏன் நோக வைக்கிறே முல்லை. முல்லை நிச்சயம் நீ பாட்டுப் போட்டியிலே கலந்துக்கணும்.

முல்லை: என்ன அண்ணா, நீங்களும் இப்படிச் சொல்லிட்டீங்க?

மாணிக்கம்: உனக்குத் தெரியாது முல்லை. கோதைக்குத் திடீரெனத் தாங்க முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டா ஒருவேளை பழையபடி பேச்சு

வரலாம்னு டாக்டர் சொல்லியிருக்கிறார். உன் பாட்டைக் கேட்டுக் கோதை சந்தோஷமடைஞ்சா நல்லாப் பேசலாம் இல்லையா?

முல்லை: அப்படியா அண்ணா? அப்படியானா அக்கா மனம் சந்தோஷப்படும்படியா நான் போட்டியிலே பாடுவேன்.

காட்சி 6

இடம்:
செல்வி வீடு

பங்குபெறுவோர்:
வேணி, செல்வி

வேணி: என்ன செல்வி, சோகக் கடலிலே விழுந்து தத்தளிக்கிறாயா? என்னடாது போட்ட திட்டமெல்லாம் தவிடு பொடியாப் போச்சே என்று கவலைப்படறியா?

செல்வி: நீ வேற வயித்தெரிச்சலைக் கிளப்ப வந்துட்டியா?

வேணி: போட்டியிலே முல்லை பிரமாதமா பாடிட்டாள். அதைக்கேட்ட மகிழ்ச்சியிலே கோதை தானும் பாடறேன்னு மேடைக்கு வந்துட்டாளே!

செல்வி: முல்லை பாட ஆரம்பிச்சதுமே என் கோட்டை பாதி தகர்ந்து விட்டது. போதாக்குறைக்கு கோதையும் பாடி எனக்குக் கிடைக்க வேண்டிய ரெண்டாவது பரிசைக்கூடத் தட்டிக் கொண்டு போய்விட்டாள்.

வேணி: முல்லைக்கு அக்கா பாட ஆரம்பிச்சதுலே தலைகால் தெரியாத சந்தோஷம். அவளுக்கு முதல் பரிசு கிடைத்ததைக் கூட மறந்து விட்டாளே!

செல்வி: ஆமா, நான் சொன்னதிலே ஒண்ணு மட்டும் பலிச்சுப் போயிட்டுது. ரெண்டு பேரும் தனித் தனியாப் பாடினா முதல் பரிசு முல்லைக்குத்தான் கிடைக்கும்னு ஒரு நாள் முல்லை கிட்டே சொன்னேன். அவளுக்கு என் பேரிலே என்ன ஆத்திரம் வந்தது தெரியுமா? இப்ப என்ன நடந்தது?

வேணி: நீ கோதைக்கு ஜுரம் வருவதற்கு முன்னாலே சொல்லியிருப்பே. அவளுக்கு மட்டும் ஜுரம் வந்து, நாக்கு இழுத்துக் கொள்ளாமல் இருந்தா அவளுக்குத்தான் முதல் பரிசு கிடைத்திருக்கும்.

செல்வி: இல்லை, இல்லை! முல்லைக்குத் தான் முதல் பரிசு கிடைக்கும்.

வேணி: சரி, யாருக்காவது கிடைத்து விட்டுப் போகிறது. நாம் ஏன் வீணா சண்டை போடணும்?

காட்சி 7

இடம்:

கோதை—முல்லை சகோதரிகள் வீடு

பங்கு பெறுவோர்:
கோதை, மாணிக்கம், முல்லை

கோதை: அண்ணா, நாம போட்ட நாடகம் பலிச்சுப் போச்சு. இப்ப முல்லைக்கு என் பேரிலே இருக்கிற உண்மையான அன்பு வெளிப்பட்டு விட்டது. இனிமே எங்களை யாராலேயும் பிரிக்க முடியாது, அண்ணா.

மாணிக்கம்: அது சரிம்மா, நீயும் தங்கைக்கு முதல் பரிசு கிடைக்கிறதுக்காக நாக்கு இழுத்துக்கொண்டது போல் நாடகம் ஆடினாயே!

கோதை: உஷ்...மெதுவாகப் பேசுங்க அண்ணா. முல்லை வருகிறாள்.

முல்லை: என்ன அண்ணா, அக்காவும் நீங்களும் என்ன பேசிக்கிட்டு இருந்தீங்க?

முடியைத் தந்தோம்;
முகத்தைச் சொல்லுங்கள்:-

விடை:

1. பாரதியார், 2 நேதாஜி 3. ஜஹாங்கீர் 4. சிவாஜி, 5. விவேகானந்தர், 6. திப்பு சுல்தான் 7. அலெக்சாண்டர் 8. நெப்போலியன் 9. ஔரங்கசீப் 10. கிருஷ்ணதேவராயர் 11. குருநானக் 12. ஹைதர் அலி 13. மும்தாஜ் 14. பாலகங்காதர திலகர்

மாணிக்கம்: வழக்கம் போல நீங்க ரெண்டு பேரும் ஒன்றாகவே சேர்ந்து பாடலாம்னு சொல்றா. அதுவுமில்லாம தன் குரல் கொஞ்சம் மாறி இருக்கிறதாலே உன்னை முன்னால் வைத்து 'முல்லை சகோதரிகள்' என்று பாடப் போறாளாம்.

முல்லை: பழையபடி 'கோதை சகோதரிக'ளா இருந்தாத்தான் நான் இதுக்கு ஒப்புக் கொள்வேன். இல்லாவிட்டால் முடியாது.

மாணிக்கம்: எப்படி யிருந்தா என்ன? ரெண்டும் ஒண்ணுதானே! இனி, பழையபடி கோதை சகோதரிகளுடைய இரு குரல் இசை இன்பமாக ஒலிக்கட்டும்!

புதிய புத்தகங்கள்





மலரும் பூக்கள்

'மலரும் பூக்கள்' என்ற புத்தகத்தைக் கடையில் பார்த்தவுடனே வாங்கவேண்டும்போலிருந்தது. அதன் பெயரும் அழகும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன.

மெதுவாகப் புத்தகத்தைப் பிரித்து முதல் பாட்டைப் படித்தேன்.

அழகு மயில் முருகனை நாம்
    எண்ணி எண்ணி — தினம்
அன்பு மனப் பூசைகளைப்
    பண்ணிப் பண்ணி
பழகு தமிழ்ப் பண்பு தரக்
    கேட்போம் கேட்போம்—அவன்
பாலர்களின் வேண்டுதலைக்
    கேட்பான் கேட்பான்.

எனக்கு இந்தப் பாட்டு மிகவும் பிடித்திருந்தது. இதற்கு மேலும் ஓசியில் படிக்கலாமா? உடனே அந்தப் புத்தகத்தை வாங்கினேன். வீட்டிற்குக் கொண்டு வந்து முழுவதையும் படித்தேன்.

அதில் இன்னொரு பாடல்:

நல்ல நல்ல நூல்களே
    நல்ல நண்பர் நமக்குமே

என்று படிக்கின்றபோது, ரொம்பப் பேர் புத்தகங்களைப் படிக்காமல் வீணுகக் காலத்தைக் கழிக்கிறார்களே என்று தோன்றிற்று.

வேடிக்கைப் பாடல் ஒன்று இப் புத்தகத்தில் இருக்கிறது.

'மாமா, உங்க கடையிலே
மசால் வடை வேணுமே'

என்று ஒரு பாப்பா கேட்கிறது.

'காசு தர வேணுமே
கல்லுரலில் அரைத்திடேன்'

என்று கடைக்கார மாமா பதில் சொல்கிறார். உடனே, அந்தச் சமர்த்துப் பாப்பா என்ன சொல்கிறது?

'வடையை இப்போ தாங்களேன்.
வளர்ந்து வந்து செய்கிறேன்'

இந்தச் சமர்த்துப் பாப்பாவுக்கு நிச்சயம் மசால் வடை கிடைத்திருக்க வேண்டும்!

தன் காலில் தானே நிற்க வேண்டும். பிறருடைய உதவியுடன் எவ்வளவு காலத்திற்கு உயர்ந்து இருக்க முடியும்? இதை விளக்குகிறது ஒரு பாட்டு.

பிறருடைய தோளிலே
குதிரை ஏறி ஏறியே
உயர மாகத் தெரிபவர்
உலகில் இருக்கக் கூடுமோ?

என்ற கேள்விக்கு வேடிக்கையான பதிலும் அந்தப் பாட்டிலே இருக்கிறது.

குதிரையாகி நிற்பவர்
முதுகைக் கொஞ்சம் நிமிர்த்தினால்
உயர ஏறி இருப்பவர்
உருண்டு விழவே நேருமே!

இந்தப் பாடலைக் குன்றக்குடி அடிகளார் அவரது முன்னுரையிலே எடுத்துக் காட்டிப் பாராட்டியிருக்கிறார்.

இதேபோல் ஒன்று இரண்டா, நூற்பத்தி இரண்டு பாடல்களை நமக்குத் தந்திருக்கிறார் கவிஞர் **ரா. பொன்ராசன்** அவர்கள்.

அட்டை மட்டுமல்ல; உள்ளேயும் ஏராளமான அழகிய படங்கள் இருக்கின்றன. மிகவும் நல்ல முறையிலே அச்சிடப்பட்டிருக்கிறது. ஆடிப் பாடிக் களிப்பதற்கு ஏற்ற அருமையான புத்தகம்.

இந்தப் புத்தகத்திலே வேறு எங்குமே நான் காணாத ஒரு புதுமையைக் கண்டேன். அது என்ன புதுமை?

மு. கு. ஜகந்நாத ராஜா, குன்றக்குடி பெரிய பெருமாள், கொ. மா. கோதண்டம் போன்ற பெரிய எழுத்தாளர்கள் இந்தப் புத்தகத்தைப் பற்றிக் கலந்துரையாடியிருக்கிறார்கள். அப்போது அவர்கள் சொன்ன கருத்துக்களையும் புத்தகத்தின் கடைசியிலே அச்சுப் போட்டிருக்கிறார்கள்.

இப்படி அருமையான பாடல்களை எங்களுக்காகத் தந்திருக்கும் கவிஞர் பொன்ராசன் அவர்களை வாழ்த்தவேண்டும் என்று தோன்றியது. நான் சிறுவனாதலால் வணங்குகிறேன். இது மாதிரி இன்னும் நிறைய நிறையக் கவிதைகளைத் தரும்படி வேண்டுகிறேன்.

இப் புத்தகம் கிடைக்குமிடம்: அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை, விலை ரூ. 5.00.

-சிவ. வள்ளியப்பன், காரைக்குடி

குள்ளப் பசு

ஜனவரி மாதம் வந்த என்னுடைய பிறந்த நாளுக்கு என்னுடைய அண்ணா மூன்று கதைப் புத்தகங்களைப் பரிசாகத் தந்தார். அவற்றில் ஒன்று 'குள்ளப் பசு' என்ற புத்தகம். **ரேவதி** (ஈ.எஸ். ஹரிஹரன்) என்பவர்எழுதியது அந்தப் புத்தகம்.

மொத்தம் ஐந்து கதைகள். ஐந்தும் மிருகங்களைப் பற்றிய கதைகள்.

முதல் கதையின் பெயரே புத்தகத்துக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

ஓர் ஆங்கிலோ இந்திய மாது, ஊரை விட்டுப் போகும்போது பக்கத்து வீட்டுக் கலாவதிக்கு ஒரு வெள்ளை முயலைப் பரிசாகக் கொடுக்கிறாள். அதைக் கலாவதி மிகவும் அன்பாக வளர்த்து வருகிறாள். அப்பா வெளியூர் சென்ற சமயம், அம்மாவுக்குச் சரியான காய்ச்சல் வந்து விடுகிறது. மருந்து வாங்கப் பணம் இல்லை.

உடனே பள்ளித் தோழன் சங்கரிடம் முயலுடன் செல்கிறாள். ''என் முயலுக்கு ஐந்து ரூபாய் தருவதாக அன்று ஒரு நாள் சொன்னாயே, அப்போது விற்க மாட்டேன் என்றேன். இப்போது என் அம்மாவுக்கு ஊசி மருந்து வாங்க வேண்டும். முயலை வைத்துக் கொண்டு ஐந்து ரூபாய் தா. நான் ரூபாயை எப்போது திருப்பித் தருகிறேனோ, அப்போது நீயும் முயலைத் தந்துவிட வேண்டும்'' என்கிறாள்.

ஆனால் அவன், ''அதுதான் முடியாது. முயல் கறி ருசியாக இருக்கும் என்றுதானே விலைக்குக் கேட்டேன்'' என்கிறான்.

கலா திடுக்கிடுகிறாள். ''அம்மா உயிரைக் காப்பாற்ற முயலின் உயிரைக் கொடுப்பதா? மாட்டேன்'' என்று சொல்லிவிட்டுத் திரும்புகிறாள்.

அவளது மன உறுதியையும் முயலிடம் அவள் வைத்திருந்த அன்பையும் கண்ட சங்கர் பணத்தையும் கொடுத்து முயலையும் அவளையே வைத்துக்கொள்ளச் சொல்கிறான்.


'நன்றி கெட்டவன்' என்ற கதையில் கல்யாணிஎன்ற பெண், தங்கப்பன் என்ற பையனுக்கு இலவசமாகத் தன்னுடைய நாயைக் கொடுக்கிறாள். அவன் முரடனாக மாறி, எல்லார் மீதும் அந்த நாயை ஏவி விட்டு வேடிக்கை பார்க்கிறான். கடைசியில், கல்யாணி மீதே அந்த நாயை ஏவி விடுகிறான். ஆனால், அது அவளைப் பார்த்ததும் நன்றியின் காரணமாக ஒன்றும் செய்யவில்லை. ''தங்கப்பா, கேவலம், நாலு கால் பிராணிக்கு இருக்கும் நன்றிகூட உனக்கு இல்லையே!'' என்கிறாள். தங்கப்பன் மனம் மாறுகிறான்.

மிருகங்களிடம் சிறுவர்கள் கொண்ட அன்பையும், மிருகங்கள் நன்றியுடன் அவர்களிடம் நடந்துகொண்ட விதத்தையும் இந்தக் கதைகள் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன.

அட்டையும் உள் படங்களும் கண்ணுக்கு அழகாக இருக்கின்றன. ஓவியர் ரமணி என்பவர் படங்கள் வரைந்திருக்கிறார்.

வெளியிட்டோர்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14; விலை ரூ. 2.00.

-கே. ரமா, சென்னை-40



'வைத்திய பூபதியார் வீடு' என்று சொன்னால், அந்த ஊரில் மட்டுமல்ல; பக்கத்து ஊர்களில் உள்ளவர்களுக்கும் நன்றாகத் தெரியும். பரம்பரையாக வந்த, வைத்தியர் குடும்பம் அது. தொலை தூரத்தில் உள்ளவர்கள்கூடத் தங்கள் நோயைத் தீர்த்துக் கொள்ள அவரிடம் வருவார்கள்.

ஒரு நாள், முற்பகல் அவர் அவசர அலுவலாக வெளியே சென்றிருந்தார். கதறிஅழுது கொண்டு இருந்த ஒருவரை இருவர் வண்டியிலிருந்து பிடித்து இறக்கிக் கொண்டு வந்தனர். அவரோ ''ஐயோ! வலிக்கிறதே! எரிச்சல் தாங்க முடியவில்லையே!'' என்று வாய் விட்டுக் கூறித் துடித்தார். மூடிய கண்களிலிருந்து நீர் கொட்டிக் கொண்டே இருந்தது. உள்ளேயிருந்து வைத்தியரின் உதவியாளர் ''என்ன?'' என்று விசாரித்தார்.

அழைத்து வந்தவர்கள் கூறினார்கள்:

''பொங்கலுக்காக வீட்டிற்கு வெள்ளையடிக்கச் சுண்ணாம்பைக் கலக்கியபோது அதிக அளவுக்குத் தண்ணீரைச் சேர்த்து விட்டார்கள். அது சுவரில் சரியாக ஒட்டாததனால் அந்தக் கலக்கலைச் சிறிது நேரம் தனியாக வைத்திருந்து அதில் தெளிந்த நீரை ஒரு வாளியில் விட்டு வைத்திருந்தார்கள். இவரோ வெளியிலிருந்து வந்தவர்! அது நல்ல தண்ணீர் என்று நினைத்து இவர் அந்தத் தண்ணீரில் கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு முகத்தையும் கழுவிக் கொண்டார். முகத்திலே நீர் பட்டதும் கண் எரிச்சல் ஏற்பட்டுத் திறக்க முடியாமல் அலறுகிறார். கண் கெட்டுப் போயிருக்குமோ என்னமோ தெரியவில்லை. உடனேயே வைத்தியரிடம் காட்டிவிட வேண்டும் என்று, வண்டி பிடித்து விரைந்து வந்திருக்கிறோம். வைத்தியர் எங்கே? எங்கே?''

''வைத்தியர் வெளியில் சென்றிருக்கிறார். எப்போது வருகிறேன் என்றும் சொல்லிவிட்டுப் போகவில்லை'' என்று வைத்தியரின் உதவியாளர் சொன்னார். இவைகளையெல்லாம்-கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த வைத்தியருடைய சிறிய பையனான பாலன் உதவியாளரை 'ஒரு விஷயம்' என்று சொல்லி உள்ளே அழைத்துச் சென்றான். அரை மணி நேரம் கழித்து அந்த உதவியாள், கையில் ஒரு சிறு கிண்ணத்தோடு வந்தார். அந்த நோயாளியைப் படுக்க வைத்து அவரது இரு கண்களிலும் இரண்டு இரண்டு சொட்டுக்கள் வீதம் ஒரு நிமிடம் இடைவெளி விட்டு நாலைந்து தடவை விட்டார். சற்று நேரம்தான் ஆகியிருக்கும். அழுகை ஓய்ந்தது, முனகல் குறைந்தது. நோயாளி மெல்ல எழுந்து நிம்மதியாக உட்கார்ந்து கண்களைத் திறந்தார். சுற்றிலும் பார்த்தார். 'ஐயா, என்னைக் காப்பாத்திட்டீங்க. கண்ணு ரெண்டும் குருடாய்ப் போயிருக்கு-மோன்னு பயந்தேன்'' என்று வைத்தியரின் உதவியாளரைப் பார்த்து

நன்றியோடு கூறினர். அருகில் நின்று ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த பால னுக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவன் கைகளைக் கொட்டிக் கொண்டு சிரித்தபடியே வீட்டிற்குள் ஓடினன்.

எல்லோரும் வைத்தியரைப் பார்த்து விட்டுத்தான் செல்லவேண்டுமென்று காத்திருந்தனர். சற்று நேரத்தில் அவ ரும் வந்து விட்டார். அவர்கள் அவ ரிடம் நடந்தவைகளெல்லாம் சொல்லி, நன்றி கூறி விடை பெற்றனர். வைத் தியர் தம் உதவியாளரை, ''அவர் களுக்கு என்ன மருந்து கொடுத்தாய்? அவ்வளவு சீக்கிரம் எப்படிக் குண மாயிற்று?'' என்று கேட்டார்.

''எனக்கு அது பற்றி ஒன்றுமே தெரி யாது. குழந்தை பாலன்தான், வற் புறுத்தி அதை என்னைச் செய்யச் சொன்னன்'' என்றார். ''என்ன செய் யச் சொன்னன்?'' என்று கேட்டார் வைத்தியர்.

''நம் தோட்டத்திலுள்ள பாக்கு மரத்திலிருந்து இளம் பாக்குகளைப் பறிக்கச் சொன்னன். அவற்றை உரலில் இட்டு இடித்துச் சாறு எடுத்து வடி கட்டி அதைச் சொட்டுச் சொட்டாக அவர் கண்களில் விடச் சொன்னன்'' என்றார் உதவியாளர்.

வைத்தியருக்கு இது மிக ஆச்சரி யத்தைத் தந்தது. இப்படி ஒரு வைத்திய முறையை அவர் படித்ததும் இல்லை; கேட்டதும் இல்லை. அப்பா என்ன சொல்லுவாரோ என்று வீட்டினுள் ஒரு பக்கம் ஒளிந்திருந்த பாலனை, உதவியாளரைப் போகச் சொல்லிக் கூப்பிட்டார்.

பாலன் தயங்கியபடியே வந்தான். அவனைப் பெருமிதத்துடன் தட்டிக் கொடுத்து, ''கண்ணுக்கு இப்படி ஒரு மருந்தைத் தரலாம் என்று உனக்கு யார் சொல்லித் தந்தது?'' என்று கேட்டார்.

''யாருமே சொல்லித் தரவில்லை. நானகவேதான் செய்தேன். அந்த நோயாளி அவஸ்தைப் படுவதைக் கண் டேன். அப்போது அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று எண் ணினேன். முன்பு நடந்தது ஒன்று எனக்கு நினைவுக்கு வந்தது. அதுவும் நீங்கள் சொன்னதுதான். ஒரு நாள் நீங்கள் உணவுக்குப் பின் வெற்றிலை போட்டுக் கொண்டு இருந்தீர்கள். என் னைத் திடீரென்று கூவியழைத்து, 'பாலா, உள்ளே இருந்து இரண்டு துண் டுப் பாக்குக் கொண்டுவா. சீக்கிரம்! வெற்றிலையில் சுண்ணும்பு அதிகமாகத் தடவிவிட்டேன். நாக்கு வெந்துவிடும் போலிருக்கிறது' என்று சொன்னீர்கள். நான் கொண்டு வந்து தந்தேன். இந் தச் சம்பவம் எனக்கு நினைவுக்கு வந் தது. அன்றே பாக்கு சுண்ணும்புக்கு எதிரானது என்று தெரிந்து கொண் டேன். கண்ணுக்கு எப்படிப் பாக்கைப் போட முடியும்? இளம் பாக்கில் நீர் எடுக்க முடியும் என்று தோன்றியது. அதனல் நான் அப்படிச் செய்யச் சொன் னேன்'' என்றன் பாலன்.

வைத்தியர் அப்படியே அவனை வாரி அணைத்துக் கொண்டார். 'இந்த வைத் திய பூபதி பரம்பரையில் வந்த மாணிக் கம் நீ'' என்று மகிழ்ச்சியுடன் கூறிப் பாராட்டினர்.

ரோஜாப் பூவில் 200 வகை!

ரோஜாவில் சுமார் 200 வகைகள் இருக்கின்றன. ஆனலும், அவற்றிலே இளஞ் சிவப்பு நிறத்தில் உள்ள ரோஜா வில்தான் மணம் அதிகம். சிவப்பு, மஞ்சள், வெள்ளை நிற ரோஜாப் பூக் களில் மணம் குறைவாகத்தான் இருக் கும்.

ரோஜாப் பூவிலிருந்து அத்தரும், பன்னீரும் தயாரிக்கிருர்கள். ரோஜாப் பூவுடன் சர்க்கரையும் தேனும் கலந்து குல்கந்து செய்வார்கள். குல்கந்து சாப் பிடுவதற்கு, அடடா! எவ்வளவு ருசியாக இருக்கும், தெரியுமா?





வேண்டாம் விரோதம்



மா. பாண்டியன்

கண்ணனுக்குப் பொன்னன் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பொன்னன் கண்ணனைப் பற்றி அவதூறாகப் பேசினானும். கந்தன் வந்து சொன்னதிலிருந்து கண்ணனுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. இருந்தாலும், தன்னிடத்தில் பொன்னனைப் பற்றிச் சொன்ன கந்தனுக்கு உடனே இரண்டு சாக்லெட் மிட்டாய் கிடைத்தது. கந்தனுக்கு மிக்க மகிழ்ச்சி.

அடுத்துப் பொன்னனை நாடிக் கந்தன் சென்றான். கண்ணன் அவனைப் பற்றி அவதூறாகப் பேசினான் என்று சொன்னதும், பொன்னனுக்குக் கண்ணன் மீது ஆத்திரம். அவனும் கந்தனுக்கு இரண்டு கடலை மிட்டாய் வாங்கித் தந்தான்.

கண்ணனும் பொன்னனும் நல்ல நண்பர்களாக இருந்தவர்கள்தான். ஆனால், இப்போது இருவரும் ஒருவருக்கொருவர் விரோதி. கண்ணன் பொன்னன் இருவரின் விரோதத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஒரு கூட்டமே தினமும் மிட்டாய்கள் வாங்கித் தின்று கொண்டிருந்தது. கண்ணனுடைய கட்சியில் ஒருசில மாணவர்கள். பொன்னன் கட்சியிலும் ஒருசில மாணவர்கள் இருந்தார்கள். ஒரு கட்சியைச் சேர்ந்த மாணவர்கள் இன்னொரு கட்சிக்கு மாறிவிடாமல் இருப்பதற்காகத் தினமும் ஏதாவது வாங்கித் தந்தாக வேண்டும்.

இவர்களின் விரோதம் மற்ற மாணவர்களுக்குக் கொண்டாட்டம். இவர்களின் விரோதம் இவர்களோடு நின்றுவிடவில்லை. பெற்றோர்களிடம் சொல்லி, அவர்களும் விரோதித்துக் கொண்டனர். கண்ணனின் அப்பா அவனுடைய வகுப்பு ஆசிரியரிடம் விவரத்தை விளக்கிக் கண்டிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதன் பிறகு, கண்ணன், பொன்னன் இருவரையும் ஆசிரியர் தனித் தனியாக விசாரித்துப் பார்த்தார். அவருக்குச் சில உண்மைகள் புலப்பட்டன. இவர்களின் விரோதத்தைச் சில மாணவர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தினமும் ஏதாவது வாங்கித் தின்னுகிறார்கள். தங்கள் வருமானம் நின்றுவிடாமல் இருக்க அவர்களுக்குத் தூபம் போட்டு மேலும் விரோதத்தை வளர்க்கிறார்கள். இந்த விவரங்களை உணர்ந்து கொண்ட ஆசிரியர், 'கண்ணன், பொன்னன் இருவருக்கும் மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்' என்று எண்ணினார்.

வழக்கம் போல் ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்து அமர்ந்தார். கண்ணன், பொன்னன் மற்றுமுள்ள மாணவர்களும், 'இன்று ஆசிரியர் என்ன பாடம் நடத்தப் போகிறாரோ' என்று ஆவலுடன் இருந்தனர். இன்றைய பாடம் நீதி போதனை யல்லவா? அதனால் ஒரு கதை சொல்லப் போகிறேன்'' என்று கூறி ஆசிரியர் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

முன்னொரு காலத்தில் எங்கு பார்த்தாலும் அடர்ந்த காடுகள் இருந்தன. அந்த அடர்ந்த ஒரு காட்டில்தான் இந்தக் கதை ஆரம்பமாகிறது.

கடுமையான கோடைக் காலம், மரங்களில் தழைகளே இல்லை. பட்டுப்போன மரங்கள் மாதிரி காட்சியளித்துக்கொண்டிருந்தன. மற்ற செடிகள், கொடிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுக் காய்ந்து போய் விட்டன. அக்காட்டிலுள்ள மிருகங்கள், பறவைகள் எல்லாம் வளமான இடம் நோக்கிச் சென்றுவிட்டன. அக்காடே வெறிச்சோடிக் கிடந்தது.

ஆனால், இரண்டு யானைகள் மட்டும் வழி தவறி, செல்லும் இடம் தெரியாமல் அந்தக் காட்டிலேயே சுற்றித்திரிந்தன. ''இனிமேல் நாம் எங்கும் போக முடியாது. இங்கேயே கிடைப்பதைத் தின்று உயிர் வாழ்வோம்' என்று தீர்மானித்துக் கொண்டு அக்காட்டிலேயே வாழ்ந்தன.

இவைகளுக்குள்ளே ஒரு நாள் விரோதம் ஏற்பட்டு, அது தினந்தோறும் வளர்ந்து, கடைசியில் ஒன்றோடு ஒன்று மோதத் தொடங்கின.

இரண்டும் சம பலம் கொண்டவை. ஆகையால் வெற்றி தோல்வி இல்லாமல் சண்டை முடிந்தது. ஆனால், ஒன்றுக்கொன்று விரோதத்தை வளர்த்துக் கொண்டே வந்தன.

ஒரு நாள் அவற்றில் ஒரு யானை ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தது. திடீரென்று மரக் கிளை குலுங்கும் சத்தம் கேட்டது. உடனே யானை நிமிர்ந்து பார்த்தது. அங்கு ஒரு குரங்கு உட்கார்ந்து யானையைப் பார்த்துக் கொண்டே இருந்தது. யானை அதைப் பார்த்ததும் மகிழ்ச்சியால் துள்ளியது. விரோதியோடு மட்டும் வாழ்ந்துகொண்டிருந்த அந்த யானைக்கு ஒரு நண்பன் கிடைத்து விட்டான் என்று மகிழ்ச்சி ஏற்பட்டது.

''ஏ குரங்குத் தம்பி! இறங்கி வா! பேச்சுத் துணைக்குக்கூட ஆள் இல்லாமல் கஷ்டப்படுகிறேன். நீ ஒருவனாவது கிடைத்தாயே, பேசிக் கொண்டிருக்கலாம்'' என்றது. குரங்கு ''சரியண்ணே!'' என்று இறங்கி வந்து யானையுடன் பேசிக் கொண்டிருந்தது.

அப்பொழுது அந்த யானை குரங்கிடம், ''தம்பி, எனக்கு ஒரு விரோதி யானை இங்கு இருக்கிறது. அதை எப்படியாவது தொலைத்து விட வேண்டும். அப்பொழுதுதான் எனக்கு நிம்மதி'' என்றது.

''சரியண்ணே, சமயம் வரட்டும். தொலைச்சிடுவோம்'' என்று குரங்கும் சொல்லிவைத்தது. மறுநாள் குரங்கு மற்றொரு யானையைக் கண்டு விசாரித்தது. அதற்கும் மகிழ்ச்சி. அதனுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, ''உன் விரோதி உன்னைப் பற்றி அவதூறு சொல்லியது'' என்று குரங்கு ஆரம்பிக்கவும், அந்த யானைக்குக் கோபம் வந்துவிட்டது.

''குரங்குத் தம்பி! அந்த விரோதியை ஒழித்தால்தான் எனக்கு நிம்மதி. அதற்கு ஒரு யோசனை சொல்'' என்று கேட்டுக் கொண்டது யானை.

''குரங்கு, சமயம் வரட்டும் ஒழித்து; விடலாம்'' என்று அதற்கு ஆறுதல் கூறிவிட்டு, அப்பால் சென்று, 'முட்டாள் யானைகள். உடம்பு மட்டும் பருத்துப் போச்சு; புத்தியே இல்லே. சமயம் வரட்டும். உங்கள் இருவரையும் ஒழித்துவிட்டு நானே தனிக்காட்டு ராஜாவாக இந்தக் காட்டில் வாழப் போகிறேன்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டது.

சில நாட்கள் கழிந்தன. மழையும் பெய்து, வறட்சி நிலை மாறத் தொடங்கியது. காய்ந்துபோன மரம், செடி கொடிகள் எல்லாம் துளிர் விட ஆரம்பித்தன.

ஒரு நாள் யானை வேட்டையாடச் சிலர் அக்காட்டுக்கு வந்தனர். காடு முழுவதும் அலைந்தும் யானையோ வேறு மிருகமோ கண்ணில் தென்படாததால் சோர்ந்து போய் ஒரு மர நிழலில் அமர்ந்தனர்.

அவர்களில் ஒருவன், ''இனிமேல் அலைஞ்சு பயனில்லே. வந்ததுக்கு ஏதாவது ஒரு பிராணிகிடைச்சாலும் பிடிச்சுப் போகலாம். அதுக்கும் வழியில்லே. வெறுங் கையோடு திரும்ப வேண்டியதுதான்'' என்று அலுப்பாகக் கூறினான்.




அப்பொழுது உயரே கிளைகள் அசையும் சத்தம் கேட்டு எல்லோரும் மரத்தின் மேல் புறத்தைப் பார்த்தனர். அங்கு ஒரு குரங்கு இருந்ததைக் கண்டனர்.

''சரி, சரி! வந்ததுக்கு இந்தக் குரங்கையாவது பிடிச்சுக்கிட்டுப்போவோம்'' என்று கூறி எப்படியோ அதைச் சுற்றி வளைத்துப் பிடித்து விட்டனர். கூண்டுக்குள் போட்டு அடைத்தார்கள்.

கூண்டில் அடைபட்ட குரங்கு, தப்பிக்க வழியில்லாமல் வருந்தியது. பின் அவர்களைப் பார்த்து, ' ஐயா! என்னை விட்டுடுங்க! இந்தக் காட்டிலே இரண்டு யானைகள் இருக்கின்றன. அந்த யானைகளைப் பிடித்துப் போனாலும் உங்களுக்குப் பிரயோசனமாக இருக்கும். என்னை விட்டால் நான் பிடிச்சுத் தர்றேன்'' என்றது.

''எங்களை ஏமாற்ற நினைச்சால் உன்னைக் கொன்று போட்டிடுவோம்.



யானைகள் எங்கே இருக்கு சொல்லு!'' என்று அதட்டினார்கள்.

''நீங்கள் ஒன்றும் அலைய வேண்டாம் பெரிய குழி வெட்டி மேலே மரம், தழை போட்டு மண்ணால் மூடி வையுங்கள். நான் யானைகளை அழைச்சு வர்றேன்'' என்றது.

''அப்படி அழைச்சுக்கிட்டு வராமே ஏமாத்தி ஓடிவியோ, உன்னை உயிரோட விடமாட்டோம், போ!''என்று கூறி, குரங்கை அனுப்பி வைத்தனர். பிறகு குரங்கு சொன்னபடி அவர்கள் குழி வெட்டி, மேலே மூடி குழி தெரியாமல் செய்து வைத்து விட்டு, சிறிது தூரத்தில் போய் ஒளிந்து கொண்டனர்.

குரங்கு ஒரு யானையிடம் போய், ''உன் எதிரி சரியா மாட்டிக்கிட்டான். வந்து பாரேன்! ஒரு பெரிய குழியிலே விழுந்துட்டான். இனிமேல் அவனாலே தப்பிக்க முடியாது. சீக்கிரம் வா, போய்ப் பார்ப்போம்'' என்று கூறி அவசரப்படுத்தியது.

அந்த யானைக்கு மிகுந்த மகிழ்ச்சி! ''தொலைந்தானா! வா, போய்ப் பார்க்கலாம்! நீதான் மாட்டி விட்டாயா! உன்னைப் போல நண்பன் யாருக்குக் கிடைக்கும்? வா'' என்று அழைத்துக் கொண்டு விரைவாகச் சென்றது.

குழி வெட்டியிருந்த இடம் வந்ததும், குரங்கு, யானையிடம் ''நீ போய்க் கொண்டே இரு. உம், சீக்கிரம் போ. அதோ ஒரு பர்லாங் தூரத்தில் தெரிகிறதே அந்த ஆலமரத்துக்குப் பக்கத்தில் தான் மாட்டிக்கொண்டிருக்கிறான். நான் மரத்தில் ஏறி அவன் எப்படித் தவிக்கிறான் என்று பார்க்கிறேன்'' என்று கூறி அருகில் இருந்த மரத்தில் ஏறியது.

யானை பத்தடி தூரம் கூடச் செல்லவில்லை. 'மடமட'வென்று ஒரு மரமே சாய்ந்தது போல் ஒரு பெரிய சத்தம் கேட்டது.

அவ்வளவுதான்! குரங்கின் திட்டப்படி யானை குழியில் விழுந்துவிட்டது!

வேட்டைக்காரர்களுக்கு ஒரே மகிழ்ச்சி! குரங்கைப் பார்த்து, ''எங்கே இன்னொரு யானை?'' என்றனர்.

''இந்தக் குழியை முன்பு போலவே மூடிவைத்திருங்கள். அந்த யானையையும் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி, காட்டை நோக்கி ஓடியது.

பள்ளத்தில் விழுந்த யானை பிளிறிப் பிளிறி ஓய்ந்து விட்டது. அதன் பிறகு யானை பிடிப்பவர்கள் அந்தக் குழியை முன்பு மாதிரியே தழைகள், புல் போன்றவற்றைப் போட்டு மூடிவைத்தனர்.

குரங்கு அந்த இரண்டாவது யானையிடம் சென்று, ''அண்ணே! உன் விரோதியை மாட்டி வைச்சுட்டேன். சரியான குழியிலே விழுந்து விட்டான் வாவா! போய்ப் பார்க்கலாம்'' என்றது.

''சனியன், தொலைந்தானா! வா, போய்ப் பார்க்கலாம். இன்னையிலேயிருந்து எனக்கு எதிரி இந்தக் காட்டிலே யாருமில்லை. இனி நானே ராஜா'' என்று கூறிக் கொண்டு குரங்கின் பின்னால் சென்றது.

குழியின் அருகிலே வந்ததும் அதற்குச் சிறிது தூரத்தில் இருந்த வேல மரத்தைக் காட்டி, ''அதோ அந்த மரத்தடியில்தான் குழி இருக்கிறது. அதிலேதான் உன் எதிரி மாட்டிக்கிட்டு முழிக்கிறான். சீக்கிரம் போ'' என்று கூறிவிட்டு வயிற்றைச் சொறிந்து கொண்டிருந்தது. யானை மிகவும் மகிழ்ச்சியாக விரைந்து நடந்தது. அருகிலேயே குழி இருந்ததைக் கவனிக்கவில்லை. அதில் காலை வைத்ததும் 'தடா'லென்று உள்ளே விழுந்து விட்டது.

உடனே குரங்கு ஓடிவந்து குழியில் எட்டிப் பார்த்தது. ''என்ன சுகம்

தானா? ரெண்டு பேரும் ஒழிஞ்சீங்க. இனிமேல் நான்தான் இந்தக் காட்டுக்கு ராஜா!'' என்று கூறிக் குதித்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தது.

யானைகள் இரண்டும் குரங்கினால் தான் தங்களுக்கு ஆபத்து வந்தது என்பதை உணர்ந்து கொண்டன. ஒன்றையொன்று பரிதாபமாகப் பார்த்துக்கொண்டன. இரண்டும் அழுதன. 'நம்மிடம் ஒற்றுமை இல்லாததினால் தானே கேவலம் இந்தக் குரங்கு நம்மை ஆபத்தில் சிக்க வைத்து விட்டது.' என்று பேசிக் கொண்டன.

வேட்டைக்காரர்கள், ''இன்று முழுதும் இந்த யானைகள் இங்கேயே பட்டினி கிடக்கட்டும். அப்போதுதான் திமிர் அடங்கும். நாளை வந்து பார்ப்போம்'' என்று கூறி இரவில் வீட்டுக்குச் சென்று விட்டார்கள்.


இரவு வந்ததும், யானைகள் எப்படித் தப்பலாம் என்று யோசித்தன. அப்போது அவைகளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி ஒரு யானை படுத்துக் கொண்டது. இன்னொரு யானை அதன் முதுகில் ஏறியது. படுத்திருந்த யானை மெதுவாக எழுந்தது. உடனே முதுகில் நின்ற யானை துதிக்கையை நீட்டி, அருகில் நின்ற ஒரு மரத்தின் அடிப் பாகத்தை வளைத்துப் பிடித்தது. பிறகு மெதுவாகத் தட்டுத் தடுமாறி மேலே வந்து விட்டது.

வெளியே வந்த யானை அருகில் உள்ள சிறுசிறு பாறைகளை ஒவ்வொன்றாகக் குழிக்குள் உருட்டி விட்டது. சிலமரங்களை முறித்து வந்து குழியில் போட்டது. சிறிது நேரத்தில் குழிக்குள் ஒரு மேடு உண்டாகி விட்டது. உள்ளேயிருந்த யானைமேட்டிலே ஏறி எட்டிப்பார்த்தது. தன் துதிக்கையை நீட்டியது. மேலிருந்த யானையும் தன் துதிக்கையை நீட்டிக் குழிக்குள் இருந்த யானையைப் பலம் கொண்ட மட்டும் இழுத்தது. அந்த யானையும் சற்று நேரத்தில் மேலே வந்துவிட்டது.

யானைகள் இரண்டுக்கும் அளவில்லாத மகிழ்ச்சி! 'இனிமேல் தமக்குள் தகராறே கூடாது' என்று கூறிக்கொண்டு காட்டுக்குள் விரைந்து ஓடி விட்டன.

மறுநாள் காலையில் யானைகளை வெளியேற்றிப் பிடிக்க வேண்டும் என்று வேட்டைக்காரர்கள் இன்னும் பலரையும் அழைத்துக் கொண்டு வந்தனர். வழியில் குரங்கும் அவர்களோடு சேர்ந்து வேடிக்கை பார்க்க வந்தது.

குழியைப் பார்த்த வேட்டைக்காரர்கள் திடுக்கிட்டார்கள். யானைகள்



தப்பிவிட்டன என்பதை அறிந்ததும் ஆத்திரம் கொண்டனர். தப்பிய யானைகளைப் பிடிக்கமுடியாது என்று உணர்ந்து கொண்ட அவர்கள், ''குரங்கைப் பிடி'' என்று கூறி லபக்கென்று அருகிலிருந்த குரங்கைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். பாவம், குரங்கு குறு குறுவென்று விழித்துக் கொண்டே அவர்களுடன் சென்றது.

ஆசிரியர் கதையை முடித்ததும் சில மாணவர்கள் ''குரங்குக்கு இதுவும் வேணும்; இன்னமும் வேணும் சார்'' என்றனர். சிலர் யானைகளைப் பாராட்டினர்.

கண்ணனும் பொன்னனும் இன்னும் சிந்தனையிலிருந்து விடுபடவில்லை.

ஆசிரியர் மீண்டும் பேசலானார். ''அந்த யானைகளைப் போல் விரோதத்தை வளர்த்துக்கொண்டால், கடைசியில் அவைகளுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும். நல்லவேளை, அவை தங்கள் தவற்றை உணர்ந்தன. விரோதத்தை விட்டன; ஒன்று சேர்ந்தன. தப்பிப் பிழைத்தன. விரோதத்தை வளர்த்த குரங்கின் கதி என்ன ஆயிற்று, பார்த்தீர்களா? வம்பு வளர்வதெல்லாம் இந்தக் குரங்கைப் போன்றவர்களால்தான்'' என்று கூறி முடித்தார்.

சிறிது நேரத்தில் பள்ளி முடியும் மணி அடித்தது. வகுப்பை விட்டு வெளியில் வந்ததும் கண்ணனும் பொன்னனும் ஒருவரையொருவர் பார்த்தனர். உடனே கண்ணன் பொன்னனிடம் சென்று, ''பொன்னா! நான் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னித்துவிடு'' என்றான்.

பொன்னன், கண்ணனின் கையைப் பற்றிக் கொண்டு, ''கண்ணா, நீயும் என்னை மன்னிச்சிடு'' என்றான்.

இவர்களிடம் தினமும் கோள் மூட்டி வந்த மாணவர்கள், கண்ணனும் பொன்னனும் கைகோத்துக் கொண்டு செல்வதைப் பார்த்து, 'இனி இவர்களிடம் நமக்கு வேலை இல்லை' என்று ஒதுங்கிச் சென்றனர்.

பாட்டிலே பாராட்டு!



பொக்கிஷம்

பொங்க லன்று கோகுலம்
புறப்பட் டுத்தான் வந்தது!

தங்கை அட்டைப் படத்தையே
தாவி வந்து பார்த்தனள்!

தம்பி பாடல் அனைத்தையும்
தலையை ஆட்டிப் பாடினான்!

அக்காள் சின்னஞ் சிறுகதை
அத்த னையும் படித்தனள்!

பாட்டி துணுக்கு யாவையும்
படித்துப் படித்துச் சிரித்தனள்!

தாத்தா போட்டோ ஆல்பத்தை
சந்தோ ஷமாய்ப் பார்த்தனர்!

ஆக மொத்தம் கோகுலம்
அற்பு தமாய் இருந்தது!

பொங்கல் நாளில் வந்தது
எங்க ளுடைய பொக்கிஷம்!

—ஆண்டாள் பிரியதர்சினி, சென்னை-15

கருவூலம்

குப்பு சாமி அப்பு சாமிப்
பாடல் சிரிப்பு!
குட்டிக் கதைகள் அத்தனையும்
சிறந்த தொகுப்பு

இமயம் முதல் குமரி வரை
எத்தனை கதை!
தம்பி தங்கை ரசிப்பதற்குத்
தகுந்த பலகதை!

அத்த னையும் ஏந்தி வரும்
ஏடு கோகுலம்!
இந்த நாட்டுச் சிறுவ ருக்கே
எழில் கருவூலம்!

—சித்ர ரதன், சென்னை-40

முத்து

குழந்தைக் கடவுள் கண்ணனும்
குடி இருந்தது கோகுலம் – இது
குழந்தை கட்குக் கருத்துரை
கொடுக்கும் இனிய கோகுலம்

பாலன் கண்ணன் லீலைகள்
பண்ணி வைத்தது கோகுலம்
சில ராகச் சிறுவரைச்
செய்யப் போகும் கோகுலம்

கண்ணன் வெண்ணெய் உண்டதைக்
கண்டு மகிழ்ந்தது கோகுலம் – இது
வெண்ணெய் போல உயர்ந்தநல்
விஷயம் தந்திடும் கோகுலம்

கலைஞ ருகக் கண்ணனைக்
காட்டி நின்றது கோகுலம் – இது
விலையில் லாத முத்தென
விளங்கும் எங்கள் கோகுலம்!

—புவனா கலைச்செழியன், ரிஷிவந்தியம்

வழிகாட்டி

முந்தையர் அருளிய பேருரைகள்,
முத்தமிழ் விளக்கத் தெளிவுரைகள்,
சிந்தனை தூண்டும் சிறுகதைகள்,
சித்திரம் தீட்டும் நன்முறைகள்,

அன்புப் பெருக்கின் வழிகாட்டி,
அறிவியல் நுணுக்க நாள்காட்டி,
என்றும் பக்தி உணர்வூட்டி
இன்பத் தமிழில் தாலாட்டும்!

கணிதம், கவிதை, கட்டுரைகள்
கலைகள், கற்பனைச் சித்திரங்கள்
இனிமை, எளிமை, புதுமையுடன்
இனிக்கும் கோகுலம் வாழியவே!

—அமுதமலை, தவழி

புகைப்பட ஆல்பம்



"வருவான் வடிவேலன்'' என்று பாடி ஆடுகிறாள் ஞானசவுந்தரி.

"இதோ உன் பின்னால் வடிவேலனாக வந்து நிற்கிறேனே!'' என்கிறான் கென்னடி.

புகைப்படம்: வாஸன் ஸ்டுடியோ, காரைக்குடி

என் கறுப்பு நாய்க்குக் கன்னத்திலே முத்தம்!

செல்வி : ராதிகா;

புகைப்படம் : கலை நாகராஜன் குரோம்பேட்டை






"கண்ணனிடத்திலே ஒரு குழல் தான்; என்னிடத்திலே இரண்டு குழல்கள்!

ஏணிக்கு நடுவிலே இவர் என்ன பார்க்கிறார்?





என்னோடே பந்தாட எவராலே முடியும்?




கட்டில் மேல் நின்று
எட்டி எட்டிப்
பார்க்கிறார்.

புகைப்படங்கள் :
என். ராமகிருஷ்ணன், மாயவரம்

"அடே, என்மாதிரியே இருக்கிறியே, நீ யார்?"

"அதுதானே நானும் யோசிக்கிறேன், நீ யார்?"

படம்
செல்வி சிவராமன்






எப்படி இருக்குது
என் டிஸ்கோ நடனம்?



ஏசுவின் ஆசிபெற்ற
இனிய நடனம் பாரீர்!

படம்
- சிறுமலர்
நடுநிலைப்பள்ளி
காரைக்குடி

விடுகதை-கட்டாயப்பாடம்



முன்காலத்தில் கிரேக்க நாட்டுச் சிறுவர்களுக்கும் ரோமாபுரிச் சிறுவர்களுக்கும் புதிய புதிய விடுகதைகளை எப்படி இட்டுக்கட்டுவது என்று கற்றுக்கொடுத்து வந்தார்கள். ரோமாபுரிப் பள்ளிக்கூடங்களில் விடுகதை கட்டாயப் பாடமாக இருந்ததாம்.

ஆப்பிரிக்காவில் விடுகதை விளையாட்டு என்று ஒரு விளையாட்டு உண்டு. அந்த விளையாட்டில் சிறுவர்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து கொள்வார்கள். ஒரு கட்சிக்கு ஐந்தாறு பேர் இருப்



பார்கள். ஒரு, கட்சியிலிருந்து ஒருவன் விடுகதை போடுவான். எதிர்க் கட்சிக்காரர்கள் அதை விடுவிக்க வேண்டும். அல்லது பதில் விடுகதை போட வேண்டும். இப்படியே மணிக் கணக்கில் அவர்கள் இந்த விளையாட்டை நடத்துவார்கள்.

ஆப்பிரிக்காவில் மாகுவா என்று ஓர் இனம் உண்டு. இவர்களில் ஒரு பெண் வயதுக்கு வந்ததும் ஒரு சடங்கு நடத்துவார்கள். அந்தச் சடங்கில் அந்தப் பெண்ணுக்குச் சில விடுகதைகளைப் போட்டு, விடை கூறப் பழக்குவார்கள். விடுகதைக்குச் சரியான விடை கூறத் தெரிந்து கொண்டால், வாழ்க்கையில் அவளுக்குத் துன்பமே இராதாம். எதையும் சமாளித்துக் கொள்வாளாம்!

அங்கே இன்னொரு வகைப் பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். ஒருவன் குற்றவாளியா இல்லையா என்பதைக் கண்டறிய அவனுக்குச் சில விடுகதைகளைப் போடுவார்கள். அவன் சரியான விடை கூறிவிட்டால் 'நிரபராதி' என்று கூறி அவனுக்கு விடுதலை அளித்து விடுவார்கள்! விடை தெரியாமல் விழித்தால், அவன் குற்றவாளி! தண்டனை நிச்சயம் உண்டு!

பிஜித் தீவில் இளைஞர்கள் சிறு சிறு கட்சிகளாகப் பிரிந்து கொண்டு விடுகதை போடுவார்கள். வெற்றி பெற்றவர்களுக்குத் தோற்றவர்கள் விருந்து வைக்க வேண்டும்!

துருக்கியில் உள்ள சில பழங்குடிப் பெண்கள் தங்கள் கணவரைத் தேர்ந்தெடுக்க விடுகதை உதவுகிறது. கல்யாணமாக வேண்டிய பெண், விடுகதை போடுவாள். அந்த விடுகதையை எவன் விடுவிக்கிறானோ அவனையே அவள் மணந்து கொள்வாள். விடுகதைக்கு விடை தெரியாதவர்கள் பிரமச்சாரியாகவே காலம் தள்ள வேண்டியதுதானாம்!

அங்கே மற்றொரு வகை மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் பயிர்கள் வளரும் காலத்தில் வயல் கரைகளில் உட்கார்ந்து கொண்டு விடுகதைகள் போடுவார்களாம். யார் யார் சரியான விடைகள் சொல்கிறார்களோ, அவர்களுடைய வயல்களில் நல்ல விளைச்சல் இருக்கும் என்று நம்புகிறார்கள்.



அத்தையின் அறிவுரை

சாரதா வெங்கட்ராமன்

ஆத்தங்குடி என்றொரு சிற்றூர். அழகிய ஊர். தென்னை, மா, பலா மரங்களும், நிறையப் பூச்செடிகளும் பூத்துக் குலுங்கும் அந்த ஊரில் கனக சபை — விசாலாட்சி தம்பதியரின் ஒரே செல்வப் புதல்வன் கார்த்திகேயன். அச்சிறுவனைப் பெற்றோரும், மற்றோரும் 'கார்த்திக்' என்று அன்புடன் அழைப்பார்கள்.

கார்த்திக் நல்ல பையன்தான். நேரத்தே எழுந்து காலைக் கடன்களை முடித்து இறைவனை வணங்குவான். தன் பள்ளிப் பாடங்களை ஒழுங்காய்ப் படிப்பான். பெரியவர்களிடம் மரியாதையாய்ப் பழகுவான். ஆனால், அவனிடம் ஒரே ஒரு பிடிவாத குணம் மட்டும் உண்டு. சரியாக உண்பது கிடையாது. அவன் தாய், தந்தை எவ்வளவு வற்புறுத்தியும் வயிற்றுக்குப் போதிய அளவு சாப்பிடவே மாட்டான். எத்தனை ருசியான தின்பண்டங்கள் ஆயினும் சரி, அவனுக்கு அது பிடிக்காது. பாதிச் சாப்பாட்டில் எழுந்து விடுவான். அவன் மீதம் வைக்கும் சோறு தினசரி தவறாமல் அங்கு வழக்கமாக வரும் பிச்சைக்காரர்களுக்குக் கிடைத்து வந்தது. பாவம், அவன் தாயார் வேறு என்னதான் செய்வாள்? நல்ல வசதி படைத்த அவர்கள், தங்கள் புதல்வன் இப்படிச் சரியாக உண்ணாமல் இருப்பது குறித்து மனம் வருந்தினர்.

ஒரு நாள் கார்த்திக்கின் அத்தை லட்சுமி அவர்கள் வீட்டுக்கு வந்தாள். எல்லோரையும் அன்புடன் நலம் விசாரித்தாள். 'கார்த்திக்குக் கொண்டு வந்தேன்' என்று கூறிப் பழ வகைகளும், பட்சணங்களும் எடுத்து வைத்தாள். ஆனால், கார்த்திக்கோ, அவை ஒன்றையும் தொடக்கூட இல்லை. இதனைக் கண்ணுற்ற அவன் அத்தை மிகவும் மனவேதனையுற்றாள்.

கார்த்திக்கின் அன்னை விசாலாட்சியும் லட்சுமியிடம் அவன் ஒருபோதும் சரியாக உண்பது இல்லை என்று கூறி வருத்தப்பட்டாள். அதைக் கேட்ட லட்சுமி திகைப்படைந்தாள். பின்னர் ''சரி, இன்றைக்கு நானே என் கையால் கார்த்திக்குச் சாப்பாடு போடுகிறேன்'' என்று கூறினாள்.

சாப்பாட்டு நேரம் வந்தது. சொன்னபடி லட்சுமி சாதம், குழம்பு, பொரியல் எல்லாவற்றையும் அவனுடைய உண்கலத்தில் எடுத்து வைத்தாள். கார்த்திக்கும் சாப்பிட வந்து அமர்ந்தான். லட்சுமி அத்தை அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். கார்த்திக் பெயருக்கு ஏதோ சாப்பிட்டான். பாதிச் சோற்றை மீதம் வைத்துவிட்டு எழப் போனவனைத் தன் கையால் தடுத்து நிறுத்தினாள் அத்தை. பிறகு அன்புடன் ''என்னப்பா கார்த்திக், வளரும் பிள்ளையாகிய நீ இவ்வாறு உண்ணும் உணவை ஒழுங்காகச் சாப்பிடாமல் வீணாக்கலாமா?'' என்று வினவினாள்.

''எனக்குப் பிடிக்கவில்லை அத்தை!'' என்று பதில் கூறினான் கார்த்திக்.

''அறுசுவை நிறைந்த இந்த உணவு உனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்கிறாய்? பிடிப்பது, பிடிக்காதது என்பதெல்லாம் நாமே நமக்குள் செய்து கொள்ளும் முடிவுதானே? நீ வீணாக்கும் இந்த உணவுப் பொருள்களுடைய மதிப்பு என்ன தெரியுமா? ஏராளமான ஏழைகள் கால் வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழியில்லாமல் திண்டாடுகிறார்கள். நமக்கோ நன்கு உண்பதற்கு வாய்ப்பும், வசதியும் இருந்தும் நீ சோற்றை வெறுத்து ஒதுக்குகின்றாய். இன்றைக்கு நீ இவ்வாறு செய்தால் அன்னலட்சுமி உன்னை விட்டு நீங்கிவிடுவாள். பணம், அரிசி, புத்தகம் இவையெல்லாம் தெய்வத்துக்குச் சமம். பின்னொரு காலத்தில் நீ உணவின்றிச் சிரமப்படும்போதுதான் இதன் அருமையை உணர்ந்து கொள்வாய்'' என்று கார்த்திக்கின் மனம் புண்படாதவாறு, ஆனால் அதே சமயம் ஒரு விதக் கண்டிப்புடன் எடுத்துரைத்தாள் லட்சுமி.


கார்த்திக் இன்னும் யோசித்தவாறே உட்கார்ந்திருந்தான். அத்தை சொல்வதில் இருந்த நியாயம் அவனுக்குப் புரிந்தது. பின்னே? அவன் ஒன்றும் புத்தியற்ற சிறுவன் இல்லையே? சிறிது நேரம் சென்றது. அவன் மெதுவாகப் பின்வருமாறு பதிலுரைத்தான். ''அத்தை, நான் சரியாகச் சாப்பிடாமல் மிச்சம் வைக்கிற உணவு வீணாகவா போகிறது? பசியால் வாடும் ஏழைப் பிச்சைக்காரர்களுக்குத்தானே கிடைக்கிறது? அவர்கள் பசியாறினால் அதுவே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.''

அத்தை லட்சுமி அவனுடைய இந்தப் பதிலினால் ஆச்சரியமடைந்தாளாயினும் அதை வெளியே காட்டிக்கொள்ளவில்லை. ''அது சரி, அந்தப் பிச்சைக்காரர்கள் குருடர்களா அல்லது கை கால் இல்லாதவர்களா?''

''அப்படி ஒன்றுமில்லை. நன்றாகத்தான் இருக்கிறார்கள்'' என்று கார்த்திக் பதில் கூறினான்.

உடனே லட்சுமி, ''கார்த்திக், உடலின் எந்த உறுப்பிலும் ஊனம் இல்லாமல் இருப்பவர்களை — உழைத்துச் சம்பாதித்து உண்ண வேண்டியவர்களைச் சோம்பேறிகளாக மாற்றலாமா? அப்பா புதிதாக ஒரு பெரிய வீட்டைக் கட்டுகிறாரே, அங்கு அவர்களை வேலைபார்க்கச் சொல்லி அவர்களின் வேலைக்குத் தக்கபடி கூலியைக் கொடுக்கச் சொல்லலாம். நானும் சொல்கிறேன். அப்போதுதான் உழைத்துச் சாப்பிடும் பெருமை அவர்களுக்குத் தெரியும். நீயும் வேளைக்கு ஒழுங்காக உணவு சாப்பிட்டால்தான் நன்கு படிக்கவோ, ஓடியாடி விளையாடவோ இயலும். இனியும் சோற்றையோ மற்ற உணவுப் பொருட்களையோ வீணாக்காது அவற்றை விரும்பிச் சாப்பிடு'' என்று அவனுக்குப் புத்திமதி கூறினாள்.

இயல்பிலே நல்ல பையனான கார்த்திக்கும் தன் அத்தை கூறிய அறிவுரைப்படி அன்று முதல் ஒழுங்காய்ச் சாப்பிட ஆரம்பித்தான். அதுமட்டுமல்ல, தன் தந்தையிடம் கூறி அந்தப் பிச்சைக்காரர்களில் சிலருக்கு வேலையும் வாங்கிக் கொடுத்தான்.





பத்திரிகைப் பையன் பாலு

ஆர்.ராதாகிருஷ்ணன்

"சார்,பேப்பர்" என்ற இனிய குரல் கேட்டு இராமநாதன் அரைகுறை உறக்கத்தில் இருந்து எழுந்தார். அவசரமாகத் தான் தங்கிய விடுதி அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். இனிமைக் குரலுக்கு நேர் எதிரான தோற்றத்துடன், கிழிந்த சட்டையுடனும், எண்ணெய் இல்லாத தலை முடியுடனும் நின்ற அந்தப் பேப்பர்க் காரச் சிறுவனைப் பார்த்ததும் எரிச்சல் அடைந்தார்.

"போடா, விடியற்காலையிலே வந்து தொந்தரவு செய்யாதே!" என்று கோபத்துடன் அந்தச் சிறுவனை விரட்டினார்.

மீண்டும் தம் அறைக்குத் திரும்பிய அவர், தம் மனைவியிடம், "பிச்சைக் காரப் பயல் மூஞ்சியிலே இன்றைக்கு விழித்திருக்கிறேன். இன்று முழுவதும் தொல்லைதான். இன்றைய ராசி சரியாய் இருக்காது" என்றார், ஆத்திரத்துடன்.

இராமநாதன் மதுரையைச் சேர்ந்த பெரிய செல்வந்தர். கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலைக் கண்டு அம்மன் தரிசனம் பெற மனைவியுடனும், தம்முடைய இரண்டு குழந்தைகளுடனும் வந்துள்ளார். அவர் கன்னியாகுமரியில் உள்ள ஒரு விடுதியில் தங்கியுள்ளார். அங்கேதான் பேப்பர் விற்கும் சிறுவனைக் கண்டு எரிச்சலுடன் பேசினார். பேப்பர் விற்ற அந்தச் சிறுவனின் பெயர் பாலு.

இராமநாதன் தன் மனைவியுடனும், குழந்தைகளுடனும் 'விவேகானந்தர் பாறை', 'காந்தி மண்டபம்' போன்ற இடங்களைப் பார்த்துவிட்டு, மாலை ஆறு மணி அளவில் அம்மன் கோவில் சென்று தரிசனம் செய்தார். அதன் பிறகு, காற்று வாங்கக் கடற்கரைக்குச்சென்று, ஓர் ஓரத்தில் குடும்பத்துடன் அமர்ந்தார்.

"சார், முறுக்கு! முறுக்கு!" என்ற துடிப்பான, வேகமான குரல். காலையில் பேப்பர் விற்ற அதே சிறுவன் முறுக்குடன் அவர்களை நோக்கி வந்தான். இராமநாதன் கோபத்துடன் அவனை விரட்டினார். இராமநாதனுக்கு அந்தச் சிறுவனுடைய கிழிந்த சட்டையும் எண்ணெய் இல்லாத தலை முடியும் வெறுப்பை ஊட்டின

"இப்படிப்பட்ட பயல்களிடம் குழந்தைகளுக்கு முறுக்கு வாங்கிக் கொடுத்தால், உடனே வியாதி வந்துவிடும்" என்று இராமநாதன் மனைவியிடம் கூறினார்.

மணி எட்டைத் தாண்டியதால் இருட்டு என்னும் அரக்கி தன் ஆட்சியைச் செலுத்திக் கொண்டிருந்தாள். ஆங்காங்கே மின் விளக்குகள் கண் சிமிட்டித் தங்களை அடையாளம் காட்டிக் கொண்டிருந்தன. எனினும்,

சில இடங்களில் மின் விளக்குக் கம்பங்கள், விளக்குகள் இல்லாமல் வெறும் கம்பங்களாய் நின்று கொண்டிருந்தன. எனவே, அந்தச் சில இடங்களில் இருட்டைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை.

ஏதோ இன்பமான நினைவுகளுடன் எட்டு மணி வரை நேரம் போவது தெரியாமல் பொழுதுபோக்கிய அவர் இப்போது இருட்டைக் கண்டு உள்ளூறப் பயந்துகொண்டே விடுதியை நோக்கிக் குடும்பத்தாருடன் நடந்து கொண்டிருந்தார்.

ஓர் இருட்டுப் பகுதியிலிருந்து மூன்று முரடர்கள் அவர்களை வழிமறித்தனர். அந்த இடத்தில் அப்பொழுது ஆள் நடமாட்டமே இல்லை. அந்த இருட்டிலும் முரடர்களிடம் இருந்த கத்தி பளபளவென்று மின்னியது.

"ம்... உங்களிடம் இருக்கும் பணத்தையும், நகைகளையும் எடுத்துத் தாருங்கள்... இல்லாவிட்டால்....?" என்று கத்தியைக்காட்டி ஒரு முரடன் மிரட்டினான்.

இராமநாதனின் கண்கள் அங்கும் இங்கும் யாராவது துணைக்கு வருவார்களா என்று பார்த்தன. அதைக் கவனித்த ஒரு முரடன், "யாரும் வர மாட்டார்கள்" என்று அதட்டலுடன் சொன்னான்.

முதலில் காதிலிருந்த வைரத் தோட்டைக் கழற்றத் தொடங்கினார் இராமநாதனின் மனைவி. இராமநாதன் பாக்கெட்டிலிருந்த பணத்தை எடுக்கப் பைக்குள் கைவிட்டார்.

அப்போது, அருகில் இருந்து விசில் ஊதும் ஒலி கேட்டது. சத்தத்தைக் கேட்டதும் முரடர்கள் திடுக்கிட்டனர். "டேய், போலீஸ் வருகிறது! தப்பிவிடுவோம்" என்றான் ஒருவன்.

அடுத்த வினாடி, அந்த முரடர்கள் மூவரும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவிட்டனர்!

இராமநாதனும் அவர் குடும்பத்தினரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். சில நிமிடங்கள் ஆகியும் போலீஸார் எவருமே வரவில்லை. ஆனால், விசில் சத்தம் மட்டும் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது. சிறிது நேரம் கழித்து, பேப்பரும், முறுக்கும் விற்ற அந்தச் சிறுவன் அங்கு வந்தான். அவன் கையில் விசில் இருந்தது.

"சார், முரடர்கள் உங்களை வழி மறித்ததைக் கண்ட நான்தான் என்னிடம் உள்ள விசிலால் ஒலி எழுப்பி அவர்களை ஓடவைத்தேன்" என்றான்.

தம்மால் கேவலமாகப் பேசி விரட்டப்பட்ட அந்தச் சிறுவனே தங்களைக்

சின்னப் பாப்பா



சின்னப் பாப்பா, சின்னப் பாப்பா
சிரிக்கிறாள்பாரு — அந்தச்
சிரிப்பினோடு கையை ஆட்டி
அழைக்கிறாள்பாரு!

அப்பா வந்தால் அழகுச் சிரிப்பை
அள்ளித் தெளிக்கிறாள் — அங்கே
அம்மா வந்தால் இருகை நீட்டி
அணைக்கச் சொல்கிறாள்!


அப்பா வைத்த பேனா எடுத்தே
'ஆ'னா எழுதுறாள் — அப்போ
தப்பி அதனைப் பறிச்சிக் கிட்டா
தரையில் புரளுறாள்!

கோபம் வந்து அடிக்கப் போனால்
கொஞ்சி மயக்குறாள் — கொஞ்சும்
குழந்தை அவளோ நம்மை யெல்லாம்
குழையச் செய்கிறாள்!

சும்மா கிடக்கும் பொம்மைக் கெல்லாம்
தோழி யாகிறாள் — தினம்
சுற்றிச் சுற்றி வந்தே என்னைச்
சொக்க வைக்கிறாள்!

பாட்டு: **தி. வி. அரிகிருஷ்ணன்**
புகைப்படம்: **என். ராமகிருஷ்ணா**

துள்ளும் உருண்டை!



ஒருவன் தன் கையிலே வைத்திருந்த ஓர் உருண்டையைத் தரையில் எறிந்தான். அது துள்ளித் துள்ளி ஓடியது. அதைப் பலர் பிடிக்க ஓடினார்கள்.

கொலம்பஸ் மேற்கு இந்தியத் தீவு ஒன்றுக்குச் சென்றபோது இந்தக் காட்சியைக் கண்டார். உடனே அவர்கள் அருகிலே சென்று, ''இது என்ன?'' என்று அந்த உருண்டையைக் காட்டிக் கேட்டார்.

''இதுதான் 'கவுட் ஷுக்' என்றார்கள்.

''அப்படியென்றால்....?''

''அதோ தெரிகிறதே, நெட்டை மரம், அதன் அடிப் பாகத்தை வெட்டினால் பால் வடியும். அந்தப் பாலை உறைய வைப்போம். கட்டியானதும் உருண்டையாக்கி விளையாடுவோம்' என்றார்கள்.

கொலம்பஸ் அந்தத் தீவிலிருந்து அந்த மரத்தின் இலை, துள்ளும் உருண்டை, உறைந்த கட்டி எல்லாவற்றையும் கொண்டுவந்து, ஸ்பெயின் நாட்டு அரசரிடம் கொடுத்தார். அவர் மூலமாக அது எல்லா நாடுகளுக்கும் அறிமுகமானது.

ஆனால், 'கவுட் ஷுக்' என்றால் இப்போதுகூடப் பலருக்குத் தெரியாது. 'ரப்பர்' என்றால் உலகம் முழுவதும் தெரியும்!

காப்பாற்றினான் என்பதை அறிந்த ராமநாதன், வெட்கத்தால் தலைகுனிந்தார். மேலும் அவர், ''எங்களைக் காப்பாற்றிய உனக்கு இதோ என்னுடைய அன்புப் பரிசு!'' என்று ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார். பாலு உடனே கையை நீட்டி அந்த ரூபாய் நோட்டைப் பெற்றுக்கொண்டுவிடவில்லை.

''சார், கடற்கரையில் யாரும் இல்லாததால், வீட்டுக்குத் திரும்பலாம் என்று வந்தேன். சிறிது தூரத்தில் உங்களை முரடர்கள் மிரட்டியதைக் கண்டேன். என்னால் முடிந்ததைச் செய்தேன். இதற்கு வெகுமதியா? வேண்டாம்'' என்று கூறிவிட்டு வேகமாக நடந்தான்.

தூரத்தில், ''முறுக்கு, முறுக்கு'' என்று கேட்ட அந்தச் சிறுவனின் குரல் இராமநாதனின் காதுகளைத் தாக்கியது.

கடைசியாக விடுதியை அடைந்த இராமநாதன், தமக்கு நேர்ந்த துன்பத்தையும், பேப்பர்க்காரப் பையன் காப்பாற்றிய விதத்தையும் விடுதி முதலாளியிடம் கூறி, அந்தச் சிறுவனைப் பற்றிய விவரங்களைக் கேட்டார்.

''அவனா... அவன் பெயர் பாலு... நல்ல இதயம் படைத்தவன். அப்பா இறந்து நாலு வருடங்களிருக்கும்... தன் அம்மாவைத் தன் உழைப்பால் காப்பாற்றுகிறான். காலையில் பேப்பர் வியாபாரம். மாலையில் முறுக்கு அல்லது சுண்டல் வியாபாரம். அவன் இப்போது எட்டாம் வகுப்புப் படிக்கிறான். பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டிய காரணத்தால், புதுச் சட்டைகூட எடுக்காமல் கிழிந்த துணிகளுடன் நாட்களைக் கடத்துகிறான்... அவ்வளவு பணக் கஷ்டம் அவனுக்கு!'' என்று விடுதி உரிமையாளர் மூச்சு விடாமல் சொல்லி முடித்தார்.


இதையெல்லாம் கேட்ட இராமநாதனின் கண்களில் கண்ணீர் அரும்பியது.

விடுதி முதலாளியிடம், 'சார்' இந்த ஆயிரம் ரூபாயை அந்தச் சிறுவனிடம் கொடுத்துவிடுங்கள்... நான் தந்தது என்றால் அவன் வாங்க மாட்டான். நீங்களே உதவுவது போல் கொடுத்து விடுங்கள். தான் துன்பப் புயலில் சிக்கினாலும், பிறருக்குத் துன்பம் வந்த நேரத்தில் உதவுகிறான். நல்ல இதயம் கொண்ட அந்தச் சிறுவன் பணம் இல்லாததால் படிப்பை இடையில் நிறுத்திவிடக் கூடாது. அவனுக்கு உதவுவது என் கடமை'' என்று கூறி ஆயிரம் ரூபாயைக் கொடுத்தார்.

ஆயிரம் ரூபாயைக் கையில் வாங்கிய விடுதி முதலாளியின் கண்களிலும் நீர் அரும்பியது.

ஒன்று சேருங்கள்!

இந்தப் படத்தில் பல உருவங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றையும் இரண்டாக வெட்டி வெவ்வேறு இடத்தில் வைத்திருக்கிறார் ஓவியர் கீதா. எந்தப் பாதி எதனுடன் பொருந்தும் என்று கண்டுபிடியுங்கள்.





6½ மாதத்துக் குழந்தையிலே அதிர்ஷ்டம்

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகிச் சுடர் விடும் மாஸ்டர்கிருஷ்ணானந்துக்கு ஆறரை மாதக் குழந்தையாக இருக்கும்போதே அதிர்ஷ்டம் அடித்து விட்டது! அதேபோல் தொடர்ந்து ஆறரை வயதிலும் ஒரு பெரிய திருப்பம்!

மைசூரில் பிறந்த கிருஷ்ணானந்த் ஆறரை மாதக் குழந்தையாக இருந்தபோது மைசூர் டவுன்ஹாலில் லயன்ஸ் கிளப் நடத்திய கொழு கொழு குழந்தைப் போட்டியில் கலந்து கொண்டான். அப்போது அவனது எடை எட்டு பவுண்ட். நூற்றி ஐம்பது குழந்தைகளில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெள்ளிக் கோப்பையுடன் வீடு திரும்பினானாம்!

மாஸ்டர் கிருஷ்ணாவின் வயது 9.

வீட்டில் கிருஷ்ணா, கிருஷ்ணா என்றே இவனைக் கூப்பிடுகிறார்கள். பரணி நட்சத்திரம். பரணி தரணியாளும் என்பது பழமொழி. இவன் விஷயத்தில் மெய்யாகி விட்டது.

முதல் பரிசு!

''சார் — இதுதான் நான் வாங்கிய முதல் பரிசு'' என்று தனது வெள்ளிக் கோப்பையைக் காட்டினான் கிருஷ்ணா. அப்போது அவன் முகத்தில் ஒரு அலாதி ஆனந்தம்.

''மைசூரில் நர்சரி வகுப்பில் படித்தபோது நான் ஒரு ஃபேன்ஸி டிரஸ் போட்டியில் கிருஷ்ணர் வேஷம் போட்டேன். அதிலும் எனக்கு முதல் பரிசுதான்!'' என்றான். கிருஷ்ணா கிருஷ்ணர் வேஷம் போட்டது பொருத்தமே.

கிருஷ்ணாவின் தந்தை உத்தியோக விஷயமாகச் சென்னைக்கு மாற்றலானார். ஹபிபுல்லா ரோடு கன்னட' சங்கம் பள்ளியில் இங்கிலீஷ் மீடியத்தில் இப்போது மூன்றாம் வகுப்பு படிக்கிறான் கிருஷ்ணா.

''சிறு வயதிலிருந்தே கிருஷ்ணா துடுக்குப் பையன். டி. வி.யில் படம்









பார்த்தால் பாட்டுக்கு ஏற்றபடி ஆடுவான். ரேடியோவில் பாடல் ஒலித்தால் கமல், ரஜினி போல ஆடிக் காட்டுவான். வீடே ஒரே தமாஷாக இருக்கும்'' என்கிறார் கிருஷ்ணாவின் தந்தை.

அப்பனே, பிள்ளையாரப்பனே!

'இரயில் பயணங்களில்' படத்தில் நடிக்க ஒரு சிறுவன் தேவைப்பட்ட-போது குடும்ப நண்பர் ரகு மூலமாக டைரக்டர் டி. ராஜேந்தரை ஸ்வாகத் ஓட்டலில் சந்தித்தோம்.

டைரக்டர் சாருக்கு முன்னால் ''அன்னை ஓர் ஆலயத்தில் ரஜினி சார் பாடும் ''அப்பனே அப்பனே, பிள்ளையாரப்பனே'' பாட்டைப் பாடி ஆடி நடித்துக் காட்டினேன். ரசித்துப் பார்த்த அவர் உடனே அப்படத்தில் நடிக்க என்னை ஒப்பந்தம் செய்தார்.

அடுத்த நாள் காலையில் அண்ணா-நகரில் ஷூட்டிங்.

''ஹலோ அங்கிள் — ஹௌ ஆர் யூ?'' என்று முதன் முதலாக வசனம் பேசினேன். முதல் சீனே ஓ. கே.'' பெருமையோடு சொல்கிறான் கிருஷ்ணா.

காஞ்சியில் களிப்பு!

அப்பா ஆபீசில் ஒரு டின்னர். குடும்பத்துடன் காஞ்சி ஓட்டலுக்குப் போயிருந்தோம். அன்று அபஸ்வரம் ராம்ஜியின் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. எனக்குப் பிடித்தமான பாடல்களை அவர் மேடையில் பாடினார். இடைவேளையில் தைரியமாய் மேடைக்குப் போய் அவர் பாடும்போது நான் ஆட வேண்டும் போல ஆசையாக இருக்கிறது என்றேன். ஒப்புக்கொண்டார்.

கல்யாணராமன் படத்தில் கமல் பாடி நடிக்கும் ''ஆஹா வந்துடிச்சி'' பாட்டை ராம்ஜி சார் பாடினார். நான் டான்ஸ் ஆடினேன். ஒரே கிளாப்ஸ்.

தாத்தா சிவாஜி

''கருடா சௌக்கியமா?'' படத்தில் நான் சிவாஜி சார் பேரனாக நடித்தேன்.

''என்ன தாத்தா, கண்ணெல்லாம் தண்ணியா இருக்கு? பாட்டி அடிச்சாளா?'' என்று அவரிடம் பேச வேண்டும்.

படப் பிடிப்பு துவங்குவதற்கு முன்பு அவரது காலில் விழுந்து வணங்கினேன். கட்டித் தழுவி ஆசிர்வாதம் செய்த போது சந்தோஷமாக இருந்தது.

தொடர்ந்து ஐ. வி. சசி சார் டைரக்ஷனில் ஜான் ஜாஃபர் ஜனார்த்தனம், சிந்தூர சந்திக்கும் மனம் போன்ற படங்களிலே நடிக்கிறேன்!

முட்டியிலே அடி!

குர்பானி இந்திப் படத்தில் வரும் 'லேலா மை லேலா' பாடலும் அதற்கு அம்ஜத்கான் டிரம் வாசிப்பதும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. போன வருடம் புத்தாண்டு தினத்தன்று 'நெஞ்சில் ஓர் ராகம்' படத்தில் தியாகராஜன் சார் சரிதா அக்காவின் பிள்ளையாக நடிக்க ஒப்பந்தமானேன். அம்மாவை ஏமாற்றி விட்டு அப்பா ஓடிவிடுவார். அவர் டிரம்ஸ் வாசிப்பதில் எக்ஸ்பர்ட். ஒரு நாள் தற்செயலாக நான் பென்சிலால் டிரம்ஸ் வாசிப்பது போலக் கையை அசைப்பேன். அம்மாவுக்கு (சரிதா) என்மீது கோபம் வந்து அடிப்பார்.

இந்த சீனில் எனக்கு கிளிசரின் போட்டார்கள். அழத் தெரியவில்லை. டைரக்டர் சார் சரிதாவிடம் ''பரவாயில்லை. இவன் நம்ம பையன்தான். முட்டியிலே ஓங்கி அடியுங்க'' என்றார். காட்சியில் அடி விழுந்தது. உண்மையிலேயே அழுது நடித்தேன்.

நெஞ்சில் ஓர் ராகம் படத்தில் நான் டிரம்ஸ் வாசிக்கும் காட்சியைப் பலர் பாராட்டினார்கள். சந்தோஷப் பட்டேன்.

'இனு', 'சுப முகூர்த்தம்', 'உயிருள்ளவரை உஷா' படங்களில் நடித்து வருகிறேன். டைரக்டர் ராஜேந்தர் சார் என்னை மிகவும் பிரியத்துடன் நடத்துகிறார். 'ஆனந்த்' என்று செல்லமாகக் கூப்பிடுவார்.

ஊட்டியில் ஷூட்டிங்

ஊட்டியில் சில்ட்ரன்ஸ் பிலிம் சொஸைட்டி தயாரித்த 'எங்களால் முடியும்' படத்தில் அனாதை ஆஸ்ரமப் பையனாக நடித்தேன். படப் பிடிப்புக் காக ஊட்டிக்குப் போயிருந்தபோது ஜாலியாக ஊரைச் சுற்றிப் பார்த்தேன்.

எனக்கு கிரிக்கெட் ஆடப் பிடிக்கும். தவிர நன்றாக கேரம் ஆடுவேன். நிறைய டீ. வி. பார்ப்பேன்.

சினிமாவில் நடிப்பதால் படிப்பைக் கோட்டை விடுவேன் என்று நினைக்கிறீர்களா? மிட் டேர்மில் என் மார்க்கைப் பாருங்கள்.

இங்கிலீஷ் 98%, ஹிஸ்டரி 99%, ஜியாகரஃபி 99%, சயின்ஸ் 98%, இந்தி 99%,— தாய்மொழியான கன்னடத்தில் 8%தான்.

''நல்லா படிச்சுப் பெரிய ஆபீஸராகணும், அமிதாப் ரஜினி மாதிரி பெரிய ஸ்டாரும் ஆகணும் என்பது எனது ஆசை.'' என்கிறான் மாஸ்டர் கிருஷ்ணானந்த்!

- பேட்டி: மன்னை சௌரிராஜன்

இலைக்கோசும், பூக்கோசும்

சமையல் செய்து சாப்பிடுகிறோமே முட்டைக்கோசு, அதை இலைக்கோசு என்றும், காலிபிளவரை பூக்கோசு என்றும் சொல்வார்கள்.

இதற்குக் காரணம் என்ன?

தாவரத்தின் இலைப் பாகம்தான் முட்டைக் கோசு; தாவரத்தின் பூவாக இருப்பது காலிபிளவர்.



மூன்று நிகழ்ச்சிகள்



பொன்னை விட உயர்ந்தது...?

மகாத்மாஜி சிறுவராக இருந்தபோது, லண்டன் மெட்ரிக் தேர்விலே, பொது அறிவு பற்றிய வினாத்தாளில் ஒரு கேள்வி கேட்டிருந்தனர். "பொன்னைவிட உயர்ந்தது எது?" என்பதே அக் கேள்வி. அதற்கு காந்திஜி எழுதிய விடை:

சத்தியம்

கிளையை முறிப்பதா?

ஒரு முறை காந்திஜியின் நண்பர் ஒருவருக்கு இரண்டு வேப்பிலை தேவைப்பட்டது. அவர் வேப்பமரக்கிளை ஒன்றை ஒடித்து வந்து விட்டார்.

இதைக் கண்ட காந்திஜி அவரைப் பார்த்து, "இது கொடுமையாகும். நமக்குத் தேவைப்படும் இரண்டு மூன்று இலைகளுக்காக நாம் மரத்திடம் மன்னிப்புக் கோர வேண்டியிருக்கையில், இப்படி ஒரு கிளையையே முறிப்பது தவறும் வீணும் ஆகும்" என்றார்.

அன்று சொன்னவை

காந்திஜியின் நண்பர் ஜம்னாலால் பஜாஜின் மகன் கமலநயன் பஜாஜ் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்ற போது, காந்திஜி கூறிய அறிவுரைகள்:

1. அளவோடு உரையாடு.
2. எவர் சொல்வதையும் கேட்டுக்கொள். ஆனால், நேர்மையானதைச் செய்.
3. ஒவ்வொரு நிமிடமும் வீணாகாமல் பார்த்துக் கொள். எந்த வேலையையும் உரிய காலத்தில் செய்து முடித்திடு.
4. எளிய வாழ்வையே மேற்கொள். செல்வச் செருக்குக் கொள்ளாதே.
5. நீ செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு வைத்திரு.
6. உன்னிப்பாய்க் கற்றிடு.
7. ஒழுங்காக உடற்பயிற்சி செய்.
8. அளவுடன் உணவு கொள்.
9. அன்றாடம் நிகழ்வதை நாள் குறிப்பில் பதித்துக் கொள்.

அன்று காந்திஜி சொன்ன அறிவுரைகள் இன்றும் அனைவருக்கும் பொருந்தும்.

ஆதாரம்: —காந்திஜியின் உரையமுதம்—
தந்தவர்: வசந்தா கோவிந்தன்

புதிர் மன்றம்


தொகுத்தவர்: கடத்தூர் நெடுமிடல்

புதிர் 1

புதிர் மன்றத்தில் ஓர் உறுப்பினர் சேர வந்தார். அவரது வயது என்ன என்று கேட்டபோது அவர் புதிரான முறையில் பதில் கூறினார்:

''மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு எனக்கு என்ன வயது ஆகுமோ, அதை மூன்றால் பெருக்கி, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஆன வயதைப் போல் மூன்று மடங்கான வயதை அதிலிருந்து கழித்தால் எத்தனை வருமோ அதுதான் என் வயது.''

அப்படியானால் அவர் வயது என்ன?



புதிர் 2

என் தாத்தா வைத்திருந்த பழைய பெட்டியைத் திறந்து பார்த்தேன். சில சிலந்திப் பூச்சிகளும், சில வண்டுகளும் அதில் இருந்தன. அவைகளின் மொத்த எண்ணிக்கை 8. அவைகளின் கால்களை எண்ணிப் பார்த்தேன். மொத்தம் 54. பெட்டியில் இருந்த சிலந்திகள் எத்தனை? வண்டுகள் எத்தனை?

புதிர் 3

ஒரு மாங்காய் வியாபாரி தன்னிடமிருந்த மாம்பழங்களை இரண்டு இரண்டாகக் கூறு வைத்தார். 1 மிச்சம் வந்தது. மூன்று மூன்றாகக் கூறு வைத்தார். 2 மீதி நின்றது. நான்கு நான்காகக் கூறு வைத்தார். 3 மீதி வந்தது. ஐந்து ஐந்தாகக் கூறுவைத்தபோது 4 மீதி நின்றது. ஆறு ஆறாகக் கூறு கட்டிய போது 5 மாம்பழங்கள் மீந்தன. ஏழு ஏழாகக் கூறு பிரித்தபோது எதுவும் மிஞ்சவில்லை. அப்படியானால் அவரிடமிருந்த மொத்த மாம்பழங்கள் எத்தனை?



புதிர் 4

AAA
BBB
CCC
_____
BAAC
_____

இது ஒரு கூட்டல் கணக்கு. எழுத்துக்கள் எந்த எந்த எண்களைக் குறிக்கின்றன?

புதிர் 5

தித்தித்தது

இந்த இனிக்கும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு உடையவை. என்ன தொடர்பு?

இதே போல வேறு சொல் இருக்கிறதா?



எண் கோட்டை

உலக கணித மேதை ராமானுஜம் பிறந்த நாள் 22-12-1887.

அவர் தம்முடைய பிறந்த நாளை வைத்து ஓர் எண் கோட்டையைக் கட்டினார். அதைக் கீழே காணுங்கள்.

22	12	18	87
21	84	32	2
92	16	7	24
4	27	82	26

இதன் முதல் வரிசையில் பிறந்த நாள் இருக்கிறது.

நெடுக்கு வரிசை, குறுக்கு வரிசை, மூலை வரிசை – எப்படிக் கூட்டினாலும் எண்களின் கூட்டுத் தொகை 139 வரும்

இதேபோல் உங்கள் பிறந்த தேதியை வைத்து, எண் கோட்டை கட்ட முடியுமா? முயலுங்கள்.

எண் கோட்டை எப்படிக் கட்டுவது ?

பதினாறு கட்டங்களில் குறுக்கு வரிசை, நெடுக்கு வரிசை, மூலைவரிசை ஆகிய எந்த வரிசையில் கூட்டினாலும் ஒரே கூட்டுத் தொகை வருமாறு பதினாறு எண்களை அடைப்பதற்கு 'எண் கோட்டை' என்று பெயர்.

எண் கோட்டை கட்டும் முறையை எளிதாகக் கற்றுக்கொள்ளலாம்.

கீழே உள்ள இரு படங்களைப் பாருங்கள்:

16	2	3	13
5	11	10	8
9	7	6	12
4	14	15	1

1	2	3	4
5	6	7	8
9	10	11	12
13	14	15	16

முதல் படத்தில் எப்படிக் கூட்டினாலும் 34 வரும் எண் கோட்டை அமைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது படத்திலிருந்து எண் கோட்டை அமைக்கும் முறையைத் தெரிந்து கொள்ளலாம்.

இரண்டாவது படத்தில் குறுக்காக இரு கோடுகள் போடப்பட்டுள்ளன. முதல் கோடு 1, 6, 11, 16 என்ற எண்களைத் தொட்டுச் செல்கிறது. அந்த எண்களையே 16, 11, 6, 1 என மாற்றி முதல் கட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. அதேபோல் இரண்டாவது கோடு தொட்டுச் செல்லும் 4, 7, 10, 13 என்ற எண்களை 13, 10, 7, 4 என்று மாற்றி முதல் கட்டத்தில் கொடுக்கப் பட்டுள்ளது.

இந்த முறையை நன்கு பழகிக் கொண்டால், நீங்களே இன்னும் பல வகையான எண் கோட்டைகளை அமைத்து, உங்கள் நண்பர்களை வியப்பில் ஆழ்த்தலாம்.

விடைகள்:

புதிர் 1 வயது 18.

புதிர் 2 சிலந்திகள் 3, வண்டுகள் 5 (சிலந்திக்கு 8 கால்கள், வண்டுக்கு 6 கால்கள்)

புதிர் 3 மொத்த மாம்பழங்கள் 119

புதிர் 4
999
111
888
———
1998
———

புதிர் 5 எல்லாம் 'த' வரிசையைச் சேர்ந்தவை.

இளமையில் இவர்கள்

தமிழ்த் தாத்தாவின் குதிரைச் சவாரி!

'தமிழ்த் தாத்தா' என்று நாமெல்லாம் சிறப்பாகப் போற்றுகிற உ. வே. சாமிநாதய்யர், கும்பகோணத்திற்குப் பக்கத்தில் உள்ள 'சூரிய மூலே' என்ற கிராமத்தில் பிறந்தார். அவர் பிறந்தது ஆனந்த ஆண்டு (1855).

அந்த ஊருக்கு அருகிலே ஒரு சாமியார் இருந்தார். அவர் ''ஆனந்த வருஷத்திலே இங்கே ஓர் அதிசயம் நடக்கப் போகிறது'' என்றாராம்.

அந்த ஆண்டிலேதான் தமிழ் நாட்



டுக்கு முதன்முதலாகத் தந்தியும் ரயிலும் வந்தன. அதைத்தான் அதிசயம் என்று அந்தச் சாமியார் கூறியிருக்க வேண்டும் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால், சாமிநாதய்யரின் தாயார், 'நம் குழந்தையின் பிறப்பைத்தான் அதிசயம் என்று அந்தச் சாமியார் கூறியிருக்க வேண்டும்'' என்று நினைத்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

சாமிநாதய்யர் சிறு பிள்ளையாக இருந்தபோது, ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தார். ஆசிரியரின் வீட்டுத் திண்ணைதான் பள்ளிக்கூடம்.

அந்த நாளில் சிலேட்டு கிடையாது. மணலில்தான் எழுதுவார்கள். புத்தகம் கிடையாது. ஏட்டில்தான் எழுதுவார்கள். பென்சில் பேனா கிடையாது. எழுத்தாணியால்தான் எழுதுவார்கள்.

மாணவர்களில் ஒருவனைச் சட்டாம் பிள்ளையாக ஆசிரியர் நியமிப்பார். புத்திசாலி மாணவனாக இல்லாத போனாலும், நல்ல பலசாலியாக இருப்பவனைத்தான் ஆசிரியர் சட்டாம்பிள்ளையாக்குவார். மற்ற மாணவர்களை அடக்கி ஒடுக்க ஆசிரியருக்கு அவன்தான் உதவியாக இருப்பான்.

மாணவர்கள் எல்லாரும் காலையில் ஐந்து மணிக்கே எழுந்து பள்ளிக்கூடம் வந்து விடுவார்கள். ஒவ்வொருவர் கையிலும் ஏட்டுச் சுவடி இருக்கும். பள்ளிக்கூடம் சென்றதும், முதல் நாள் சொல்லிக்கொடுத்த பாடங்களைப் பாராமல் ஒவ்வொருவராக ஒப்பிப்பார்கள்.

ஒருவன் ஒழுங்காக ஒப்பிக்காத போனால், அவனைக் குதிரை போலக் குனிய வைத்து அவன் முதுகிலே சரியாக ஒப்பித்த மாணவனை ஏற்றி உட்கார வைப்பார்கள். குதிரை போல் குனிந்து நிற்பவன் எல்லாப் பிள்ளைகளையும் நடுவில் வைத்துச் சுற்றிச் சுற்றி வருவான். இதற்குக் 'குதிரை யேற்றம்' என்று பெயர்.

சாமிநாதய்யர் பள்ளியில் படிக்கும் போது இப்படி ஒரு முறை குதிரைச் சவாரி செய்திருக்கிறார்!



சர் ஸி. வி. இராமன்—
பதினாலு வயதில் பி.ஏ.

நோபல் பரிசு பெற்ற நம் தமிழ் நாட்டு விஞ்ஞானி சர் ஸி. வி. இராமன், சிறுவராயிருந்தபோது அவருடைய அப்பா சந்திரசேகர், விசாகப்பட்டினத்தில் பௌதிகப் பேராசிரியராக இருந்தார். அப்பாவைப் போல் விஞ்ஞானத் துறையில் பெயர் பெற வேண்டும் என்று இராமன் விரும்பினார். இளம் வயதிலே அறிவியல் நூல்களையெல்லாம் மிகவும் ஆர்வத்தோடு படித்தார். படிக்கும்போது இடையிடையே சந்தேகங்கள் தோன்றும். உடனே அப்பாவிடம், சென்று கேட்பார். அப்பாவும் மிகப் பொறுமையாக அவரது சந்தேகங்களைக் கேட்டு விளக்கம் கூறுவார்.

சிறு வயதிலேயே இராமன் பௌதிக சோதனைகளை அடிக்கடி வீட்டிலேயே செய்து பார்ப்பார். ஒரு முறை அவருக்கு உடம்பு சரியில்லை. படுத்த படுக்கையாக இருந்தார். அந்தச் சமயத்திலும் ஒரு சோதனையைச் செய்து பார்க்க விரும்பினார். அவரது விருப்பத்தை அறிந்த அப்பா, அச் சோதனையைச் செய்ய மகனுக்கு உதவினார். சோதனை வெற்றிகரமாக முடிந்தது. இராமனுக்கு மிகுந்த மகிழ்ச்சி. நோய் கூடக் குறைந்து விட்டது.

விசாகப்பட்டினத்திலிருந்து இராமன் சென்னைக்கு வந்து, மாநிலக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 13தான்!

அவருடைய வகுப்புக்குப் பாடம் நடத்த வந்த ஓர் ஆங்கிலப் பேராசிரியர், அவரது சிறிய உருவத்தைக் கண்டதும், 'யாரோ ஒரு சிறுவன் தவறுதலாக இந்த வகுப்புக்கு வந்துவிட்டானே!' என்று நினைத்தார். பிறகு இராமனைப் பார்த்து,

''நீ யார்? உன் பெயர் என்ன?'' என்று கேட்டார்.



''நான் இந்த வகுப்பு மாணவன். என் பெயர் ஸி. வி. இராமன்''


''என்ன! இந்த வகுப்பு மாணவனா! உன் வயது என்ன?''

''பதின்மூன்று.''

''இதற்கு முன் எங்கு படித்தாய்?''

''விசாகப்பட்டினத்தில் எஃப். ஏ. படித்து முடித்துவிட்டு இங்கு சேர்ந்திருக்கிறேன்.''

ஆங்கிலப் பேராசிரியர் மிகவும் வியப்படைந்தார். இராமன் பதினாலாம் வயதில் பி. ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேறினார். அவர் ஒருவர் மட்டுமே அந்த ஆண்டு முதல் வகுப்பில் தேறியதால், அவருக்கு எல்பின்ஸ்டன் பொற் பதக்கமும், ஆரணி ஜாகிர்தார் பொற் பதக்கமும் கிடைத்தன. மேலும் படித்தார். பி. ஏ. தேர்வில் சென்னை மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறினார்.



சிறு வயதிலே அப்பாவைப் போல் பௌதிகத் துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்று இராமன் ஆசைப்பட்டார். ஆசையுடன் முயற்சியும் மதி நுட்பமும் இருந்தன. பௌதிகத் துறையில் மிகப் பெரும் சாதனை புரிந்து, பிற்காலத்தில் நோபல் பரிசையே பெற்று விட்டார்!





அன்னை தெரேசாவின் ஆசை!

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டான 1979ல் நோபல் பரிசு பெற்ற அன்னை தெரேசா பிறந்தது அல்பேனியா என்னும் நாட்டிலே. அது தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ளது.

தெரேசாவுக்கு மிகச் சிறிய வயதிலிருந்தே ஏசுநாதரிடத்தில் மிகுந்த பக்தி உண்டு. ஏசுநாதர் போதித்தவைகளையெல்லாம் ஆர்வமுடன் கேட்பார். அவற்றின்படி நடக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்.

12 வயதாகும்போதே அவருக்கு இந்தியாவுக்குச் செல்ல வேண்டும்; அங்குள்ள மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

அப்போது வங்காளத்தில் மக்கள் மிகவும் துன்பப்பட்டார்கள். கொடிய வறுமையும், கொள்ளை நோயும் அவர்களை வாட்டி வதைத்தன. ஏராளமான மக்கள் இறந்தனர். வங்காள மக்களுக்கு உதவ ஐரோப்பாவிலிருந்து ஏசுநாதர் சங்கத்தைச் சேர்ந்த சிலர் கல்கத்தாவுக்கு வந்தார்கள்.

'அடடா, நாமும் இப்போது போனால் நம்மால் முடிந்த உதவியைச் செய்யலாமே.' என்று தெரேசா ஏங்கினார்.

ஆனால், அந்த வயதிலே வெகு தூரத்தில் உள்ள ஒரு நாட்டுக்குத் தன் மகளை அனுப்ப மனம் வருமா? பெற்றோர்கள் இசையவில்லை.

ஆனால், தெரேசா தினந்தோறும் ஏசுநாதரின் முன்னால் மண்டியிட்டு வேண்டுவார்: ''ஏசுபிரானே! நான் இந்தியா செல்ல அருள் புரிய மாட்டீர்களா? நான் உங்களை நேசிப்பது போலவே மற்றவர்களையும் நேசிப்பேன். எப்படியாவது இந்தியா சென்று அங்குள்ள மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். இதுவே என் ஆசை; என் பிரார்த்தனை.''

அவரது பிரார்த்தனை வீண் போகவில்லை. பதினெட்டாவது வயதில் அவர் கல்கத்தா வந்தார். ஆதரவற்ற குழந்தைகளுக்கும், அவதிப்படும் ஏழைகளுக்கும், தொழு நோயினருக்கும் தொண்டு செய்யத் தொடங்கினார். தொடர்ந்து இன்றுவரை தொண்டு செய்து வருகிறார்.



புலியும் வேலும்!

புலிக்குட்டிக் கவிராயர் என்று ஒரு புலவர் இருந்தார். அவர் ஒரு ஜமீன்தாரைப் பார்க்கச் சென்றார். வாசலில் நின்ற வேலைக் காரனிடம், ''ஜமீன்தாரிடம் போய், 'புலி வந்திருக்கிறது' என்று சொல்'' என்றார்.

வேலைக் காரன் ஜமீன்தாரிடம் போய், ''புலி வந்திருக்கிறது'' என்றான்.

புலிக்குட்டிக் கவிராயர்தான் அப்படிச் சொல்லியனுப்பியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டார் ஜமீன்தார். அப்போது அவர் வேலுக்கவிராயர் என்பவருடன் பேசிக்கொண்டிருந்தார்.

''இங்கே வேல் இருக்கிறது பயமில்லை. புலியை வரச் சொல்'' என்றார் ஜமீன்தார்.

அக்காவின் கல்யாணம்

லலிதா அன்று மாலை பள்ளிக்கூடம் போகவில்லை. அவள் அக்காவைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வருவதாக அப்பா சொல்லியிருந்தார். வீட்டில் எல்லோரும் பம்பரமாகச் சுழன்று வேலை செய்து கொண்டிருந்தார்கள். லலிதாவுக்கு எல்லாமே புதுமையாக இருந்தது. அடுக்களைக்குள் நுழைந்தாள். அங்கே அவளது தாயார் லட்சுமி அம்மாள் பலகாரங்கள் எல்லாம் செய்துகொண்டிருந்தாள்.



இனிப்பு வகைகளைக் கண்டதும் லலிதாவின் வாயில் எச்சில் ஊறியது. இனிப்பு என்றாலே அவளுக்கு உயிர்! அம்மாவிடம் ஆசையாகக் கேட்டாள். ஆனால், மாப்பிள்ளை வீட்டார் வந்து போனதும் தருவதாக அம்மா சொல்லிவிட்டாள்.

வாசலில் கார் சத்தம் கேட்டது. எல்லாரும் மாப்பிள்ளை வீட்டாரை வரவேற்க ஓடினார்கள். மாப்பிள்ளை வீட்டார் கூடத்தில் அமர்ந்தனர். லலிதாவின் அக்காவை லட்சுமி அம்மாள் கூடத்துக்கு அழைத்துச் சென்றாள். பெண் பார்த்து முடிந்ததும் எல்லாரும் சிற்றுண்டி சாப்பிட்டனர்.

பிறகு, ''மிஸ்டர் விஸ்வநாதன்! உங்கள் பெண்ணை எங்களுக்கு மிகவும் பிடிச்சிருக்கு! ஆனால், பெண்ணுக்கு இன்னும் பத்துப் பவுன் நகை அதிகமாகப் போடணும்! அப்பத்தான் இந்தக் கல்யாணம் நடக்கும். உங்கள் முடிவை இந்த வாரக் கடைசிக்குள் தெரிவியுங்கள்'' என்று சொல்லிப் புறப்பட்டு விட்டார் மாப்பிள்ளையின் தந்தை.

வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டுத் திரும்பிய லலிதாவின் தந்தை விஸ்வநாதன் அப்படியே சோபாவில் சாய்ந்தார். இன்னும் பத்துப் பவுனுக்கு எப்படி ஏற்பாடு செய்வதென்று தெரியாமல் அவர் கலங்கினார். லட்சுமி அம்மாள் அவருக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

நாலு நாட்கள் கழிந்தன. அன்று லலிதாவின் பள்ளியில் ஆண்டுவிழா! படிப்பிலும் விளையாட்டிலும் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு அமைச்சர் ஒருவர் பரிசுகள் வழங்கினார். லலிதாவுக்கும் சில பரிசுகள் கிடைத்தன.

விழா முடிந்ததும் தான் பெற்ற பரிசுகளைத் தோழிகளிடம் காட்டி மகிழ்ந்துவிட்டு, லலிதா மட்டும் தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். அப்போது அவள் கால்களில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. குனிந்து எடுத்தாள் லலிதா. அது ஒரு தங்கச் சங்கிலி! பளபளவென்று மின்னியது அந்தச் சங்கிலி. நல்ல கனமாகவும் இருந்தது.

சிறிது நேரம் யோசித்தாள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவளாய்த் தலைமை ஆசிரியரின் அறைக்குள் நுழைந்தாள். நடந்தவற்றை விளக்கித் தான் கண்டெடுத்த தங்கச் சங்கிலியை அவரிடம் ஒப்படைத்தாள் லலிதா. ''உன் நேர்மையைப் பாராட்டுகிறேன் லலிதா!'' என்று தலைமையாசிரியர் அவள் முதுகில் தட்டிக் கொடுத்தார். ஒரு நல்ல

மு. சாயபு மரைக்காயர்

செயலைச் செய்த முடிவோடு வீடு திரும்பினாள் லலிதா.


மறு நாள் மாலை.

கூடத்தில் அமர்ந்து வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டிருந்தாள் லலிதா. அப்போது வாசலில் ஒரு கார் வந்து நின்றது. 'யாராக இருக்கும்?' என்று எட்டிப் பார்த்த விஸ்வநாதன் வியப்புக்கு ஆளானார். ஐந்து நாட்களுக்கு முன்பு வந்த மாப்பிள்ளை வீட்டார் தான் வந்தார்கள்.

''விஸ்வநாதன்! உங்களுக்கு லலிதா என்று ஒரு மகள் இருக்கிறாள் அல்லவா?'' வந்ததும் வராததுமாகக் கேட்டார் மாப்பிள்ளையின் தந்தை. ''ஆமாம், இவள்தான் லலிதா!'' என்று கூடத்தில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த லலிதாவை அவருக்கு அறிமுகப் படுத்தினார் விஸ்வநாதன்.

லலிதாவை அருகே அழைத்து, அவளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார் மாப்பிள்ளையின் தந்தை. லலிதாவின் அப்பாவுக்குக் காரணம் புரியவில்லை. தன்னோடு வந்த சிறுமியை விஸ்வநாதனுக்கு அறிமுகப்படுத்தி, ''இவள் என் மகள் கமலா. லலிதா படிக்கும் பள்ளியில்தான் இவளும் படிக்கிறாள். நேற்றுப் பள்ளி ஆண்டு விழாவுக்குப் போனபோது இவளுடைய அம்மா தன் தங்கச் சங்கிலியை இவளுக்குப் போட்டு அனுப்பி யிருக்கிறாள். அதை இவள் எங்கோ தொலைத்து விட்டாள்.

''அந்தச் சங்கிலி எங்கள் பரம்பரைச் சொத்து. அது காணமற் போனதால் நாங்கள் மிகவும் கவலை அடைந்தோம். இன்று காலை பள்ளிக்குச் சென்று விசாரித்தபோது தலைமை ஆசிரியர் எங்கள் சங்கிலியைக் கொடுத்து அதை எடுத்துத் தந்த லலிதாவைப் பற்றிய விவரத்தையும் சொன்னார். லலிதா உங்கள் மகள் என்பதை அறிந்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. லலிதாவைப்



பாராட்டத்தான் வந்தோம்.'' என்றார் மாப்பிள்ளையின் தந்தை.

கையிலே கொண்டு வந்த பரிசுப்பொருட்களை லலிதாவிடம் கொடுத்துப் பாராட்டிய அவரே தொடர்ந்து பேசினார்:

''விஸ்வநாதன்! நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். பண்பாடு நிறைந்த குடும்பத்தில் வளர்கின்ற குழந்தைதான் இவ்வளவு நேர்மையாக இருக்க முடியும். ஆகவே, உங்களோடு சம்பந்தம் செய்ய நான் விரும்புகிறேன். உங்கள் மூத்த மகள்தான் எங்கள்வீட்டு மருமகள்! நீங்கள் நிறைய நகை போட வேண்டாம். உங்கள் வசதிப்படி எது செய்தாலும் அது எனக்குச் சம்மதமே! அடுத்த மாதமே கல்யாணத்தை வைத்துக்கொள்வோம்!''

லட்சுமி அம்மாளும், விஸ்வநாதனும் மகிழ்ச்சி நிறைந்த அதிர்ச்சியில் மலைத்து நின்றனர். அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட மாப்பிள்ளையின் தந்தை லலிதாவின் கன்னத்தில் அன்போடு செல்லமாகத் தட்டிவிட்டுச் சென்றார்.

தம் மகளை அருகே அழைத்து அணைத்துக் கொண்டார் விஸ்வநாதன். ''லலிதா, உன் அக்காவின் கல்யாணம் உன் நேர்மைக்குக் கிடைத்த பரிசம்மா!'' என்று அவளை ஆரத் தழுவி உச்சி மோந்தார்.

நேர்மைக்குக் கிடைத்த பெருமையை நினைத்து லலிதா பெரிதும் மகிழ்ந்தாள்.



உழைப்பும், மதிப்பும்

புலேந்திரன்

பாலன், வேலன் இருவரும் ஆறும் வகுப்பில் படித்து வந்தார்கள்.

பாலனின் தந்தை சிங்கப்பூரில் இருந்தார். அவர் ஆண்டுக்கு ஒரு முறை ஊருக்கு வந்துவிட்டுப் போவார். பாலன் தன் தாயாருடன் கிராமத்தில் வசித்து வந்தான்.

பாலனின் தந்தை கடந்த ஆண்டு ஊருக்கு வந்தபோது ஒரு மச்சு வீடு கட்டினார். அதற்கு முன்பே அந்த ஊரில் நான்கு ஏக்கர் நஞ்சை நிலமும், ஒரு ஏக்கர் புஞ்சையும் வாங்கி இருந்தார். அவர் ஊருக்கு வரும்போது ஒவ்வொரு முறையும் பாலனுக்கு விலை உயர்ந்த சட்டைத் துணிகள் வாங்கி வருவார்.

பாலனின் நண்பர்கள் அவனிடம், ''உனக்கென்னடா?... சிங்கப்பூரார்-வீட்டுப் பிள்ளை!'' என்பார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதைக் கேட்பதில் பாலன் மகிழ்ச்சி அடைவான்.

வேலனின் தந்தை அந்த ஊரில் ஒரு சிறிய காய்கறிக் கடை வைத்திருந்தார். பள்ளிக்கூடத்திற்குச் சென்ற நேரம் போக மற்ற நேரங்களில் வேலன் தன் தந்தைக்கு உதவியாகக் கடையில் இருப்பான்.

பாலனுக்கு, தான் பணக்கார வீட்டுப் பிள்ளை என்ற செருக்கு இருந்தது. ஆகவே, அவன் வேலனை நண்பனாக மதிப்பதில்லை. அவனைப் பார்க்கும் போதெல்லாம் ''சொத்தைக் கத்தரிக்காய்'' என்று சொல்லி ஏளனம் செய்வான்.

''ஏன் இப்படிச் சொல்கிறாய்?'' என்று வேலன் கேட்டால்,


''நீ காய்கறிக் கடைக்காரர் வீட்டுப் பிள்ளைதானே! அதனால்தான் அப்படிச் சொன்னேன்'' என்பான் பாலன்.

ஆண்டுத் தேர்வு நடந்து கொண்டிருந்தது.

அதற்கு ஒரு மாதத்துக்கு முன்னமே பாலனின் தந்தை ஊருக்கு வந்துவிட்டார். அவர் வந்ததிலிருந்து பாலன் அதிக மகிழ்ச்சியுடன் காணப்பட்டான். வேலனை முன்னைவிட அதிகமாக ஏளனம் செய்து வந்தான்.

பள்ளியில் ஆண்டு விழா நடந்தது. ஆண்டுவிழாவில் பேசுவதற்காகப் பாலனின் தந்தை அழைக்கப் பட்டிருந்தார். அதில் பாலனுக்குப் பெருமை.

நண்பர்களிடம், ''என் தந்தைக்கு எவ்வளவு பெருமை பார்த்தீர்களா?'' என்று சொல்லிக்கொண்டிருந்த பாலன், அப்போது அங்கு வந்த வேலனைப் பார்த்துவிட்டு, ''என் தந்தை காய்கறி வியாபாரம் செய்தால் இப்படிப் பட்ட பெருமை கிடைக்குமா?'' என்றான்.



அவன் அப்படி ஏளனம் செய்தது தன் காதில் விழாதது போல் வேலன் போய் விட்டான்.

விழா தொடங்கியது.

பாலனின் தந்தை பேசும்போது, தன்னுடைய கடந்த கால நிலைமையைப் பற்றிக் கூறினர். அந்தச் சிற்றூரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த அவர் சிறு வயதிலேயே சிங்கப்பூருக்குச் சென்றதைப் பற்றிச் சொன்னர்.

அவர், ''குழந்தைகளே! சிங்கப்பூரில் நான் என்ன வியாபாரம் செய்கிறேன் தெரியுமா?... கடலை வியாபாரம்! ஆம், முன்பெல்லாம் பள்ளிக்கூடங்களின் எதிரிலே போய் நின்று, கூடையிலே கடலையை வைத்துக் கொண்டு உங்களைப் போன்ற பள்ளிக் குழந்தைகளிடம் வியாபாரம் செய்வேன். இன்றும் அங்குள்ள குழந்தைகள் என்னை, 'கச்சாங்காரர்' என்று அன்புடன் அழைப்பார்கள். நான் வியாபாரத்தில் படிப்படியாக உயர்ந்து, இப்போது மூட்டை மூட்டையாகக் கடலையை வரவழைத்து மொத்தமாக வியாபாரம் செய்கிறேன்!''

அவர் இப்படிச் சொன்னதைக் கேட்டதும், பாலனின் நண்பர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. அவர்கள் எல்லோரும் பாலனின் முகத்தைப் பார்த்தார்கள்.

பாலனுக்குப் பலத்த அதிர்ச்சி! அவன் தன் நண்பர்களைப் பார்க்க விரும்பாதவன் போல் தலையைக் கீழே கவிழ்த்துக் கொண்டான்.

பாலனின் தந்தை மேலும் பேசும்போது, ''செய்யும் தொழிலில் சிறுமை பெருமை எதுவும் இல்லை. நல்ல வழியில் உழைத்துச் செய்யும் எந்தத் தொழிலும் மதிப்புக்குரியதே. ஏழைக் குடும்பத்தில் பிறந்த நான், இந்த அளவுக்குப் பொருளாதார வசதி பெற்றிருப்பதற்குக் காரணம் – நான் என் தொழிலில் கொண்டிருக்கும் மதிப்பும், தளரா உழைப்பும்தான்'' என்றார்.

விழா முடிந்து எல்லோரும் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

பாலன், தன் நண்பர்களுடன் போகாமல் தனியே நின்று கொண்டிருந்தான். வேலனைப் பார்த்ததும், ''வேலா! இது வரையிலும் உழைப்பின் மதிப்பை அறியாமல் உன்னை ஏளனம் செய்ததற்காக என்னை மன்னித்துவிடு'' என்று வருத்தத்துடன் கூறினன்.

''வருந்தாதே பாலா! நீதான் திருந்திவிட்டாயே'' என்ற வேலன், பாலனின் கரத்தை அன்புடன் பற்றினன்.

இருவரும் கைகோத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்கள்.



சர்க்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர்!

இவர்களுக்கெல்லாம், இவர்களது தாய் தந்தையார் என்ன பெயர் வைத்தார்களோ, தெரியவில்லை. மன்னர்களும் மக்களும் வைத்த பெயர்களே நிலைத்து விட்டன.

மிக இனிமையாகப் பாடல்களை இயற்றியவருக்குச் 'சர்க்கரைப் புலவர்' என்று பெயர் கொடுத்தனர். எப்போதும் சவ்வாதுப் பொட்டு அணிந்து, வந்த முஸ்லிம் புலவருக்கு, சவ்வாதுப் புலவர் என்ற பெயரைச் சூட்டினர்.

இவர்களைப் போலவே பதினேழாவது, பதினெட்டாவது நூற்றாண்டிலே வாழ்ந்த புலவர்களில் சிலரின் பெயர்கள்:

சாந்துப் புலவர்
சீனிப் புலவர்
சீனிச் சர்க்கரைப் புலவர்

மளிகைச் சாமான்களுக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு, மளிகைக் கடைக்காரர் கொடுத்த பில்லை மற்றுமொரு முறை கூட்டிப் பார்த்தான், முரளி.

அவன் கணக்கு சரியாகத்தான் இருந்தது. மூன்றாவது முறையாகக் கூட்டிப் பார்த்தபோதும் நூற்றி இருபது ரூபாய் ஐம்பத்தைந்து காசுதான் வந்தது. ஆனால், பில்லில் செட்டியார் நூற்றுப் பத்து ரூபாய் ஐம்பத்தைந்து பைசா தான் போட்டிருந்தார்.

சரியாகப் பத்து ரூபாய் கூட்டலில் விட்டுப் போயிருந்தது. ''கூலியாகப்

ஏமாற்றாதே! ஏமாறாதே!!

லலிதா செல்லப்பா



பத்து ரூபாய்... இதில் கலர் பாக்ஸ் வாங்கலாம். கருமி மணியிடம் ஜாமெட்ரி பாக்ஸ் ஓசி வாங்க வேண்டாம். இந்தப் பணத்தில் புதிதாக ஒரு ஜாமெட்ரி பாக்ஸ் கூட வாங்கி விடலாம்...'' முரளியின் கற்பனை கடலென விரிந்தது.

''சே...கடைக்காரரின் பணம். அவர் தவறாக விட்டதைத் தெரிந்தும் கொடுக்காமல் போவது தப்பு!'' என்றது அவன் உள் மனம்.

அடுத்த விநாடியே, ''இந்தக் காலத்தில் எவன், கையில் வந்த பணத்தைத் திருப்பித் தருகிறான்? நாம் மட்டும் ஏன் ஏமாளி போல் திருப்பித் தர வேண்டும்? கையில் வந்த பணத்தைத் திருப்பித் தர வேண்டாம்'' என்று அதே மனம் உபதேசம் செய்தது.

''தம்பி... சாமான்களைச் சரியாக எண்ணி எடுத்துக்கொள். அப்புறம் அது குறைகிறது,இது குறைகிறது என்று குறை சொல்லக் கூடாது'' என்ற செட்டியாரின் குரல் அவன் சிந்தனை ஓட்டத்தைத் தடை செய்தது.

பில்லை மடித்துப் பாக்கெட்டில் வைத்துக்கொண்ட முரளி வேகமாகச் சாமான்களைப் பைகளுக்குள் எடுத்துப் போட்டான்.

பணம் பத்து ரூபாய் கிடைத்த மகிழ்ச்சி ஒருபுறம். 'செட்டியார் மீண்டும் பில்லைக் கேட்டுக் கணக்குப் பார்த்து விடப் போகிறாரே!' என்ற பயம் மற்றொரு புறம். அவசரம் அவசரமாகச் செயல்பட்டான்.

''எல்லாம் சரியாக இருக்கிறது செட்டியாரே'' என்று கூறிவிட்டுப் பைகளைச் சைக்கிளில் மாட்டிக் கொண்டு கிளம்பினான் முரளி.

பத்து ரூபாய் தானாக வந்து சேர்ந்த மகிழ்ச்சியில் சைக்கிளை வேகமாக மிதித்தான் முரளி. அவன் மனத்தைப் போலவே சைக்கிளும் உற்சாகமாக, வேகமாக ஓடியது.

• • •

சைக்கிளை உள்ளே விட்டு விட்டுச் சாமான் பைகளை எடுத்து வைத்தபடியே ''அம்மா, உனக்கு ஒரு நல்ல செய்தி!'' என்றான் முரளி.

''என்ன முரளி, ரொம்ப சந்தோஷமாக இருக்கே. என்ன விஷயம்?'' என்றாள் அம்மா.

''அண்ணா எழுதின ஜோக்கை ஆசிரியர் குப்பைக் கூடையில் போடாமல் திருப்பி அனுப்பி யிருப்பார். அதானே அண்ணா!'' என்றாள் அவன் தங்கை ரேவதி கிண்டலாக.

''அட... சீ... போ... பத்து ரூபாய் சுளையாகக் கிடைச்சிருக்கு. அதைச் சொல்ல வந்தா, 'கிண்டலா பண்றே'' என்று அவளை விரட்டிவிட்டு, செட்டியார் தவறாகக் கூட்டிப் போட்டதில் தனக்குக் கிடைத்த பத்து ரூபாய் லாபத்தை விவரித்தான் முரளி.

அவன் சொன்னதை நிதானமாகக் கேட்டாள் அம்மா.

''அம்மா! இந்தப் பணத்தில் எனக்கு ஒரு கலர் பாக்ஸ், ஜாமெட்ரிபாக்ஸ் எல்லாம் வாங்கிக் கொடு'' என்றான் முரளி, பெருமையாக.

''இதோ பார் முரளி! நீ செய்தது பெரிய தப்பு. பிறர் பணத்துக்கு ஆசைப்படக் கூடாது. தவறாகப் போட்டிருப்பது தெரிந்த உடனேயே விஷயத்தைச் சொல்லிப் பணத்தைத் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டும்'' என்றாள் அம்மா.

''போ... அம்மா... எப்பவும் நீ இப்படித்தான். உனக்கு ஒண்ணுமே தெரியாது. எனக்குக் கடவுளாகப் பார்த்துக் கொடுத்த காசு. அதை நான் திருப்பித் தர மாட்டேன்'' என்று பிடிவாதமாகக் கூறினான் முரளி.

முரளியின் பிடிவாதம் அம்மாவுக்குத் தெரியும். அவனை எப்படித் திருத்துவது என்று புரியாமல் சற்றுத் திகைத்தாள்.

''சரி... அப்பா வரட்டும். அவரிடம் சொல். அவர் என்ன சொல்கிறாரோ அப்படிச் செய்யலாம். சாமான்களைப் படி, லிஸ்டைப் பார்த்து எடுத்து வைக்கிறேன்!'' என்று பேச்சை மாற்றினாள் அம்மா.

விட்டுக்கொடுத்துத்தான் முரளியை வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்று உணர்ந்தவளாயிற்றே!

முரளி லிஸ்டைப் படித்தான். அம்மா சரிபார்த்தாள்.

''என்ன முரளி, காப்பிக் கொட்டையைக் காணோம்! பதினைந்து சாமான்களுக்குப் பதினாலுதானே இருக்கு!'' என்றாள் அம்மா.

''என்னம்மா! காப்பிக் கொட்டை இல்லையா?'' தேடிப் பார்த்தான் முரளி. காப்பிக் கொட்டை அங்கு இருந்தால் தானே!

''சரிதான், நீ பத்து ரூபாய் லாபம் கிடைத்த சந்தோஷத்தில் பதினெட்டு ரூபாய்க் காப்பிக் கொட்டையைக் கோட்டை விட்டு வந்திருக்கிறாயே!'' என்றாள் அம்மா.

முரளிக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. அசடு வழிந்தபடி நின்றான்.

கடைக்காரர் ஏமாந்து விட்டார் என்று எண்ணினவன் அவன். ஆனால், அவனே இப்போது ஏமாந்து விட்டது தெரிந்ததும், கடைக்காரர் மீது கோபம் கோபமாக வந்தது அவனுக்கு.

''இப்பப் பார்த்தாயா அம்மா! ஒரு கிலோ காப்பிக் கொட்டையைக் கடைக்காரர் கொடுக்காமல் ஏமாற்றியிருக்கிறார். என்னை மட்டும் பத்து ரூபாயைத் திருப்பிக் கொடு என்கிறாயே'' என்றான் முரளி ஆத்திரமாக.

''முரளி... பிறர் நியாயமாக நடந்து கொள்கிறார்களா என்று ஆராய்வது நமக்கு முக்கியமில்லை. நாம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். சாமான்களைச் சரியாக எண்ணி எடுத்து வராதது உன் தப்பு'' என்றாள் அம்மா.

அப்போது, ''சார்... சார்'' என்ற குரல் கேட்டு வாயிற் கதவைத் திறந்தான் முரளி.

''தம்பி, அவசரத்தில் காப்பிக் கொட்டைப் பாக்கெட்டை எடுத்துக் கொள்ளாமல் வந்து விட்டாயே! முதலாளி உடனே கொடுத்துவிட்டு வரச் சொன்னார்'' என்று கூறிக் காப்பிக் கொட்டையைத் தந்து விட்டு ஓடினான், மளிகைக் கடைக்காரப் பையன்.

அம்மா முரளியைப் பார்த்தாள். அவன் தவற்றை உணர்ந்து தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

''பார்த்தாயா முரளி!... மளிகைக் காரர் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்றாயே! இப்ப என்ன சொல்கிறாய்? அவர் உன்னைப் போலவே நினைச்சிருந்தா என்ன ஆகும்? உன் தவறு உனக்குப் புரிகிறதா? பிறர் ஏமாந்து கொடுப்பது கடவுள் கொடுப்பது இல்லை. அதன் பெயர் திருட்டு! புரிகிறதா?'' என்றாள், அம்மா.

''புரிந்தது அம்மா. நான்தான் தெரிஞ்சு தப்புப் பண்ணி விட்டேன். இனிமேல் இப்படி நடக்க மாட்டேன். மளிகைக் கடைக்காரர் திருப்பித் தரா விட்டால் பதினெட்டு ரூபாய் நஷ்டமாச்சே! அவர் நியாயமாக நடந்து கொண்டு என் தவற்றை எடுத்துக் காட்டி விட்டார். என்னை மன்னித்து விடு அம்மா. இப்பவே ரூபாய்க் கணக்கைச் சொல்லி, பணத்தைக் கொடுத்து விட்டு வருகிறேன்'' என்றான் முரளி.

''உனக்கு நல்ல புத்தி வந்ததே! அதுவே போதும். முதல் தேதி கலர் பாக்ஸ், ஜாமெட்ரி பாக்ஸ் வாங்கித் தருகிறேன்'' என்றாள் அம்மா.

''சரி அம்மா!'' என்றபடி மளிகைக் கடையை நோக்கி சைக்கிளில் சென்றான் முரளி. ரேடியோவில் 'ஏமாற்றாதே, ஏமாறாதே!' என்ற பாடல் ஒலித்தது!

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி


உறுப்பினர் எண், பெயர், முகவரி

116. சு. என். ரெங்கநாதன், 146, வடக்கு உத்திரவீதி, திருச்சி-6
117. ச. சீனிவாசன், 59, பீர்சாண்டி லேன், சென்னை-13
118. பி. ராம்பிரசாத், 16, ஹஸ்திநாபுரம் மெயின் ரோடு, சென்னை-44
119. ஆர். கணேஷ், 127, மெக்கரிக்கர் தெரு, கோவை-2
120. க. நித்யார்த்தி, 26, பழனிக் கவுண்டர் வீதி, கே.கே.புதூர் கோவை-38
121. இரா. கல்யாண், 8, பாரதி ரோடு, கோவை-9
122. எல். பசுபதி, 4, ஹட்கோ காலனி, டாடாபாத், கோவை-12
123. ம.ஜெ. சங்கர்ராமன், IV/5 அரசாங்கக் குடியிருப்பு, சிரியன் கான்டெத் காலனி, கோவை-44
124. பா. முரளிதரன், 1/1, நேதாஜி வீதி, கோவை-37
125. ஆர். சக்திவேல், 32-ஏ, நாராயணன் தெரு, சேலம்-7
126. கே. கணேஷ், 7/127, ஆர். ஈ. நகர், 4வது தெரு, போரூர்-602104
127. பி. சத்தியன், 10, சீனிவாசபுரம், கரூர், 639001
128. கே. சுப்பிரமணியம், S/o கல்யாணசுந்தரம், ரெட்டிவலம்-631052
129. ஜெ. சித்ரா, 10-ஏ, ராஜாஜி ரோடு, சென்னை-45
130. ஆர். எஸ். ராகவன், 66-1, அழகேசன் சாலை, கோவை-11
131. என். செந்தில்குமார், 3/9, மெயின் ரோடு, கோவை-10
132. எஸ். ஜீவி, 1/3, என். ஜி. ஆர். நகர், கோவை-19
133. வி. சங்கரலிங்கம், C/o ஆர். கிருஷ்ணன், நாயமாகுளம் தெரு, நாட்டரசன்கோட்டை முகவை மாவட்டம்
134. இரா. கார்த்திகேயன், 2, வக்கீல் காலனி, கச்சேரி ரோடு, திருத்துறைப்பூண்டி.
135. பி. வி. ராஜலெட்சுமி, 203, நாயக்கர் புதுத் தெரு, மதுரை-1
136. ரா. நடராஜன், எல்-13, எம். கே. காலனி, நெய்வேலி, 2
137. ஜி. ராமமூர்த்தி, 37/1518, இப்பு தெரு, திருவனந்தபுரம்-23
138. கே. எஸ். உன்னிகிருஷ்ணன், 38, சகோதரர் தெரு, நாகர்கோயில்
139. பெ. சரவணன், 25, வேப்பந்தோப்புத் தெரு, திண்டுக்கல்-7
140. என். ஆர். விஜயலட்சுமி, 35, காமராசர் சாலை, சென்னை-28
141. மு. செந்தில்வேலன், 185, பழைய டி. வி.எஸ். தெரு, தேனி, 626531.
142. பி. எஸ். மாரி, 69, டி. வி. சாலை, சென்னை-18
143. ஆர். சி. நந்தகுமார், 29, வேதப்பர் தெரு, செங்கல்பட்டு
144. எஸ். கிரிஜா, 6, பெரியமலையப்பன் தெரு, பெசன்ட் ரோடு, சென்னை-14
145. எம். பி. ஹரிகிருஷ்ணன், 11, முதல் கிராஸ் ரோடு, சென்னை-28
146. எம். பி. முரளி கிருஷ்ணன், 11, முதல் கிராஸ் ரோடு, சென்னை-28
147. ஆர். கே. உஷாராணி, 2/23, எல். குமர கவுண்டர் தெரு, சேலம்-2
148. வி. வசந்தா, 222, டாக்டர் நடேசன் சாலை, சென்னை-5
149. பி. வெங்கடேஷ்வரன், ஆர்.எம்-8, லாயிட்ஸ் காலனி, சென்னை-14
150. ஜி. மீனுட்சி, அலமேலு பவனம், 2வது தெரு, காமராஜ் நகர், கும்பகோணம்-2
151. பா. குருராஜன், 82, செங்கழுநீர் சாலை, ஓட்டேரி, சென்னை-12
152. கே. பத்மகலா, 69, கருகப்பில்லைக்காரத் தெரு, மதுரை-1
153. டி. கார்த்திகேயன், 6, விநயகர் கோயில் தெரு, ஆரணி (வ.ஆ.)
154. கே. விஜயலட்சுமி, C/o சி. கமலக்கண்ணன், மளிகை வியாபாரம், பஜார் தெரு, காவேரிப்பட்டினம் (தர்மபுரி மாவட்டம்)
155. ஆர். சுபா S/o ஜி. ரங்கநாதன், திருக்கண்ணபுரம் (தஞ்சை மாவட்டம்)
156. M. Anbarasi, 83, Bashyam Nagar, Sreerampuram, Bangalore-21
157. ஆர். தனலட்சுமி, D/o வி. இராமலிங்கம், காரூர் கடப்பேரிக்குப்பம், (புதுவை மாநிலம்)-605502
158. மீனு ராமச்சந்திரன், D/o ஆர். இராமச்சந்திரன், Reader in Mathematics, அண்ணாமலை நகர், சென்னை-608002.
159. எஸ். பிரபாகரன், 11, சன்னதி தெரு, திருவிழந்தூர், மயிலாடுதுறை
160. சி. பாலாஜி, 1, நரசிம்மநகர், திருவத்திபுரம் (வ.ஆ.)
161. ஆர். கணேஷ், 8, பெரிய வணிகர் வீதி, குடியாத்தம்
162. ஆர். ஜெயந்தி, பிளாட் 17, பிளாக் 4, சாரதாம்பாள் தெரு, சென்னை-87.
163. என். ஜெயப்பிரகாஷ், 68, வேம்புலி அம்மன் கோவில் தெரு, சென்னை-41
164. கே. பாலசுப்பிரமணியம், 340, வாஞ்சிநாதன் தெரு, சென்னை-87
165. க. கணேஷ், 3, மேல எடத் தெரு, திருச்சி-5
166. கே. ஸ்ரீராம், 16, சுந்தரம் ஐயர் அக்ரஹாரம், தாராபுரம்-638656,
167. ஏ. வேல்ராஜ், 56, திருவள்ளுவர் தெரு, பாடி, சென்னை-50
168. ஆர். கண்ணன், 41, பால் பிள்ளை தெரு, சேலம்-1

169. ரா. சங்கரநாராயணன், 21, வடக்கு ரத வீதி, கல்லிடைக்குறிச்சி
170. ந. வி. கல்யாணராமன், 47, அக்ரஹாரம் தெரு, சென்னை-2
171. பி. ஜெயக்குமார், 17/4, ஏ. கண்ணையன் வீதி, ஈரோடு-3
172. என். மகேஸ்வரி, C/o சாந்தகுமார் ஆஸ்பத்திரி, வலையூர் (திருச்சி மாவட்டம்)
173. த. பெ. சுந்தரவேல் முருகன், பிளாட் எண் 37, டெலிபோன் நகர், ஈரோடு-2
174. ஆர். சுந்தரேசன், 4, மவுனசாமி மடம் தெரு, சென்னை-49
175. அ. மலர் மன்னன், 6, ஆகாட்டம்மன் கோயில் தெரு, விக்கிரவாண்டி-605652
176. எஸ். பாஸ்கரன், 8, அண்ணா நகர், 5, திருமங்கலம், மதுரை
177. வை. பரசுராமன், C/o அரசு ஆரம்ப சுகாதார நிலையம், உப்புலியபுரம், திருச்சிமாவ.
178. ஆ. அழகப்பன், 53டி/4, காமாட்சி நிலையம், புது அக்ரஹாரம் ரோடு, திண்டுக்கல்
179. பு. ஸ்ரீதர், 78-1/2, ஐ. வி. ஏ. காலனி, விருதுநகர்-2
180. க. விசாலாட்சி, D/o வி. கணபதி, அக்ரஹாரம், துகிலி-609804.
181. எஸ். கிருஷ்ணன், 23, டி. எஸ். வி. கோயில் தெரு, சென்னை-4
182. எம். இளங்கோவன், 56, மூன்றும் தெரு, மன்னார்குடி.
183. ம. அன்புச் செழியன், C/o து. மதுரைதுரை, நகராட்சி ஆணையர், சிவகங்கை.
184. கே. எஸ். ஜிக்கிராணி, D/o அ. கனகராசன், பஞ்சாயத்து ஆபீஸ் தெரு, காளையார் கோயில்
185. என். ராஜலட்சுமி, 15, திரு. வி. க. நகர், விருத்தாசலம்.
186. இரா. சுப்பிரமணியன், 2, சம்பத்குமார் தெரு, சென்னை-59.
187. கே. சீனிவாச ராகவன், 1, மூன்றுவது தெரு, இராமநகர், தேவகோட்டை
188. ஜி. செந்தில்குமார், 94, ரிசர்வ் இன்ஸ்பெக்டர் குவார்டர்ஸ், உப்பிலிப்பாளையம்-18
189. க. நீலகண்டன், 59-டி, பென்ஷனர் தெரு, திண்டுக்கல்.
190. வே. அருணாசலம், 8, எம். ஜி. ஆர். தெரு, காவேரிரங்கன் நகர், சென்னை-93.
191. வி. எஸ். ராம்குமாரன், C/o என். வி. சம்பங்கிராமன், வீராஜபள்ளி, நெடுமருதி-635115
192. ர. சத்தியநாராயணன், 58, 'திரிசூல்', நியூ என். ஜி. ஓ. காலனி, சென்னை-88
193. டி. எஸ். ஸ்வர்ணலதா, 43, சரோஜினி வீதி, கோவை-9
194. S. Sriram, 15, Kapadia Building, K. A. Subramaniam Road, Matunga, Bombay-15
195. கே. ராதிகா, 18, கிழக்குத் தெரு, பழமாநேரி, தஞ்சை மாவட்டம்
196. ச. ஆனந்தகுமார், பி-9, என். டி. சி. ஆபீசர்ஸ் காலனி, கோவை-11
197. எஸ். உமாபதி, C/o ஆர்.எஸ். பதி அன் கோ., 214, 215, மேல மாசி வீதி, மதுரை-1
198. க. இரத்தின சியாம், 63, சிதம்பரம் நகர், சாத்தூர்.
199. என். ரவிகிருஷ்ணன், பிளாட் எண். 23, சாஸ்தா தெரு, திருச்சி-21
200. ஜி. கிருஷ்ணகுமார், 29, கருமண்டபம், திருச்சி-1
201. ஆர். சத்தியநாராயணன், 58, முத்தையா தெரு, சென்னை-86
202. என். ரமேஷ், மகேந்திரபள்ளி, சீர்காழி தாலுகா
203. கு. முருகேசன், மகாத்மா காந்தி ரோடு, இரிஷிவந்தியம், கள்ளக்குறிச்சி வட்டம்
204. எஸ். மாதவன், C3/26-F, கைலாசபுரம், திருச்சி-14
205. எம். பவானி, 14, சிவன்கோவில் தெரு, கள்ளக்குறிச்சி (தெ. ஆ.)
206. இரா. செந்தில்குமார், LIG 114 அண்ணாநகர், கடலூர்-1
207. மீ. பட்டாபிராமன், 6-ஏ, பழைய சொக்கநாதர் கோவில் தெரு, மதுரை-1
208. எஸ். கணேஷ், E3/452/F, கைலாசபுரம், திருச்சி—14.
209. ச. வெங்கடேஷ்குமார், 11, வடக்கு வெள்ளாளத் தெரு, பெண்ணாடம், (தெ. ஆ.) 606105
210. அனுராதா, ஆர். பி. ராஜா, 19, மாதவப்பெருமாள் கோயில் தெரு, சென்னை-4
211. ஆர். பகவதியப்பன், பழைய TC 38/394 செந்திட்டை, திருவனந்தபுரம்-695023
212. வி. காயத்திரி, 16, வேலாயுத முதலி தெரு, சென்னை-34
213. எம். செந்தில்ராமன், 11, சின்னக் கடைத் தெரு, திருச்சி-2
214. ஜி. கே. சுதாகர், 8, இராமகிருஷ்ண ஐயர் தெரு, சென்னை-45
215. இ. க. மோகன், 5, 4வது தெரு, சென்னை-61.
216. கே. ஸ்ரீதர், 66, சுப்பையா நகர், தட்டஞ்சாவடி, பாண்டுச்சேரி-9
217. ச. ஸ்ரீகண்டன், 56, அக்ரஹாரம், சின்னமனூர், மதுரை மாவட்டம்
218. வி. சுதர்சனன், சற்குண வீதி, செட்டிகுளம், 629002
219. எஸ். அருண், 7-ஆம் வகுப்பு, 'சி', அரசு மேநிலைப் பள்ளி, பரங்கிப்பேட்டை (தெ.ஆ.)
220. பி. பாஸ்கரன், 55/4, புதுத் தெரு, சிதம்பரம்.
221. க. நளினி, 24, 'கோகுலம்' ஔவை சண்முகம் சாலை, சென்னை-5
222. எல். விஷ்ணுப்ரியா, 57, பாலகோபாலபுரம் வீதி, பொள்ளாச்சி
223. எஸ். செந்தில்நாதன், 27, கோட்டூர் ரோடு, சூளீஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி-6
224. கோ. தாமோதரன், 30-ஏ, யு. கே. தேவர் தெரு, சூலூர், கோவை-2
225. எம். ஆர். ஸ்ரீப்ரியா, 34, சீனிவாசய்யர் தெரு, சென்னை-33.


வி. கல்யாணி (உறுப்பினர் எண் 106) சரியான முகவரி: 13, எஸ். பி. கோயில் தெரு, முதல் சந்து, சென்னை-26.

(இன்னும் வரும்)



ஒரு மினி விளையாட்டு!

குண்டுமணி



சினிமாவிலே அவுட்டோர் படப்பிடிப்பு, இன்டோர் படப்பிடிப்பு என்று சொல்வார்கள். விளையாட்டுக்களிலும் அவுட்டோர் விளையாட்டு, இன்டோர் விளையாட்டு என்று பிரிவுகள் உண்டு. ஹாக்கி, கால் பந்து வெளிப்புற மைதானங்களில் ஆடப்படும் விளையாட்டுகள். டேபிள் டென்னிஸ் விளையாட்டை வீட்டினுள்ளும் இன்டோர் ஸ்டேடியங்களிலும் விளையாடலாம்.

டென்னிஸுக்கு 'மினி' விளையாட்டு டேபிள் டென்னிஸ் எனலாம். இந்த விளையாட்டுக்குத் தேவையான உபகரணங்கள் ஒன்பதடி நீளம், ஐந்தடி அகலமுள்ள ஒரு மேஜை. ஆறு அங்குலம் உயரமுள்ள நைலான் வலை, ஒரு செல்லுலாய்ட் பந்து, ஒரு வட்ட வடிவ ரப்பர் பதிக்கப்பட்ட மட்டை ஆகியவை.

இந்த ருசிகரமான ஆட்டத்துக்கு எண்ணிக்கை 21. ஒரு ஸெட் என்பது மூன்று ஆட்டங்கள், ஐந்து ஆட்டங்கள் ஆடி முடிவெடுக்கப்படும். விளையாட்டின்போது ஆட்டக்காரர்கள் தங்களது ஆடாத வெறுங் கையினை மேஜையின் மீது படும்படி செய்து விடக் கூடாது!

'பிங்பாங்' என்று ஆதிநாளில் பெயருள்ள இந்த விளையாட்டு பிரிட்டனில் ரொம்பவும் பிரசித்தமான ஆட்டம். இந்த விளையாட்டு இன்று உலகெங்கும் பரவியுள்ளது. 1939ம் வருஷம் இன்டர் நேஷனல் டேபிள் டென்னிஸ் பெடரேஷனில் முப்பது நாடுகள் சேர்ந்து கொண்ட பிறகு இதன் மகிமை பெருகியது.

டேபிள் டென்னிஸில் ஒற்றையர் ஆட்டம், இரட்டையர் ஆட்டம் என்று ஆடுவது வழக்கம். டேபிள் டென்னிஸ் மேஜை அநேகமாகப் பச்சை நிற வண்ணத்தில் வெள்ளை நிறக் கோடுகளோடு துலங்கும்.

ரிபரி ஆட்டத்தை நிர்ணயிப்பவர். அவருக்கு அருகில் 'ஸ்கோர் ஷீட்'வைத்துக்கொண்டு எண்ணிக்கை பதிவு செய்து கொள்பவரும் அமர்ந்திருப்பார். எந்தப் பகுதியில் ஆட வேண்டும், யாருக்கு முதலில் சர்வீஸ் என்பதை ஒரு நாணயத்தைப் 'பூவா, தலையா' போட்டு நிர்ணயிப்பார்கள்.

பந்தை மற்றொரு வெறுங் கையின் மத்தியில் வைத்து, (பந்துள்ள கை விளை

யாடும் மேஜைப் பரப்புக்குச் சிறிது உயரத்தில் இருக்க வேண்டும்.) பந்து ஆடுபவரின் களத்தில் முதலில் பட்டு, பிறகு வலைக்கு மேல் எதிரி ஆட்டக்காரரின் களத்தில் பட வைக்க வேண்டும்.

டேபிள் டென்னிஸ் மேஜையில் விளையாடும் களம் 2.74 மீட்டர் நீளமும் 1.525 மீட்டர் அகலமும் கொண்டிருக்கும்.

இரட்டையர் ஆட்டத்துக்கு விளையாடும் களம் இரண்டு பாதியாகப் பிரிக்கப்பட்டு, 3 மில்லி மீட்டர் அகலத்தில் ஒரு வெள்ளைக் கோடு பிரிக்கப்பட்டிருக்கும்.

Rally என்பது பந்து ஆட்டத்தில் இரு பக்கங்களிலும் பாய்ந்து செல்லும் பொழுதைக் குறிக்கும்.

1900-ம் வருஷத்துக்கு முன்பே டேபிள் டென்னிஸ் விளையாடப்பட்டு வந்திருக்கிறது.

முதல் உலக டேபிள் டென்னிஸ் போட்டி 1926ம் வருஷம் நடைபெற்றது. இந்த உலகப் போட்டியில் ஆஸ்திரியா, செக்கோஸ்லோவேகியா, டென்மார்க், இங்கிலாந்து, ஜெர்மனி, ஹங்கேரி, இந்தியா, ஸ்வீடன், வேல்ஸ் ஆகிய நாடுகள் பங்கேற்றன. டேபிள் டென்னிஸ் பெடரேஷனின் முதல் தலைவராக ஐவர் மாண்டகு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1952ம் வருஷம் உலக டேபிள் டென்னிஸ் போட்டி பம்பாயில் நடந்திருக்கிறது. இதனால் ஆசியாவில் டேபிள் டென்னிஸ் ஆட்டத்துக்கு அமோக ஆதரவு பெருகியது. ஜப்பான், கம்போடியா, பாகிஸ்தான், பர்மா, கொரியாக் குடியரசு ஆகியவற்றில் டேபிள் டென்னிஸ் கழகங்கள் உருவாயின. பம்பாயில் நடைபெற்ற உலகப் போட்டியில் ஜப்பானைச் சேர்ந்த ஸாட்டோ (Sato) சாம்பியனானார். சீனா முதல் தடவையாக உலகப் போட்டியில் பங்கேற்றது, பம்பாய் உலகப் போட்டியில்தான்!

ஜப்பானியர்களே டேபிள் டென்னிஸ் மட்டையில் ஸ்பாஞ்ச் ரப்பர் மட்டையைத் தோற்றுவித்து ஆட்ட நிபுணத்துவத்தில் புரட்சியை உண்டாக்கினர்.

1957ம் வருஷம் வரை உலக டேபிள் டென்னிஸ் போட்டி வருஷத்துக்கு ஒரு முறை நடைபெற்றது. அதிக நாடுகள் பங்கேற்றதால் இரண்டு வருஷங்களுக்கொரு முறை உலகப் போட்டி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

1961ம் வருஷம் பீகிங்கில் நடைபெற்ற உலக சாம்பியன் போட்டிக்குப் புதிய ஸ்டேடியமே கட்டி, அதில் 15,000 ரசிகர்கள் அமர்ந்து பார்த்தனர்.

சமீபத்தில் புதுடில்லியில் நடைபெற்ற ஒன்பதாவது ஆசியப் போட்டியில், சீனக் குழுவினரே நிறையத் தங்கப் பதக்கங்களைச் சூடிப் பெருமை பெற்றனர்.

தமிழ்நாடுதான் இந்திய சாம்பியன் பதவியைப் பெற்றிருந்தது. இந்த வருஷம் இந்திய டேபிள் டென்னிஸ் சாம்பியன் சந்திரசேகரை இந்தோரில் கமலேஷ் மேத்தா தோல்வியடைய வைத்திருக்கிறார். இருந்தாலும் பல பந்தயங்களில் சந்திரசேகர் முன்னணியில் இருப்பதால் தேசிய ராங்கிங்கில் சந்திரசேகரே முதலிடம் வகிக்கிறார்!

இந்தியப் பெண்கள் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்திய வீராங்கனை இந்துபுரி: முதல் ராங்கும் இவருக்குத்தான்!




இவர்கள் புகழ்பெற்றது– எந்த வயதில்?

- ✲ 7 வயதிலே கவிதை பாடத் தொடங்கி, புலவர்கள் கூடிய சபையிலே 'பாரதி' என்ற பட்டத்தை, நம் மகாகவி பாரதியார் பெற்ற போது அவரது வயது 11
- ✲ நோபல் பரிசுபெற்ற இரவீந்திரநாத தாகூர் அற்புதமான கவிதைகளை எழுதத் தொடங்கியபோது, அவருக்கு வயது 11
- ✲ பதினோராம் வயதிலே பாட்டுக் கட்டத் தொடங்கி 1300 வரிகளில் ஒரு நீண்ட கவிதையையும் 2000 வரிகளில் ஒரு நாடகத்தையும் சரோஜினி தேவி எழுதியபோது அவரது வயது 13
- ✲ மகாவீரர் அலெக்ஸாந்தர், தன் தந்தையின் கிரேக்கப் படைகளுக்குத் தலைமை ஏற்றபோது, வயது 16
- ✲ பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்தைப் பற்றி ஆராய்ந்து உண்மைகளை வெளியிட்டபோது கலிலியோவின் வயது 17
- ✲ வீரமங்கையாகிய ஜோன் ஆஃப் ஆர்க், தன் தாய் நாடாகிய ஃபிரான்ஸ் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றப் போரிலே ஈடுபட்டபோது வயது 18 – இறக்கும்போது வயது 19
- ✲ நீராவி மூலம் ஓடும் ரயில் என்ஜினை உருவாக்கியபோது ஜார்ஜ் ஸ்டீஃபன்சனுக்கு வயது 19
- ✲ கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்தபோது மார்க்கோனியின் வயது 21
- ✲ தமக்குப் புகழ் தேடித் தந்த 'பிக்விக் பேப்பர்ஸ்' எழுதி முடித்தபோது டிக்கன்ஸின் வயது 24
- ✲ பூமிக்கு ஆகர்ஷண சக்தி உண்டு என்பதை நிரூபித்தபோது, ஐசக் நியூட்டனின் வயது 24

– தொகுப்பு : ப்ரியா பாலு




பாரதியார்



தாகூர்



சரோஜினிதேவி



நியூட்டன்

நெடுங்கதை



ஜெயமணி காத்த மரகதச்சிலை

எஸ். ஆர். ஜீ. சுந்தரம்

மலையூர் ஓர் அழகான கிராமம். ஏழெட்டுச் சிறு குன்றுகளை ஒட்டினாற்போல் ஒதுக்குப்புறமாக அந்தக் கிராமம் அமைந்திருந்தது. அந்தக் குன்றுகளில் ஒரு குன்றுக்கு 'யானைக் குன்று' என்று பெயர். ஏன் தெரியுமா? தூரத்தில் நின்று பார்க்கும்போது பெரிய யானை ஒன்று கம்பீரமாக அமர்ந்திருப்பது போலத் தெரியும்.

அந்த யானைக் குன்றுக்குக் கீழே அழகான நடராஜர் கோயில் ஒன்று அமைந்திருந்தது. இந்தக் கோயிலுக்கு இரண்டு சிறப்பான அம்சங்கள் உண்டு. ஒன்று, இது ஏதோ ஒரு சோழ அரசனால் பலப்பல வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்டிருந்தது. அடுத்ததாகக் கோயிலின் கர்ப்பக்கிருகத்திலிருந்து கூத்தாடும் நடராஜரின் சிலை முழுவதும் விலை உயர்ந்த மரகதக் கல்லால் இழைக்கப்பட்டிருந்தது. இந்தச் சிலையின் மதிப்பு பல லட்சம் ரூபாய் இருக்குமாம். அக்கிராம மக்கள் அடிக்கடி அதைப் பற்றிப் பெருமையாகப் பேசுவார்கள். அதுமட்டுமல்ல, பார்ப்பவர் மனத்தையெல்லாம் பரவசப்படுத்தும் அற்புத வசீகரமுள்ளதாக அந்தச் சிலை அமைந்திருந்தது. கற்பூர ஒளி படும்போது மிகுந்த பளபளப்போடு ஒரு காலைத் தூக்கிய கோலத்தோடும் புன்சிரிப்போடும் காட்சி தரும் அந்த நடராஜப் பெருமானை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கத் தோன்றும்.

சிலையைப் போலவே கோயிலும் மிக மிக நேர்த்தியாக, கவர்ச்சியாகக் கட்டப்பட்டிருந்தது. கல் வளையச் சங்கிலிகள், வீணை ஒலியை எழுப்பும் மெல்லிய கல் தூண்கள், குளிர்நீர், வெந்நீர்ச் சுனைகள் இவை இக்கோயிலுக்குத் தனிப் பெருமை சேர்த்துக் கொண்டிருந்தன. அமெரிக்கா ஐரோப்பா போன்ற வெளி நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும், புதைபொருள் ஆராய்ச்சியாளர்களுக்கும் மலையூர் மாபெரும் விருந்தாக இருந்தது.

எல்லோரையும் விட, அந்த மலையூர் கிராமத்துச் சூழ்நிலையையும் கோவிலில் இருந்த நடராஜப் பெருமானையும் மிக மிக நன்றாக அனுபவித்து வந்தவன் அக்கிராமத்திலேயே பிறந்து வளர்ந்த சிறுவன் ஜெயமணிதான்! ஜெயமணிக்குப் பன்னிரண்டு வயதுதான் இருக்கும்.

தினமும் பள்ளிக்கூடம் போகும்போது மறக்காமல் கோயிலுக்கு வருவான். சுவாமியின் முன் கண்களை மூடிக் கைகளைக் குவித்து நின்று, தந்தைசொல் லித் தந்திருந்த சில துதிப் பாடல்களைப் பாடுவான். கோயில் குருக்களுக்கு ஜெயமணி மீது அலாதிப் பிரியம்!

மாலை வேளையிலும் கோயிலுக்கு வருவான் ஜெயமணி. பெருமானை வணங்கிவிட்டு, யானைக் குன்றின் மீது ஏறி உட்கார்ந்து, பள்ளிக்கூடப் புத்த கங்களைப் படிப்பான். அவன் சித்தப்பா அவனுக்குச் சமீபத்தில் பிறந்த நாள் பரிசாக ஒரு சக்தி வாய்ந்த பைனுக் குலரை அளித்திருந்தார். நான்கைந்து மைல் தூரத்தில் உள்ள இடங்களை யெல்லாம் அந்தப் பைனுகுலரில் பார்த் தால் மிக மிக அருகில் இருப்பதுபோல் தெரியும். தினம் ஒரு முறை அந்தப் பைனுகுலர் வழியாக மலையூரை ஒரு நோட்டம் விடுவான் ஜெயமணி. மலையூர்க் கிராமத்தின் எல்லைப் பகு திகள்,பசுமை படர்ந்த வயல் வெளிகள், கரும்புத் தோட்டங்கள், பூந்தோட் டங்கள், நடுநடுவே இருந்த சோளக் கொல்லைப் பொம்மைகள், தவழ்ந் தோடும்மேகங்கள்,கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்லும் பறவைக் கூட் டங்கள், நீர் நிறைந்த ஏரி, குட்டைகள் அவ்வூர்க் காவல் நிலையத்தை ஒட்டினாற் போல வெகு தூரத்தில் வளைந்து நெளிந்து ஓடும் சிற்றோடை — இத்தனை யும் பைனுக்குலர் வழியாகப் பார்க் கும்போது மிக அருகில்,சினிமா பார்ப் பது போலத் தெரியும்! அப்போது ஜெயமணியின் மனம் மகிழ்ச்சி வெள் ளத்தில் நீந்தும். பௌர்ணமி நிலவின் உதயத்தையும், சூரியன் மறையும் அழகையும், சதங்கை அணிந்த ஆடு மாடுகள்,செவிக்கினிய ஒலியை எழுப்பிக் கொண்டு மேய்ச்சலிலிருந்து திரும்பும் அழகையும் கூட அந்தப் பைனுக்குலரில் அவன் அடிக்கடி பார்த்துப் பரவசமடை வான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை!

''ஜெயமணி! ஜெயமணி!''

வீட்டின் பின்புறம் தன் துணி களைத் துவைத்துக் கொண்டிருந்த ஜெய மணி, குரல் கேட்டு வாசலுக்கு வந் தான்! அவன் கூடப் படிக்கும் நண் பன் சிங்காரம்தான் கையில் பெரிய காற்றாடி ஒன்றுடன் அங்கே நின்று கொண்டிருந்தான். ''வா ஜெயமணி! காற்றாடி விடலாம். காற்று நன்றாக அடிக்கிறது!'' என்றான் சிங்காரம்.

ஜெயமணி பதில் ஏதும் சொல்ல வில்லை.

''ஏன் ஜெயமணி பேசாமல் இருக் கிறாய்?''

''உன்மேல் கோபம்'' என்றான் ஜெய மணி.

''ஏன்?''

''நேற்று நம் பள்ளிக்கூட ஆண்டு விழாவின்போது தேசிய கீதம் பாடி னார்களே — அப்போது நீ எழுந்து நின்று மரியாதை கொடுக்காமல் விறு விறு வென்று வந்து விட்டாயே! இப்படிச் செய்வது தவறு என்று எத்தனை முறை



உனக்கு நான் சொல்லியிருக்கிறேன்!'' என்றான் ஜெயமணி சற்றுக் கோபமாக.

இதைக் கேட்ட சிங்காரம், ''ப்பூ! இதற்குத்தானா?'' என்று சொன்னபடி கேலியாகச் சிரித்தான்.


''என்ன சிங்காரம் கேலியாகச் சிரிக்கிறாய்? தேசிய கீதத்தை மதிக்கும் போதுதான் நாம் நம் தாய்நாட்டை நேசிக்கிறோம், மதிக்கிறோம் என்று அர்த்தம். வீட்டை நேசிப்பது போல் நம் நாட்டையும் நேசிக்க வேண்டாமா? மேல் நாட்டவர்கள் தங்கள் தேசத்தை நேசித்து உழைப்பதால்தான் அவர்களால் பெரிய பெரிய காரியங்களைச் செய்ய முடிகிறது; வானவெளியில் ராக்கெட்டுகளை அனுப்ப முடிகிறது என்றெல்லாம் நம் ஆசிரியர்கள் சொல்லவில்லையா? இனி நீ இப்படி நடந்து கொண்டால் உன் நட்பு எனக்கு வேண்டாம்'' என்றான் ஜெயமணி, குரலில் உறுதி தொனிக்க. இது போல் சிங்காரத்தின் தவறுகளை அவ்வப்போது ஜெயமணி கட்டிக் காட்டிச் சொல்வது வழக்கம்!

''சரி! அப்படியே நடக்கிறேன் வா. போகலாம்'' என்றான் சிங்காரம்.

தோய்த்த துணிகளை உலரப் போட்டுவிட்டு ஐந்து நிமிடங்களில் சிங்காரத்துடன் புறப்பட்டு விட்டான் ஜெயமணி. இருவரும் பேசியபடியே யானைக்குன்றை நோக்கி நடக்கத் தொடங்கினர். அங்கு தான் அவர்கள் பட்டம் விடுவது வழக்கம்.

''ஜெயமணி! நம்ம ஊர் சிற்றுக் கொட்டகையில் 'ஹெலிகாப்டர் திருடன்' என்று ஒரு சினிமா வந்திருக்கிறது. வருகிறாயா, பார்க்கலாம்?'' என்று கேட்டான் சிங்காரம்.

''ஹெலிகாப்டர் திருடனா? அந்தப் படம் முழுக்க முழுக்கத் திருட்டு வேலைகளையே காட்டும் படமாம்! நாம் அந்த மாதிரிப் படங்களைப் பார்ப்பதை விட, நல்ல சிறுவர் புத்தகங்களாக வாங்கிப் படிக்கலாம்! சிங்காரம், வாரா



வாரம் நீ படம் பார்க்கிறாய். இது கண்களுக்குக் கேடு. காசுக்கும் கேடு. நேரமும் வீணாகிறது. நமக்காகவே வரும் படங்களைப் பார்ப்பதுதான் நல்லது!'' என்று ஜெயமணி பேசிக்கொண்டே இருந்தபோது, பின்புறமிருந்து யாரோ பலமாகச் சிரிக்கும் சத்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். நல்ல உயரமாயும், வாட்ட சாட்டமாயும் அவர்கள் அருகில் வந்து கொண்டிருந்த ஒரு தடித்த மீசைக்காரன்தான் அப்படிச் சிரித்துக் கொண்டிருந்தான். நல்ல மல்லிகைப் பூ செண்டின் வாசனை அந்த மீசைக்காரனிடமிருந்து வந்தது.

''தம்பிகளா, பயப்படாதிங்க! என் சிரிப்பு அப்படித்தான் இருக்கும். ஏன் தம்பி உனக்குச் சினிமா பிடிக்காதா? 'ஹெலிகாப்டர் திருடன் படம்' நல்லாயிருக்கும் தம்பி! போய்ப் பாருங்க!'' என்றான் அந்த மீசைக்காரன்.

ஜெயமணி எதுவும் பேசாமல் அந்த ஆளை உற்றுப் பார்த்தான்.

''என்ன தம்பி அப்படிப் பார்க்கறே? நான் இந்தக் கிராமத்து ஆள்தான். சிலகாலம் வெளியூரிலே இருந்தேன். என் பேர் மாடசாமி. உன்னைத் தினமும் நான் கோவிலிலே பார்க்கிறேனே, நல்லாப் பாடறே தம்பி!'' என்றான் மாடசாமி சிரித்துக் கொண்டே.

''நீங்க அந்தப் படத்தைப் பார்த்துட்டீங்களா?'' என்று மாடசாமியைக் கேட்டான் சிங்காரம்.


''ஓ! நாலு தரம் பார்த்தாச்சு. வா, தம்பி! நானே காசு கொடுத்து உன்னைக் கூட்டிக்கிட்டுப் போறேன். இப்பவே கூடப் போகலாம், வா!'' என்று மாடசாமி சிங்காரத்தின் ஆசையைக் கிளறி விட்டான்.

''நீயும் வா, ஜெய மணி!'' என்று ஜெயமணியையும் கூப்பிட்டான் சிங்காரம்.

'''ஊஹூம். நான் வரவில்லை. நீயும் போகவேண்டாம்'' என்று தடுத்தான் ஜெயமணி.

சிங்காரம் கேட்கவில்லை. ''ஜெயமணி! நான் போய்விட்டு வருகிறேன். நீ என் வீட்டில் சொல்லிவிடு!'' என்றபடி சிங்காரம் காற்றாடியையும் நூலையும் ஜெயமணியிடம் கொடுத்து விட்டு மாடசாமியுடன் புறப்பட்டுவிட்டான்!

'ஹெலிகாப்டர் திருடன்' வெகு விறுவிறுப்பாக ஓடிக் கொண்டிருந்தது. திருடன் பல வழிகளில், பல இடங்களில் திருடுவதும், போலீஸ்காரர்கள் அவனைப் பிடிக்க முடியாமல் திணறு



வதும், சில இடங்களில் பிடித்துக் கோட்டை விடுவதுமாகக் கதை ஓடிக் கொண்டிருந்தது. சிங்காரம் பல இடங்களில் தன்னையும் மறந்து கைதட்டிக்கொண்டிருந்தான்.

இடைவேளை வந்தது. திடீரென்று சிங்காரம், ''ஐயோ! என் புதுப் பேனாவைக் காணோமே!'' என்று அலறினான்.

''சிங்காரம், இதற்கு ஏன் இப்படிப் பதறுகிறாய்? நான் விலை உயர்ந்த ஒரு புதுப் பேனாவை வாங்கித் தருகிறேன். உன் சட்டை கூட நன்றாக இல்லை. நல்ல சட்டையும் வாங்கித்தருகிறேன்'' என்றான் மாடசாமி.

மாடசாமியின் நட்புக் கிடைத்த பிறகு சிங்காரத்தின் நடை உடை பாவனை, பேச்சு எல்லாவற்றிலுமே விரும்பத் தகாத ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்ததை ஜெயமணியால் உணர்ந்து கொள்ள முடிந்தது. வர வர ஜெயமணியிடம் பேசுவதையும் பழகுவதையும் கூட சிங்காரம் நிறுத்திக் கொண்டிருந்தான்.

''சிங்காரம் ஏன் இப்படி மாறிவிட்டான்? மாடசாமி ஏன் இவனிடம் பாசமும் பரிவும் காட்டுகிறான்? மாட



ஓடைத் தண்ணீர் அந்த வழியே உள்ளே கசியத் தொடங்கியதைக் கவனித்த ஜெயமணி, உள்ளங் கைகளை ஓடையில் வைத்துப் பொத்தியபடி நின்றான். பாவம்!

• •

''ஸீஸர்! ஸீஸர்!''

மலையூர் காவல் நிலையத்தின் வாசலில் நின்று கொண்டு தமது நாயைத் தேடிக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் சிவபாதம். வழக்கமாக அவர் அந்த நேரத்தில்தான் ஸீஸரை அழைத்துக்கொண்டு மலையூர்க் கிராமங்களில் ரோந்து வருவார். முதலில் கோயிலுக்குச் சென்றுவிட்டுப் பிறகுதான் மற்ற இடங்களுக்குச் செல்வார். அவர் எந்த வேலையைச் சொன்னாலும் ஸீஸர் புரிந்து கொண்டு அதைச் செய்துவிடும்.

அன்று கூடத்தான் கோயிலுக்கு வரச் சற்றுத் தாமதமாகும் என்பதைக் கடிதத்தில் எழுதி, அதை ஸீஸர் மூலம் கோயில் குருக்களுக்கு அனுப்பி யிருந்தார். வெகு நேரமாகியும் ஸீஸர் வராமற் போகவே இன்ஸ்பெக்டர் சிவபாதத்துக்குக் கவலையாக இருந்தது. மறுபடியும் மறுபடியும் ''ஸீஸர்! ஸீஸர்'' என்று குரல் கொடுத்துக்கொண்டிருந்தார்.

ஸீஸர், இன்ஸ்பெக்டரின் கடிதத்தைக் குருக்களிடம் கொண்டு கொடுப்பதற்கு முன்புதான் சிலைத் திருட்டு நடந்திருந்தது. குருக்களைக் காணாமல் ஸீஸர் அவரைக் கோயிலுக்குப் பின்புறமாகச் சென்று தேடியது. அங்கே நாகலிங்க மரம் ஒன்றில் குருக்கள் கட்டப்பட்டிருந்தார். ஸீஸர் சில நிமிடங்களில் அவர் கட்டை அவிழ்த்தது. ஆனால், குருக்கள் மயங்கிய நிலையில் இருந்ததால் அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. உடனே ஸீஸர் காவல் நிலையத்தை நோக்கி ஓடியது.

ஸீஸர் காவல் நிலையத்தை நெருங்குவதற்கும் ஓடையில் ஜெயமணி மிதக்க விட்ட தேங்காய் ஓடுகள் மிதந்து வருவதற்கும் சரியாக இருந்தது. வரிசையாக வந்த தேங்காய் ஓடுகளை ஸீஸர் உற்றுப் பார்த்து மோப்பம் பிடித்தது. அதற்கு ஜெயமணியின் நினைவு வந்தது. உடனே மின்னல் வேகத்தில் ஒவ்வொரு தேங்காய் ஓடாக வாயில் கவ்விச் சென்று இன்ஸ்பெக்டர் சிவபாதத்தின் கைகளில் கொண்டு வந்து கொடுத்துவிட்டு வாலை ஆட்டிக்கொண்டு நின்றது.

துண்டுக் காகிதங்களைப் படித்த சிவபாதம் மின்னல் வேகத்தில் செயல்படத் தொடங்கினார். அருகிலிருந்த காவல் நிலையங்களுக்கெல்லாம் செய்தி அனுப்பினார். அடுத்த சில நிமிடங்களில் நான்கு ஜீப்புகள் அங்கே வந்து சேர்ந்தன!

• • •

நேரம் ஆக ஆக ஜெயமணிக்குப் பயமாகவும் கவலையாகவும் இருந்தது. ஓடைத் தண்ணீர் வேறு கொஞ்சம் கொஞ்சமாக அதிக அளவில் அந்த அறைக்குள் கசியத் தொடங்கி யிருந்தது. அநேகமாகத் தண்ணீர் அவன் பாதங்களை மூடிவிட்டிருந்தது.


அப்போது ஆகாயத்தில் ஏதோ சப்தம் கேட்கவே, ஜெயமணி சுறுசுறுப்பானான். பைனாக்குலரை எடுத்துப்

கழுத்திலே கேமிரா

அம்மா: ஏண்டா படுக்கப்போகும் போது கூட கழுத்திலே கேமிராவைத் தொங்கப் போட்டுக்கிட்டே படுக்கிறே?

மகன்: பாட்டி உயிரோட இருக்கும் போது, ஒரு போட்டோகூட எடுக்கல்லே. அதுதான் கனவிலே கண்டால், உடனே போட்டோ எடுத்திடப் போறேன்.

—கலையன்பன்



சாமி நல்லவனா? கெட்டவனா?'' என்பதை ஜெயமணியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

'ஒருவேளை, சிங்காரம் செய்யும்தவறுகளைத் தான் அடிக்கடி சுட்டிக் காட்டி அவனைத் திருத்த முயன்றதால், அவன் தன்னை வெறுக்கிறானோ?' என்றுகூட அவனுக்குத் தோன்றியது. நட்பின் நோக்கமே ஒருவருக்கொருவர் தவறுகளைச் சுட்டிக்காட்டி அவைகளைத் திருத்திக்கொண்டு வாழ்வில் முன்னேறுவது தானே? இது சிங்காரத்துக்குத் தெரியவில்லையே!

ஒரு நாள் மாலை—தென்றல் காற்று ஜில்லென்று வீசிக் கொண்டிருந்தது. ஜெயமணி யானைக் குன்றின் மீது நின்று கொண்டு பைனாக்குலர் மூலம் வழக்கம் போல் இயற்கை அழகுகளை ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது திடீரென்று—

ஜெயமணிக்குத் தேள் கொட்டியது போலிருந்தது. வெகு தொலைவில் ஓடையின் ஓரமாக இருந்த ஒரு பெரிய பாறை மீது மாடசாமியும் சிங்காரமும் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்தால் ஏதோ இரகசியம் பேசுபவர்களைப் போல் தெரிந்தது. மாடசாமி, நடராஜர் கோவிலையும், பக்கத்திலிருந்த புதரையும், வானத்தையும் சுட்டிக் காட்டியபடி சிங்காரத்திடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு விரும்பத்தகாத, திருட்டுத்தனமான செயலில் அவர்கள் இறங்கியிருப்பதை மட்டும் அப்போதைக்கு ஜெயமணியால் ஊகிக்க முடிந்தது. அன்றிரவு அவனுக்குச் சரியாகத் தூக்கம் கூட வரவில்லை.

•

மறுநாள் மாலை.

ஜெயமணிக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. ஜெயமணி அன்று வழக்கம்



பார்த்தான். அருகிலிருந்த ஒரு மண் மேட்டுக்குப் பக்கத்தில் ஹெலிகாப்டர் ஒன்று மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது. அதனை ஓட்டி வந்தவன் கறுப்புக் கோட்டும் சூட்டும் அணிந்திருந்தது நிலவொளியில் மிகவும் மங்கலாகத் தெரிந்தது.

தான் அனுப்பிய செய்தி போலீஸுக்கு எட்டியிருக்குமா என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. இன்னும் சில நிமிடங்களில் விக்கிரகம் ஹெலிகாப்டரில் ஏறிவிடுமே! எப்படியாவது அதைத் தடுத்து நிறுத்தவேண்டுமே என்று துடித்தான் ஜெயமணி. ஆனால், எப்படி முடியும், என்ன செய்வது என்று தெரியாமல் திணறினான். இப்போது அறைக்குள் கசிந்துகொண்டிருந்த நீர், அவன் முழங்கால் அளவுக்கு வந்திருந்தது. குகையின் தரைப் பகுதி வெளிப்புறம் மூடப்பட்டிருந்த பாறைப் பக்கமாகச் சரிந்தாற்போலிருந்தது. இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த ஜெயமணி சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவனாகக் கீழே இருந்த சிறு பாறையை எடுத்து ஓட்டையின் விளிம்பில் மோதி, அங்கிருந்த ஒரு பாறையைப் பெயர்த்து எடுத்தான். அவ்வளவுதான்! இடைவெளி பெரிதாகி ஓடைத் தண்ணீர் மடமடவென்று வேகத்துடன் குபுகுபுவென்று அறைக்குள் பாய்ந்து நிரம்பத் தொடங்கியது.

"நீர் மட்டம் நன்றாக உயர்ந்ததும் நீரின் அழுத்தம் அதிகமாகும். அந்த அழுத்தத்துடன் சேர்ந்து தானும் தன் பலத்தைக் கொண்டு வெளிப்புறப் பாறையைத் தள்ளிவிட்டுத் தப்பித்துவிடலாம். அதே சமயத்தில் குகையின் மற்றப் பகுதிகளைத் தண்ணீர் மூடிக் கொண்டால் விக்கிரகங்களைக் கடத்தும் வேலை தடைப்படும்" என்ற முன்யோசனையுடன்தான் அவன் அப்படிச் செயல்பட்டான். இப்போது நீர்மட்டம் அவன் தோள் பட்டையை மூடத் தொடங்கியிருந்தது. ஜெயமணி வெளிப் பாறையை முழு பலத்துடன் கைகளால் தள்ளிப் பார்த்தான். பாறை அசையவில்லை. ஜெயமணியும் தைரியத்தைக் கைவிடவில்லை. மேலே நீட்டிக் கொண்டிருந்த ஒரு பாறையை இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துத் தொங்கியபடி இரண்டு கால்களையும் மேலே தூக்கி வெளிப்புறப் பாறை மீது வைத்துத் தள்ளினான். முதல் முயற்சி தோற்கலாம். அடுத்தடுத்துச் செய்யும் முயற்சிகளுக்குத் தோல்வி ஏது? ஜெயமணி நினைத்தது போலவே பாறை விலகிப் பின்புறம் உருண்டது. அடுத்த வினாடி தண்ணீர், குகையின் மறு பகுதிக்குள் பாய்ந்து அங்கிருந்த விக்கிரகங்களையெல்லாம் மூடிக்கொண்டது. அப்போதுதான் விக்கிரகங்களை டார்ச் விளக்கின் ஒளியில் பார்த்துக் கொண்டிருந்த ஹெலிகாப்டர் மனிதனும் மாடசாமியும் தண்ணீர் உள்ளே பாய்ந்து வருவதைக் கண்டு திடுக்கிட்டனர். மடமடவென்று நடராஜர் விக்கிரகத்தை மட்டும் மணல் மேட்டருகே தூக்கிக் கொண்டு நடந்தனர்.

அச்சமயம் ஜீப் வரும் ஓசை கேட்கவே ஜெயமணி வெளியே ஓட்டை வழியே எட்டிப் பார்த்தான். இப்போதுதான் அவனுக்குத் தண்ணீரினால் ஆபத்தில்லையே! ஆனால், மாடசாமி திரும்பவும் வந்து தன்னை எதுவும் செய்து விடுவானோ என்ற அச்சத்தால் அந்த இடத்தை விட்டு வெளியே வராமலிருந்தான். இப்போது ஜீப் வரு

ஓடினானா?

"ஏங்க, உங்க பையன் வீட்டைவிட்டு ஓடிப்போயிட்டானாமே!"

"ஓடிப்போயிருக்க மாட்டான். நடந்து தான் போயிருப்பான். அவன் சுத்த சோம்பேறி."

—பா. தரணிதரன்



நம்மை மகிழ்விக்கும் தென்றல் காற்று, தெற்கிலிருந்து வீசுவதால் 'தென்றல்' என அழைக்கப்படுகிறது. வடக்கே இருந்து வீசும் காற்றுக்கு 'வாடை' என்று பெயர். கிழக்கே இருந்து வீசும் காற்றுக்குக் 'கொண்டல்' என்றும், மேற்கே இருந்துவரும் காற்றுக்குக் 'கோடை' என்றுப் பெயர்.

—கீதா பஞ்சு.



போல் யானைக் குன்றின் மீது இருந்து விட்டுக் கீழே இறங்கிக் கோயிலுக்குள் நுழைந்தபோது அங்கே மாடசாமியும், சிங்காரமும் அருச்சனைக் கூடையுடனும், பெரிய ரோஜா மாலையுடனும் வந்திருந்தனர். சிங்காரத்துக்குக் கடவுள் பக்தி கடுகளவும் இல்லை என்பதை ஜெயமணி அறிவான். அப்படிப்பட்டவன் இன்று மாடசாமியுடன் சாமி கும்பிட வந்திருக்கிறான் என்றால், ஆச்சரியமாகத்தானே இருக்கும்?

''என்ன சிங்காரம்! திடீரென்று கோவிலுக்கு வந்திருக்கிறாய்?'' என்று கேட்டான் ஜெயமணி.

சிங்காரத்தால் அதற்குச் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. அவன் முகமும் இருண்டாற்போல் இருந்தது. ''எனக்காகத்தான் தம்பி அருச்சனை செய்ய வந்திருக்கிறேன். ஒரு முக்கியமான வேலை ஆக வேண்டும்!'' என்று மாடசாமியே பதில் சொல்லி விட்டான்.

அருச்சனை முடிந்து அவர்கள் போய் விட்டார்கள். கோயில் குருக்கள் கோயிலில் கும்பலில்லாததால் அங்கிருந்த படிக்கட்டில் வந்து உட்கார்ந்து கொண்டார். ஜெயமணியும் அருகே உட்கார்ந்தான்.

''குருக்களையா! சிங்காரமும் மாடசாமியும் தினம் தினம் கோயிலுக்கு வந்து போகிறார்களா என்ன?'' என்று கேட்டான் ஜெயமணி.

''ஆமாம் ஜெயமணி! ஒரு வார காலமாக இவர்கள் தினமும் இங்கே வருகிறார்கள். பலமுறை பிராகாரத்தைச் சுற்றியபடியும், நடராஜப் பெருமானை அருகில் சென்று வணங்கிவிட்டும் போகிறார்கள்!'' என்றார், குருக்களின் பதில் ஜெயமணியை இன்னும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

கீழ்த் திசையில் அப்பொழுது முழு நிலவு உதயமாகிக் கொண்டிருந்தது. ''ஜெயமணி! இன்னும் நம் ஊர்க் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வரவில்லை. இந்நேரத்தில் தன் நாய் சீசருடன் அவர் இங்கு வருவது வழக்கம். இன்றைக்கு ஏன் தாமதம் என்று தெரியவில்லை!'' என்று சொல்லிக் கொண்டே இருந்த போது, கோயிலுக்குப் பின்புறமிருந்த தோட்டத்திலிருந்து ஏதோ சலசல வென்ற சத்தம் தொடர்ந்து கேட்டது.

''ஜெயமணி! பின்புறத் தோட்டத்தில் ஏதோ சத்தம் கேட்கிறது. பின் கதவு வழியாக மாடு ஏதாவது தோட்டத்திற்குள் புகுந்திருக்கும். நான் பார்த்துக் கதவைச் சாத்திவிட்டு வருகிறேன். நீ இங்கேயே இரு!'' என்று சொல்லிவிட்டுக் குருக்கள்தோட்டத்தை நோக்கி நடந்தார்.

குருக்கள் சென்றதும் சன்னிதிக் கதவருகே சென்று உட்கார்ந்து கொண்டான் ஜெயமணி. ஆடாது, அசையாது எரிந்து கொண்டிருந்த சரவிளக்குகளின் பொன்னொளியில் நடராஜரின் மரகத மேனி, எல்லையில்லாத அழகினை அள்ளி வீசியது. இருந்தாலும் நடராஜப் பெருமானின் குமிழ் சிரிப்புத் தான் ஜெயமணியின் இதயத்தை மிகவும் கவர்ந்தது. அப்போது 'சரசர' வென்று ஏதோ சத்தம் கேட்டதுபோல் இருக்கவே, சுற்று முற்றும் பார்த்தான் ஜெயமணி. மடித்தாற் போலிருந்த ஒரு வெள்ளைக் காகிதம் காற்றில் தரையோடு தரையாக நகர்ந்து நகர்ந்து ஜெயமணியின் காலடியில் உராய்ந்தபடிவந்து நின்றது. அதை எடுத்துப் பிரித்தான் ஜெயமணி! உள்ளே ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த சில சொற்களை அவனால் சுலபமாகப் படிக்க முடிந்தது.

''எமரால்ட் நடராஜ் — த்ரீ லாக்ஸ்— ஹெலிகாப்டர் — தேர்டு நைட் — பி ரெடி!'' — இதை அப்படியே தமிழ்ப்

படுத்திப் படித்துப் பார்த்தான் ஜெய மணி.

''மரகத நடராஜர் — மூன்று லட்சம்— ஹெலிகாப்டர் — மூன்றும் தேதி இரவு'' இதற்கு என்ன முழுமையான அர்த்தம்?

காகிதத்தை அப்படியும் இப்படியு மாகத் திரும்பியபோது அதிலிருந்து மல்லிகைச் சென்டின் மணம் வந்தது. மாடசாமி உபயோகிக்கும் அதே சென் டின் மணம்! அப்படியானல் மாட சாமிதான் அந்தக் கடிதத்தைத் தவற விட்டிருக்க வேண்டும். ஜெயமணி கடி தத்திலிருந்த குறிப்புகளை மறுபடியும் படித்தான். சிந்தித்தான். பொருள் இலேசாகப் புரிவது போல் இருந்தது. மரகத நடராஜர் விக்ரகத்தைத் திருடி, ஹெலிகாப்டரில் வரும் மனிதரிடம் கொடுத்து அதற்குக் கூலியாக மூன்று லட்சம் வாங்கப் போகிருனு இந்த மாடசாமி? ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும். அப்படியானல் அந்த ஹெலிகாப்டர் மனிதன் எப்போது வரு வான்? மூன்றும் தேதி இரவா? இருக் கலாம்!' என்று நினைத்தபடி எதிரே இருந்த நாட் குறிப்புக் காலண்டரைப் பார்த்தான். அவனுக்குப் பகீரென்றது. காரணம், அன்றுதான் மூன்றும் தேதி. என்ன அநியாயம் இது? விக்கிரகம் கடத்தவா இந்த மாடசாமி அடிக்கடி வந்து செல்கிறுன்? கூடாது, எப்படி யும் விக்கிரகத்தைக் காப்பாற்றிவிட வேண்டும் என்று தீர்மானித்த ஜெய மணி குருக்கள் வருகைக்காகக் காத் திருந்தான்.

''ஐயோ! ஐயோ!''

தோட்டத்திலிருந்து யாரோ அல றும் சப்தம் கேட்டது. அது குருக் களின் குரல் போலிருந்தது. ஏதோ சதித் திட்டம் நடக்கப் போகிறது என் பதை ஊகித்துக் கொண்ட ஜெயமணி கண்ணிமைக்கும் நேரத்துக்குள் சன் னிதிக்குள் பாய்ந்தோடிக் கதவுகளைச் சாத்த முயன்றுன். அதற்குள்—

கோயிலின் விளக்குகள் எல்லாம் அணைந்து இருளுக்குள் கோயில் மூழ்கி யது. இரண்டு முகமூடி உருவங்கள் ஜெய மணி மேல் பாய்ந்தன. கத்த முயன்ற ஜெயமணியின் வாயில் துணி ஒன்றை யாரோ வைத்துத் திணித்து அடைத்த னர். அவன் கைகள் கட்டப்பட்டன. கண்ணைத் திறக்க முடியாதபடி துணிக் கட்டுப் போடப்பட்டது. ஒரு முகமூடி உருவம் அவனைக் குண்டுக் கட்டாகத் தூக்கியபடி கோவிலுக்கு வெளியே ஓடி யது. இன்னொரு உருவம் சன்னதிக்குள் ஓடியது.



கேரா — தேங்காய்

நமது அண்டை மாநிலமாகிய கேரளாவுக்கு அப்பெயர் எப்படி வந் தது தெரியுமா? 'கேரா' என்றுல் தேங்காய் என்று பொருள். தேங் காய் அதிகமாக விளையும் பகுதி கேரளா எனப் பெயர் பெற்றது. இந்தியாவின் மொத்தத் தேங்காய் உற்பத்தியில் அறுபது சதவிகிதம் கேரளாவில்தான் உற்பத்தியாகிறது.

—கீதா பஞ்சு

மாடசாமிதான் தன்னைத் தூக்கிக் கொண்டு செல்கிறுன் என்பதை மல் லிகைப்பூச் சென்ட் வாசனையிலிருந்து சுலபமாகத் தெரிந்து கொண்டு விட் டான் ஜெயமணி.

''டேய் சிங்காரம், சீக்கிரம் வா! விக்கிரகம் பத்திரம்!'' என்று குரல் கொடுத்தான் மாடசாமி.

நொடியில் ஜெயமணிக்கு எல்லாம் விளங்கி விட்டது. மாடசாமி சிங்காரத் திற்குப் பரிவும் பாசமும் காட்டிப் பழகியதன் காரணம் இப்போது தெளி வாகி விட்டது.

''பாவம்! குருக்களை இந்தக் கொடி யவர்கள் என்ன செய்தார்களோ?'' என்று ஜெயமணி நினைத்துக் கொண் டிருந்தபோது மாடசாமி, அடர்ந்த புதர் ஒன்றின் பக்கத்தில் நின்று ஜெய மணியை இறக்கிவிட்டான். அந்தப் புத ரின் நடுவில் ஒரு பள்ளம்! ''ம்! கீழே இறங்கு!'' என்று ஜெயமணியை மிரட் டிப் பள்ளத்தில் இறக்கினுன். மாட

சாமி. பாறைகளால் அமைக்கப்பட்ட படிக்கட்டுகள் வழியாக மாடசாமி தன்னை அழைத்துச் செல்வதை உணர்ந்தான் ஜெயமணி. நடு நடுவே பின்புறமிருந்து சிங்காரமும் மாடசாமிக்கு இரகசியமாகக் குரல் கொடுத்தபடி வந்து கொண்டிருந்தான்.

ஒரு திருப்பத்தில் மாடசாமி நின்று இரண்டு கைகளாலும் ஒரு பெரிய பாறையை இலேசாக நகர்த்தினான். அப்போது 'கண், கண்' என்று வெண்கலச் சத்தம் வருவதை ஜெயமணி கேட்டான். ''அந்த ஓசை வெண்கலச் சிலைகள் மீது பாறை மோதுவதால் வரும் ஓசை போல் இருக்கிறதே! அப்படியானால் இந்த இடத்தில் மாடசாமி நிறையச் சிலைகளைக் கடத்தி வந்து பதுக்கி யிருக்கிறான் போலிருக்கிறது!'' என்றெல்லாம் ஜெயமணி சிந்தித்துக்கொண்டிருக்கும்போதே, தனக்குப் பின்னால் பாறை ஒன்று மூடப்படும் சத்தம் கேட்டது. மாடசாமியும் அருகில் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒற்றைக் காலை நீட்டியும் உதைத்தும் சுற்றுப்புறத்தைச் சோதித்தான் ஜெயமணி. தான் மிக மிகச் சிறிய குகை போன்ற குள்ளமான அறையில் அடைக்கப்பட்டிருக்கிறோம் என்று அவனுக்குத் தெரிந்து விட்டது. கால்களில் காய்ந்து போன தேங்காய் மூடிகள் பல இடறின. அங்கு காற்றே இல்லாததால் அவனுக்கு மூச்சுத் திணறத் தொடங்கியது. தான் சும்மா இருந்தால் சுவாசிக்கக் காற்றில்லாமல் உயிரை விட வேண்டியதுதான் என்பதை உணர்ந்து கொண்ட ஜெயமணி, கண்கட்டைத் தளர்த்தும் எண்ணத்தோடு தலையை அப்படியும் இப்படியும் பலமாக ஆட்டினான். அடுத்த வினாடி ''ஆ'' என்று அலறிவிட்டான். அவன் தலைக்கருகில் சுவரில் கத்தி போல் நீட்டிக்கொண்டிருந்த பாறையின் முனையில் அவன் நெற்றி நன்றாக அடிபட்டு விட்டது. ஜெயமணி மனம் தளரவில்லை. அந்தக் கூரான பகுதியைத் தன் மூக்கினால் மெதுவாகத் தடவிக் கண்டு பிடித்தான். பிறகு, கண் கட்டின் அடிப்பகுதியில் அந்தக் கூரான முனையைப் பொருந்தும்படி செய்து, கட்டை மேலும் கீழுமாக அசைத்தான். அவன் முயற்சி பலித்தது. கட்டு கொஞ்சம் கொஞ்சமாக அவிழ்ந்து விட்டது. அதே போல் கைக் கட்டையும் பாறையின் கூரான முனையில் பொருத்திப் பலம் கொண்ட மட்டும் ஆட்டிக் கட்டை அவிழ்த்து விட்டுக் கொண்டான். ஆனால் கண் தெரிந்தும் அவனால் எதையும் பார்க்க முடியவில்லை. ஊசியளவு வெளிச்சமும் இல்லாத சிறு அறை அது.

அவன் சத்தம் போட்டாலும் யாருக்கும் கேட்காது. அவனுக்கு அழுகை வரும் போல இருந்தது. அடக்கிக் கொண்டான். மூச்சுத் திணறியது. கண்கள் இருண்டன. ஒரு முறை நடராஜரின் ஆடும் அழகை மனக் கண் முன்னால் கொண்டு வந்து பார்த்தான். மரகதப் பச்சை ஒளி வீச நடுவில் நடராஜரின் குமிழ் சிரிப்பு — இதோ இப்பொழுது அவன் கண்களுக்கு எதிரே தெரிகிறது. அவனுக்கு மிக மிக அருகிலேயே அந்தச் சிரிப்பு 'பளிச்'சென்று தெரிவது போலிருந்தது.

ஜெயமணிக்குத் தான் காண்பது உண்மைதானா என்ற சந்தேகம் வந்தது. "தன் உயிர் போகும் சமயத்தில் தனக்கு நடராஜர் தரும் கடைசி தரிசனமா?'' என்று தோன்றியது. இதோ எவ்வளவு தெளிவாக அந்தப் புன்சிரிப்பு பச்சை ஒளிக் கிரணங்களாகத் தெரிகிறது!

ஜெயமணி மெதுவாகக் கையை நீட்டி அந்தப் புன்சிரிப்புத் தெரிந்த இடத்தைத் தொட்டுப் பார்த்தான். மிருதுவாக ஏதோ கையில் இடறியது. நன்றாகத் தொட்டுப் பார்த்ததும் அது ஏதோ ஒரு செடியின் வேர் போலத்

தாத்தாவுக்கு ½ டிக்கெட்!

ஸ்வீடன் நாடு, வயதானவர்களுக்கு ஒரு சொர்க்க பூமியாகவிளங்குகிறது. தாத்தா, பாட்டி எல்லோருக்கும் அரசு உதவிப் பணம் தருகிறது. ஹோட்டல்களிலும், தியேட்டர்களிலும் அவர்களுக்குப் பாதிக் கட்டணம் தான்! பஸ், ரயில், விமானம் எல்லாவற்றிலும் அவர்களுக்கு அரை சார்ஜ் தான்!

—அனிதா ராமச்சந்திரன்.



தெரிந்தது. உடனே ஏதோ முடிவுக்கு வந்தவனாக விரல்களால் வேரை விலக்கிப் பிரித்து இரு கைகளாலும் வேரின் முனைகளைப் பிடித்து உட்புற மாகவே இழுத்தான். என்ன அதிசயம்! ஒரு செங்கல் அளவுக்கு ஒரு சிறு பாறை பெயர்ந்து கீழே விழுந் தது. கூடவே ஒரு ஒளிக் கீற்று! அது நிலாவின் ஒளி!

"அப்பாடா!" என்றபடி சுவர் ஓர மாகச் சாய்ந்தபடி சில நிமிடங்களுக்கு மூச்சை இழுத்து விட்டுக் கொண் டான் ஜெயமணி. காற்றுப் பட்ட தால் உடலில் கொஞ்சம் உற்சாகம் பிறந்தது. ஓட்டை வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். நிலவு நன்றாகத் தெரிந்தது. ஓடையில் தண்ணீர் 'சல சல'வென்று ஓடிக் கொண்டிருந்தது. கையை நீட்டிப் பார்த்தான். ஓடைத் தண்ணீர் கைக்கு நன்றாக எட்டியது. உடனே கீழே இருந்த தேங்காய் மூடி ஒன்றை எடுத்து ஓடை நீரை அதில் எடுத்துத் தாகம் தீரக் குடித்தான். அந்த ஓட்டையைக் கொஞ்சம் கொஞ்ச மாகப் பெரிதாக்கித் தப்பி விடலாம் என்று முதலில் நினைத்தான் ஜெயமணி ஆனால், அப்படிச் செய்வதில் ஆபத்தும் இருந்ததை அவன் உணர்ந்தான். ஓட்டை பெரிதானவுடன் ஓடைத் தண்ணீர் ஓட்டைக்குள்ளே புகுந்து அவனை மூழ்கச் செய்து விட்டால்? நினைத்துப் பார்க்கவே அவனுக்குப் பய மாக இருந்தது.

என்ன செய்யலாம் என்று யோசித் தான் ஜெயமணி. பள்ளிக்கூடப் பையும் பைனாக்குலரும் தன் தோளிலேயே தொங் கிக்கொண்டிருந்ததை அப்போதுதான் கவனித்தான் ஜெயமணி. வேகம் வேக மாகப் பைனாக்குலரை எடுத்து அந்த ஓட்டை வழியாகப் பார்த்தான். சற் றுத் தூரத்தில் சவுக்குத் தோப்பும், சற்றுத் தள்ளி மலையூர் கிராமக் காவல் நிலையமும் நிலவின் ஒளியிலே தெரிந் தன. காவல் நிலையத்திற்கு எப்படி யாவது செய்தி அனுப்பி விட்டால் மரகத விக்கிரகத்தைக் காப்பாற்றி விட லாம் என்று தோன்றியது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் வளர்த்து வந்த ஸீசர் என்ற நாயைக் கூப்பிட்டுப் பார்க்கலாம் என்று முதலில் நினைத் தான். அது புத்திசாலித்தனமான நாய். சொன்னால் நன்றாகப் புரிந்து கொள்ளும். ஆனால் அவன் அப்படிக் கூப்பிடுவது மாடசாமியின் காதில் விழுந்துவிட்டால், நிலைமை மோசமாகி விடும் என்று பயந்து அந்த யோசனை யைக் கைவிட்டான். மறுபடியும் வெளி யில் எட்டிப் பார்த்தான். அந்த ஓடை காவல் நிலையம் சமீபமாகச் சென்று வளைவது அவன் நினைவுக்கு வந்தது. உடனே ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துச் சில தாள்களைக் கிழித்தான்.

ஒரு தாளில் "ஆபத்து! உதவி தேவை. நடராஜர் விக்கிரகம் கடத் தப்படுகிறது. இன்று நடு இரவில் ஹெலி காப்டர் வருகிறது. குருக்களுக்கு ஆபத்து! நான் குகையில் அடைக்கப் பட்டிருக்கிறேன். — ஜெயமணி" என்று மடமடவென்று எழுதி அதில் தேதியை யும் குறிப்பிட்டான். அதை நான் காக மடித்து, தேங்காய் ஓடு ஒன்றை எடுத்து நடுவில் வைத்து ஓடைத் தண் ணீரில் மிதக்க விட்டான். இப்படியே ஏழு ஓடுகளில் ஏழு கடிதங்களை எழுதித் தனித் தனியே ஒன்றன் பின் ஒன்றாக மிதக்க விட்டான்! ஒன்று தவறினால் ஒன்று யாரிடமாவது கிடைக்கும் என் பது அவன் எண்ணம். அதே நேரத்தில்



கணபதியும், ஆறுமுகமும்

உடன் பிறந்தார் இருவர். அவரது பெயர்கள் : கணபதி, ஆறுமுகம். ஆறுமுகத்திற்கு அண்ணன் கணபதி

ஆனால்,

கணபதிக்கு ஆறுமுகம் தம்பி அல்லன். பின் உறவு என்ன ?

விடை : தங்கை

நெல்லைச் சீமையில் கணபதி, ஆறுமுகம் என்ற பெயர் பெண்களுக்கும் உண்டு.

—சிவசக்தி



எந்த நாவல்?

''நாவல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம்''

''தமிழ் நாவலா? ஆங்கில நாவலா?''

''சரித்தான் போ. நான் நாவல் பழத்தையல்லவா சொல்கிறேன்?''

—அன்பிற்கினியவன்

வதை ஜெயமணி அந்தப் பெரிய ஓட்டை வழியே பார்க்க முடிந்தது. உடனே ஏற்கெனவே நனைந்து போயிருந்த தன் மேல் சட்டையைக் கழற்றிப் பிழிந்து பந்து போல் உருட்டி அப்பக்கமாக வந்து கொண்டிருந்த ஜீப்புக்குள் வீசி எறிந்தான். இதைக் கவனித்துவிட்ட இன்ஸ்பெக்டர் சிவபாதம் இரண்டு கான்ஸ்டபிள்களுடன் கீழே இறங்கி ஓடி வந்து ஜெயமணியின் கைகளைப் பிடித்துத் தூக்கி விட்டார்.

''இன்ஸ்பெக்டர் சார்! உடனே என்னோடு வாருங்கள். ஹெலிகாப்டர் வந்து நிற்கும் இடத்தைக் காட்டுகிறேன். விக்கிரகத்தை அவர்கள் எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள்!'' என்றபடி விடுவிடு என்று மணல் மேட்டின் பக்கமாக ஓடினான். துப்பாக்கி ஏந்திய கான்ஸ்டேபிள்களுடன் ஜீப்புகள் அவனைத் தொடர்ந்தன.

மாடசாமி ஹெலிகாப்டர் மனிதன் கொடுத்த மூன்று லட்ச ரூபாயைச் சரி பார்த்துக் கொண்டிருந்தான். ஹெலிகாப்டரின் மேல் விசிறி விர்ரென்று சுழன்று விண்ணை நோக்கி எழும்பியது.

அடுத்த விநாடியே—

'டுமீல் டுமீல்' என்று துப்பாக்கிகளின் வெடிச் சத்தம் கேட்டது. ஹெலிகாப்டரின் மேல்விசிறி தனியே சுழன்று கீழே விழுந்தது. நான்கு பக்கத்திலிருந்தும் போலீஸ் ஜீப்புகள் மாடசாமி, சிங்காரம், அவர்களின் கையாட்கள் ஹெலிகாப்டர் மனிதன் எல்லாரையும் சூழ்ந்து கொண்டன! அப்போதுதான் கோயில் குருக்களையும் கூட்டிக் கொண்டு அங்கே வந்தது லீஸார்.

மரகதச் சிலையை மீட்டு எல்லோரையும் ஜீப்பில் ஏற்றிய பிறகு, இன்ஸ்பெக்டர் சிவபாதம் ஜெயமணியை அப்படியே வாரி அணைத்துக் கொண்டார்.

வருகின்ற குடியரசு தினத்தன்று ஜெயமணிக்கு இளம் பாரத வீரனுக்கான சிறப்பு விருது வழங்கப் போகிறார்கள்! நீங்களும் தவறாமல் வந்து பாருங்கள்!



தேவாரத்தைப் பற்றிய குறிப்பு

தமிழ் ஆசிரியர்: (செய்யுள் வகுப்பில்) 'தேவாரம்' இதைப்பற்றிச்சிறு குறிப்புச்சொல்.

மாணவன்: (போலீஸ்காரரின் மகன் மறதியாக) W. I. தேவாரம் என்பவர் பெரிய போலீஸ் அதிகாரி. போலீஸ் துறை பயிற்சிக்காக ஆஸ்திரேலியா போய்விட்டு வந்தார். வீரச்செயல்கள் புரிந்து பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

—G. குமரேசன்

குப்புசாமி, அப்புசாமி

அழ.வள்ளியப்பா



அப்புசாமி:

குப்பு சாமி, குப்பு சாமி,
சப்ப ரத்திலே
சுப்ர மணிய சாமி வருது;
தொழுகப் புறப்படு.

குப்புசாமி:

சுப்ர மணிய சாமி பார்த்தால்
சுண்டல் கிடைக்குமா?
அப்பம், வடை, முறுக்கு எல்லாம்
அங்கே கிடைக்குமா?

அப்புசாமி:

சாமி பார்க்க அழைத்தால், உடனே
தினி கேட்கிறாய்!
சரிதான் உனக்குத் தின்பண்டங்கள்
வாங்கித் தருகிறேன்.

குப்புசாமி:

அதிகத் தூரம் செல்வ தானால்
காலே வலிக்குமே!
ஆட்டோ ஒன்றில் ஏறிச் சென்றால்
நன்றா யிருக்குமே!

அப்புசாமி:

அருகில் உள்ள கோயில் செல்ல
ஆட்டோ கேட்கிறாய்!
ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டும்
தண்ட மல்லவா?

குப்புசாமி:

அதுவும் சரிதான்; ஆட்டோ வுக்கு
ஐந்து கொடுப்பதா!
அந்தப் பணத்தைக் கொண்டு நாமும்
ஒன்று செய்யலாம்.

அப்புசாமி:

என்ன செய்ய வேண்டும் என்று
எனக்குச் சொல்கிறாய்?
உண்டி யலிலே போட லாமா?
உடனே சொல்லிடு.

குப்புசாமி:

அப்பம், வடை வாங்கி வந்தால்
அந்தப் பணத்திலே,
சுப்ர மணியர் பெயரைச் சொல்லிச்
சொல்லித் தின்பேனே!

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543) Editor: K. Rajendran


வெற்றி பெற்றோம் இருவரும்
விரைந்து கைகள் தட்டுங்கள்
புகைப்படம்:
கோவி சஞ்சீவி
நாகப்பட்டினம்

Regd. No. TN MS (E) 231

சிறப்பான வட்டி விகிதம்!



உங்கள் முதலீட்டுத் தொகையில்
65% வட்டியாக திரும்பப் பெற்றிடுவீர்!
ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா!!

லக்ஷ்மி கிருபா டெபாசிட் திட்டத்தில்
மாதம் ரூ.100/-வீதம் 60 மாதங்கள் செலுத்தி அதன் பின்
24 மாதங்கள் கழித்து திரும்பப் பெற்றிடுங்கள் :-

ரூ.9943

உங்கள் வசதிக்கும்,
தேவைக்கும் ஏற்ப
சந்தாவையும், கெடுவையும்
தேர்ந்தெடுக்க எங்கள்
கிளைக்கு இன்றே
விஜயம் செய்யுங்கள்

லக்ஷ்மி விலாஸ்
பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: கரூர்-639 001
நிர்வாக அலுவலகம் : சென்னை-600 086

என். முத்தியாலு,
சேர்மன்.

அன்னியச் செலாவணியில் வர்த்தகம் செய்ய அங்கீகாரம் பெற்ற வங்கி.